விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை (13.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 298

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## வளமான நாட்டை உருவாக்க முன்னின்று செயற்படுவேன்

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

சிறந்த வளமான நாடொன்றை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பை நிறைவேற்ற தாம்தயாரென ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தூரநோக்கு சிந்தனை இன்றிய ஆட்சி காரணமாக நாட்டின் பொருளாதாரம் தற்போது வீழ்ச்சி 15

## அனைத்து மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையே எனது எதிர்பார்ப்பு

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

ஜனாதிபதியான பின்னர் நாட்டில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும், திருப்திகரமாகவும் வாழ்கின்றார்களா என்பது குறித்து அடிக்கடி மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் 15

*3 துப்பாக்கிகளுடன்*

## மல்லாவியில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - மல்லாவி, பொன்னகர் பிரதேசத்தில் 3 துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மல்லாவி பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு 15

## தமிழ் அரசியல்வாதிகளே தமிழரின் பிரச்சினையை திசை திருப்புகின்றனர்



### ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் ரீதியிலான கோரிக்கைகள் நியாயமானவையே ஆனால் மக்களை வைத்து அரசியல் செய்யும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களின் கோரிக்கைகளை திசை திருப்புகின்றனர். தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க தமிழ் மக்களுடன் நேரடியாக பேசவே முயற்சிக்கின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவன் ஒருவன் நேற்று சனிக்கிழமை வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த தவராசா 15

## தேர்தலில் ரெலோ, புளொட் எங்களையே ஆதரிக்கும்

### மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன தங்களையே ஆதரிக்குமென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கை சேர்ந்த அரசியல்வாதிகள் யாருக்கு ஆதரவு வழங்கவுள்ளார்கள் என்பது குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர், 15

## மல்லாகத்தில் கிணற்றிலிருந்து

*ஆணின் சடலம் மீட்பு*

(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாக நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள கிணற்றுக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மல்லாகம் - குளமங்கால் பகுதியை சேர்ந்த 40 15

## யாருக்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கவில்லை

### மாவை சேனாதிராசா



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. 15

*சிறுபான்மை மக்களின் வாக்குகளை பிரிக்கவே*

## ஜனாதிபதித் தேர்தலில் சில வேட்பாளர்கள் திட்டமிட்டு களமிறக்கப்பட்டுள்ளனர்

### நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே திட்டமிட்டு ஜனாதிபதித் தேர்தலில் சிலர் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண 15

## வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழாவில்

*7 பேரின் சங்கிலி திருட்டு*

(கரணவாய்)

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழாவில் ஏழு பேரின் தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. 15

*திருமலையில் கைதானவரிடம் மேற்கொண்ட விசாரணையில்*

## கிளிநொச்சி அம்பாள் குளத்தில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளத்தில் அமைந்துள்ள வீட்டில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது பெருமளவான ஆயுதங்கள் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், 15

## வவுனியாவில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது, வவுனியா, கனகராயன்குளம், குறிசுட்டகுளம் சந்தியில் பயணித்த துவிச்சக்கர 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (628)

**077 210 6155** **221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**


# யாழ்.இந்துக் கல்லூரிக்கு பதில் அதிபர் நியமனம்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அதிபர் வெற்றிடம் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரமுடைய ரட்ணம் செந்தில்மாறன் பதிலதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்தை மத்திய கல்வியமைச்சு வழங்கியுள்ளது. யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான செந்தில்மாறன் மத்திய கல்வியமைச்சில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-03)


## மணமகள் தேவை

லண்டன் பிரஜாவுரிமை கொண்டவர் (தாரம் இழந்தவர்) வரன் ஒன்றை எதிர்பார்க்கிறார்.

தொடர்புக்கு:- (631)

**0775939760, 0773868806**

## பழுது பார்த்தல்

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் (refrigerator, washing Machine) என்பன திருத்திக் கொடுக்கப்படும். (626)

தொடர்புகளுக்கு:- **0760092064**


# யாழ்.கல்வி வலயத்தின் முழுநிலாக் கலைவிழா இன்று

யாழ்ப்பாணக் கல்வி வலயம் நடத்தும் முழு நிலா கலைவிழா இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் நடனம், நாட்டியம், இசை, நாடகம் எனப் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


தீபாவளியை முன்னிட்டு

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Web design*
- Video Editing
- Desktop Publishing-DTP*
- Hardware & Network Technician
- MS Office - CAA
- AutoCAD
- Revit

50% கட்டண கழிவு*

(621)

கே.கே.ஸ் றோட், தட்டார்தெரு சந்தியில்

*DTPE CAMPUS*

புதிவுகளுக்கு 0214680964, 0775001244

## பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் வெளிக்களம் (ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் உள்ளகம் (பெண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (பெண்கள்)

### தகைமை

க.பொ.த உயர்தரம் தோற்றியிருத்தல்
01.01.2019 இல் 25 வயதைப் பூர்த்தி செய்திருத்தல்.

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் இத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பெயர்களை பதிவு செய்யவும்.

**076 097 3127**

இல.3, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர் வலம்புரி

## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு, மார்பு, கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றுக்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு:- **Shan's Health Care** (515)

225, K.K.S Road, Kokuvil. T.P:0770357307

## வேலையாள் தேவை

அப்பம் போடுபவர்
உணவு பரிமாறுபவர் (ஆண், பெண் இருபாலாரும்)
விற்பனையாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
காசாளர் (பெண்கள் மட்டும்) (627)

**தொ.இ:077 465 2860**

100% Money back Guarantee

## தீபாவளியை

முன்னிட்டு சிறப்பு 60% சலுகை!

## EASY WAY SPOKEN ENGLISH

கொழும்பிலே பிரபலமான Dr.K.Dinesh இன் வகுப்புக்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மட்டும்

இலங்கையிலே கட்டண மீள் செலுத்தும் உத்தரவாதத்துடன் மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசக் கற்பிற்கும் ஒரே ஆசிரியர்

உங்களை வெற்றிகரமான, நிருபிக்கப்பட்ட, தனிச்சிறப்பான கற்பித்தல் முறை மூலம் ஆங்கிலத்தில் தடையின்றிபேச வைப்பதுடன், பிழையின்றி எழுதவும் ஒருவர் ஆங்கிலத்தில் பேசும் போது இலகுவாக விளங்கிக்கொள்ளச்செய்யவும் முடியும்.

உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாமல் இருப்பதற்கான தடைகள் முதல் வகுப்பிலேயே உடைக்கப்படும். உங்களாலும் ஆங்கிலத்தில் பேசமுடியும் என்பதை முதல் வகுப்பிலேயே உணர்ந்து கொள்வீர்கள்.

பாடநெறி முடிவில் உங்களை ஆங்கிலத்தில் பேசச்செய்ய முடியாவிடின் முழுப் பாடநெறிக்கட்டணம் திருப்பித்தரப்படும்.

COURSE Diploma in English - ~~25,000/=~~ 10,000/=

**DTPE CAMPUS PVT LTD**
NO: 925, KKS ROAD, JAFFNA.(தட்டாதெருச் சந்திக்கு அருகில்) Next to Multi Farm.

24 YEARS of Teaching Experience



Dr. K. B. Dinesh (GDA - Acu- New Zealand)
0766998906, 0766428906 (621)



ஸ்ரீ காளி தேவஸ்தானம்



மலையாள மாந்திரீகம்

"உங்கள் தேவைகள் நியாய முறையில் பூர்த்தி செய்து தரப்படும்"

தொடர்பு-076 8450057
070 4009494
076 0369123

குமாரபுரம்
முள்ளியவளை (7881)


# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி

**மலர்வு - 12.08.1955** **உதிர்வு : 10.10.2019**



பள்ளம்புலம் சரவணையை பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில்கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி ஆனந்தசோதி அவர்கள் 10.10.2019 வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பாலலோசனி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கமலபூரணத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் நல்லையா ஆனந்தசோதி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாசுகி, வாகீசன் மற்றும் பிரகீசன், வானுஜி, கஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகஜனின் அன்பு மாமியாரும் ஸ்ரீவர்மனின் பாசமிகு பேர்த்தியும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பரம்சோதி மற்றும் இராஜேஸ்வரி, சிவசோதி, காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஞானபண்டிதசோதி, ஈஸ்வரகௌரி, சிவகாமஈஸ்வரி, திருவருட்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரவணை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (622)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:- குடும்பத்தினர்
T.P- 077 336 2640 (கணவர்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2019ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த யா/ நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை மாணவன் செல்வன் **தி.ஹரிபிரசாத்** (158 புள்ளிகள்) அவர்களையும் செல்வன் **வி.ஜதுர்சன்** (148 புள்ளிகள்) அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன்

அவர்கள் கல்வியில் மேன்மேலும் சிறப்புக்கள் பெற விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.



செல்வன் **வி.ஜதுர்சன்**

செல்வன் **தி.ஹரிபிரசாத்**

(632) வாழ்த்துவோர்:- அமுதர் ஐயா குடும்பம்,மானிப்பாய்.





வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

(படங்கள்:-மகாலிங்கம்)

# புலிகளுக்கு எதிராகப் போரிட அரசே ஆயுதம் வழங்கியது

## ஹிஸ்புல்லா பகீர் தகவல்

(காத்தான்குடி)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போரிட அரசாங்கமே ஆயுதம் வழங்கியது என ஜனாதிபதி வேட்பாளர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.**

காத்தான்குடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'1990இல் விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை விரட்டியடிக்க முயன்றபோது, துப்பாக்கிக் குண்டுகளின் மத்தியிலும், கண்ணிவெடிகளின் மத்தியிலும் நின்று அரசாங்கம் தந்த ஆயுதங்களை கொண்டும், பாதுகாப்பு படைகளுடன் சேர்ந்தும் மட்டக்களப்பில் முஸ்லிம்களை பாதுகாத்தோம்.

ஆகவேதான் இன்றும் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்கின்றோம்.

முஸ்லிம்களிடம் 16 இலட்சம் வாக்குகள் உள்ளன. 2015இல் 12இலட்சம் வாக்குகளை மைத்திரிக்கு அளித்தார்கள். ஒரு இலட்சம் வாக்கைத்தான் மகிந்தவிற்கு அளித்தார்கள்.

2015இல் பெரும்பாலான 2.5 இலட்சம் வாக்குகளை கொடுத்து நன்மைகளை பெற்ற நாம், 2015 இல் மைத்திரி, ரணிலுக்கு 12



இலட்சம் வாக்குகளை கொடுத்து பெற்ற நன்மைகள் என்ன?

19ஆவது திருத்தம் வந்தால் நாட்டிற்க்கு கேடு. பாரிய அச்சுறுத்தல் என நாம் சொன்னோம். ஆனால் கொண்டு வந்தார்கள். இன்று ஜனாதிபதி உள்ளிட்ட எல்லோரும் சொல்கிறார்கள், 19ஆவது திருத்தம் தவறு என.

நாட்டில் குண்டுகள் வெடித்தமைக்கு காரணம் என்ன? 19வது திருத்தம் தான். ஒரு நாட்டின் பிரதமரை அழைக்காமல், பொலிஸ்மா அதிபரை அழைக்காமல் பாதுகாப்பு சபை கூட்டத்தை கூட்டினால், அது நாடா? 19வது திருத்தத்தால் நடந்தது இது.

உலகம் முழுவதும் ஜனாதிபதி ஆட்சி முறை இருப்பது சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பிற்காகத்தான். சஜித்தோ, கோத்தாவோ ஜனாதிபதியாக வேண்டுமென்றால் முஸ்லிம்களிடம் வர வேண்டும். முஸ்லிம் வாக்கில்லாமல் யாரும் ஜனாதிபதியாக வர முடியாது.

கடந்தமுறை நானும் மைத்திரியை ஆதரித்திருந்தால், நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றிருப்பேன்.


ஆனால், அரசியலென்பது பதவிகளல்ல. மக்களுக்கு வழிகாட்டுவது. தேர்தலில் தோல்வியடைந்தேன். அல்லா என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினார்.

தேர்தலில் வென்று வந்த அமீர் அலி, ஹரீஸ் போன்றவர்கள் பிரதியமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்ய பின் வரிசையில் உட்கார்ந்திருக்க, இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து அல்லா என்னை முன்வரிசையில் உட்கார வைத்தார்' என ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு புதிய ஸ்கானர் கையளிப்பு







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்பில் கொள்வனது செய்யப்பட்ட **(160 Slice CT scanner)** 160 சிலைவஸ் சி.ரி.ஸ்கானர் (கணனி வழி உடலுறுப்பு ஊடு கதிர்ப்படக் கருவி) உத்தியோக பூர்வமாக நேற்றுக் கையளிக்கப்பட்டது. 112.5 மில்லியன் ரூபாய் செலவில் கொள்வனது செய்யப்பட்ட குறித்த கருவிக்கு எஸ். றஞ்சன் 46 மில்லியன் ரூபா எஸ். கதிர்காமநாதன் 20 மில்லியன் ரூபா பி.நந்தபாலன் 13 மில்லியன் ரூபாவை வழங்கியதோடு ஏனைய கொடையாளர்களும் பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நாடு திரும்பினார் கோத்தா

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

கோத்தபாய, வைத்திய சிகிச்சைக்காக அவரது குழுவினருடன் கடந்த 10 ஆம் திகதி சிங்கப்பூருக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# "இலங்கை இந்து தேசிய மகாசபை" யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கை இந்து தேசிய மகாசபை அமைக்கப்பட வேண்டி தமிழ் முற்போக்கு கூட்டணி-ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன் சமர்ப்பித்த பத்திரத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் என்ற முறையில் என்னால் அமைச்சரவையால் முன்வைக்கப்பட்ட இலங்கை இந்து தேசிய மகாசபை அமைவு தொடர்பான பத்திரம் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி, இந்நாட்டில் இந்து சமய விவகாரங்கள் தொடர்பில் தேசியரீதியாக ஒன்பது மாகாணங்கள், அனைத்து மாவட்டங்கள், அனைத்து பிரதேச செயலக பிரிவுகள் என்ற அடிப்படைகளில் நாடு தழுவிய வலைப்பின்னல் அமைப்பு சட்டப்படி உருவாக்கப்படும்.

நாடெங்கும் பிரதேச, மாவட்ட சபைகள் உருவாக்கப்பட்டு, அவற்றில் இருந்து தேசிய சபை உருவாக்கப்பட்டு முழு நாட்டிலும் வாழும் இந்துக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், ஒரு சமச்சீரான அணுகு முறையையும், அதேவேளையில் ஏனைய சகோதர மதத்தவருடன் இணக்கப்பாட்டையும் இலங்கை இந்து தேசிய மகாசபை ஏற்படுத்தும்.

இதில், நாடெங்கும் உள்ள இந்து மத குருமார்கள், ஆலய அறங்



காவலர்கள், அறநெறி பாடசாலைகள், இந்துக் கல்லூரிகள், இந்து சமூக அமைப்புகள் ஆகிய ஐந்து இந்து மத தூண்களும் கூட்டிணைக்கப்படும். இந்து மதம் தொடர்பில் அதிகாரபூர்வமாக இந்த நிறுவனம், இலங்கைக்கு உள்ளேயும், வெளிநாடுகளிலும் இலங்கை இந்து மதத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவின் நினைவாக
பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட

**கவிதைப்போட்டி முடிவுகளும் பரிசில் வழங்கும் நிகழ்வும்**

இடம் :- இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
காலம்:- 20.10.2019
நேரம் :- மு.ப.9.00 மணி

**1ஆம் இடம்**

*அம்பலவாணர் கௌரிதாசன்*
[திருகோணமலை]

**2ஆம் இடம்**

*செல்வி பிரியங்கா உருத்திரகுமார்*
[கோண்டாவில்]

**3ஆம் இடம்**

*திருமதி தங்கராசா இராஜராயேஸ்வரி*
[குப்பிளான்]

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

திரு. மாணிக்கம் பஞ்சலோக ரஞ்சன்
மானிப்பாய்
செல்வி காயத்திரி கண்ணன்
யாழ்ப்பாணம்
திருமதி சண்முகராசா மணிமேகலை
கிளிநொச்சி
திரு. நி.லவநிதன்
கொக்குவில்
திருமதி ச.கிறிஷாந்தி
மட்டக்களப்பு
திரு. செங்கதிர்ச்செல்வன் சேந்தன்
சாவகச்சேரி
செல்வி ற.கீர்த்திகா
யா/இணுவில் இந்துக்கல்லூரி
திருமதி ஆரணி முகுந்தன்
நீர்வேலி
செல்வி கஜனி இளங்கோ
அச்சுவேலி
செல்வன் யூலியஸ் தனிஸ்ரன்
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
திரு. கணபதி பேரின்பநாயகம்
யாழ்ப்பாணம்
திரு. அமிர்தலிங்கம் சுஜீவன்
கோப்பாய்
திரு. சிதம்பரப்பிள்ளை சிறிரகுராம்
பருத்தித்துறை
செல்வி ஜீவசங்கரி தயாசீலன்
மட்டக்களப்பு
திரு. கி.குலசேகரம்
கரவெட்டி
திரு. நடராசா கண்ணதாஸ்
வேலணை
செல்வி போகநிலாஞ்சலி பாலசுப்பிரமணியம்
நல்லூர்
செல்வி நிசாந்தி செல்வநாதன்
நீர்வேலி
திரு. உதயதரன் பவனிதரன்
இணுவில்
திரு. தம்பிராசா பரமலிங்கம்
வண்ணார்பண்ணை
திருமதி சசிகலா தயானந்தன்
மட்டக்களப்பு
திரு. தியாகராசா ஸ்ரீகந்தராசா
வேலணை

இப்போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். 20.10.2019 அன்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நீராவியடி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொண்டு தங்களுக்கான பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்

பொன்மணி அறக்கட்டளை நிறுவனம்
டென்மார்க்

(625)

# இந்தியா அணிக்கெதிரான டெஸ்டில் தென்னாபிரிக்கா 275 ஓட்டங்கள் குவிப்பு!



இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய நேற்றைய ஆட்டநேர முடிவில், தென்னாபிரிக்கா அணி, அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 275 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்படி, இந்தியக் கிரிக்கெட் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், தென்னாபிரிக்கா அணி 326 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

புனேவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இந்தியா அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 601 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இதில் இந்தியா அணி சார்பில், ரோஹித் சர்மா 14 ஓட்டங்களையும், மாயங் அகர்வல் 108 ஓட்டங்களையும், புஜாரா 58 ஓட்டங்களையும் பெற்று முதல் நாளில் ஆட்டமிழந்தனர்.

இரண்டாவது நாளில், விராட் கோலி ஆட்டமிழக்காது 254 ஓட்டங்களையும், அஜிங்கியா ரஹானே 59 ஓட்டங்களையும், ஜடேஜா 91 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், கார்கிஸோ ரபாடா 3 விக்கெட்டுகளையும், கேசவ் மஹாராஜ் மற்றும் செனுயூரன் முத்துசாமி ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினார்.

இதனை தொடர்ந்து முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில், 275 ஓட்டங்களை பெற்றது.

இதில் தென்னாபிரிக்கா அணி சார்பில், டீன் எல்கர் 6 ஓட்டங்களுடனும், எய்டன் மார்கிரம் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், டெம்பா பவுமா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தெயூனிஸ் டி பிரையுன் 30 ஓட்டங்களையும், என்ரிச் நோர்ட்ச் 3 ஓட்டங்களையும், டு பிளெஸிஸ் 64 ஓட்டங்களையும், குயிண்டன் டி கொக் 31 ஓட்டங்களையும், செயூரன் முத்துசாமி 7 ஓட்டங்களையும் கேசவ் மஹாராஜ் 72 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். வெர்னொன் பிளெண்டர் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இந்திய அணியில் பந்துவீச்சில், அஸ்வின் 4 விக்கெட்டுகளையும், உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுகளையும், மொஹமட் ஷமி 2 விக்கெட்டுகளையும், ஜடேஜா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

போட்டியின் நான்காவது நாளான இன்று, இந்தியா அணி துடுப்பெடுத்தாடுமா அல்லது தென்னாபிரிக்க அணியை போலே ஒன் முறையில் துடுப்பெடுத்தாட அழைக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

# பாகிஸ்தான் வீரர்கள் மல்யுத்தத்திற்கு தயாராகி வருகிறார்கள்

## -முன்னாள் வீரர் அமிர் சொஹைல் கடும் தாக்கு



உடற்தகுதியில் அக்கறை காட்டும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மல்யுத்தத்திற்கு தயாராகி வருகிறார்கள் என முன்னாள் வீரர் அமிர் சொஹைல் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி பாகிஸ்தான் சென்று மூன்று ஒருநாள் மற்றும் மூன்று ரி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியது. ஒருநாள்தொடரை பாகிஸ்தான் 2-0 எனக் கைப்பற்றியது.

ஆனால் ரி20 கிரிக்கெட் போட்டியில் நம்பர் ஒன் அணியான பாகிஸ்தானை 3-0 என துவம்சம் செய்தது இலங்கை அணி. சமீப காலமாக உடற்தகுதிக்கு முக்கியத்தும் கொடுக்கும் பாகிஸ்தான் அணியை முன்னாள் தொடக்க வீரர் அமிர் சொஹைல் கடுமையான சாடியுள்ளார்.

இதுகுறித்து அமிர் சொஹைல் கூறுகையில் "பாகிஸ்தான் கிரிக்கெட் தற்போதைய நாட்களில் உடற்தகுதி மீதுதான் கவனம் செலுத்துகிறது. நாம் கிரிக்கெட்டிற்கு வீரர்களை தயார்ப்படுத்துவதைக் காட்டிலும், ஒலிம்பிக் அல்லது WWE Wrestling போட்டிக்கு அதிக அளவில் தயாராக்குகிறோம் என்பதை இது காட்டுகிறது" என்றார்.



இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

திருநெறிய தமிழ்மறைக் கழகம்
அறநெறிப் பாடசாலை நடாத்தும்

**திருமுறைப் பண்ணிசையும் கலை விழாவும் - 2019**


காலம் :- 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணி
இடம் :- கோவில் கல்யாண மண்டபம்
ஆசியுரை :- ஆலயப் பிரதம குருக்கள்
வாழ்த்துரை :- பேராசிரியர் க.தேவராசா அவர்கள்
(தலைவர் சுற்றுலாப் பணியகம் வடமாகாணம்)
பிரதம விருந்தினர்:- திருமதி வேணுகா சண்முகரட்ணம் அவர்கள்
(முன்னாள் அதிபர், யா/வேம்படி அரசினர் மகளிர் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்:- திருமதி S.கிரியா அவர்கள்
(அபிவிருத்தி உத்தியோகத்தர் - இந்து கலாசாரம், உடுவில்)
கௌரவ விருந்தினர்:- திரு.சு.கணேசலிங்கம்
(ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
தலைவர் :- திரு.ச.முகுந்தன் அவர்கள் (ஆசிரியர்)

ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான தங்கப்பதக்கம், வெள்ளி, வெண்கலம் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(C-7890)



# யா/வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தீர்த்தோற்சவ சிறப்பிதழ்-13.10.2019

## அவதாரமாய் அவதரித்து அருளாட்சி செய்கின்ற அச்சுதனே அவதார புருஷனே வணங்குகிறோம் உன் அடியை

சரித்திர பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமியின் கொடியேற்றம் கடந்த செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்திருவிழாக்களில் முக்கியமானதும் சிறப்பாகவும் விளங்குவது சமுத்திர தீர்த்தத்திருவிழா ஆகும்.

சரித்திர வரலாற்று ரீதியான இத் திருவிழாவுக்கு இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் பெரும் திரளான் மக்கள் கூடுவார்கள். இத்திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்று மாலை எம்பெருமான் கற்கோவளம் கடற்கரைக்கு தீர்த்தமாடுவதற்கு செல்வார்.

பக்தர்கள் சூழ்ந்திருக்க மாயவன் சக்கரத்தை கற்கோவளம் பக்தர்கள் தோளிலே காவிக்கொண்டு சங்கு, சக்கரம், மாயவா, கேசவா, வைகுந்தா, நாராயணா, கண்ணா கோவிந்தமலையைக் கையிலே கொண்டு கற்கோவளத்தில் மச்சவதாரம் என கோஷங்கள் எழுப்பியவாறு காவிச்செல்வார்கள்.

கற்கோவளம் கடலில் சந்திரன் உதயமாகும்போது மாயவனின் சமுத்திரத்தீர்த்தம் நடைபெறும். இக் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்கு மக்கள் சமுத்திரம் திரண்டிருக்கும். சமுத்திரத் தீர்த்தத்துக்கும் வல்லிபுர சுவாமி கோவில் தோன்றியமைக்கும் சரித்திர வரலாறு கூறுவதாவது. கற்கோவளம் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருப்பவர்களின் வலைகளில் மீன் ஒன்று பிரவேசித்து வலைகளைப் பிய்த்தது. கோலாகலமாக துள்ளி விளையாடியது.

இக் காட்சியை ஆனந்தத்தோடு மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். மீன் பிடித்தவர்கள் ஆத்திரமுற்று மீனைப் பிடிக்க முயன்றனர். ஆனால் அம் மீன் பிடிகொடாது எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக ஒரு பெண்ணின் மடியில் வீழ்ந்தது. அப் பெண் லவல்லி எனும் பேர் உடையவராவார். அப் பெண்ணின் மடியில் இருந்த மீன் பிள்ளை போல் தோன்றியது. லவல்லியும் சந்தோசமடைந்து அப் பிள்ளையை அணைத்தபடி ஒரு மர நிழலில் அமர்ந்து சயனிக்கச் செய்தார்.

பின்பு ஒரு பல்லக்கில் வைத்து லவல்லி எனும் வல்லி நாச்சியுடன் அப்பிள்ளையை தாங்கிச் சென்றனர். களைப்படைந்த அவர்கள் களைப்பாற்றுவதற்கு ஒரு இடத்தில் பல்லக்கை இறக்கினார்கள். மீண்டும் செல்வதற்கு பல்லக்கை தூக்க முடியவில்லை. அவர்கள் பல்லக்கை ஆச்சரியத்துடன் பார்த்த போது குழந்தை சக்கரமாக காட்சியளித்தது. எல்லோரும் மாயவனின் சக்கரத்தை வணங்கினார்கள். அன்று தொட்டு இன்று வரை இந் நிகழ்வை குறிக்கும் முகமாக சமுத்திரத் தீர்த்தத் திருவிழா கற்கோவளம் மக்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

எமது வல்லிபுரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் சகல மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் மாயவரின் ஆழித் தீர்த்தம் இன்று நடைபெறுவது இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். நாம் அனைவரும் பக்தி சிரத்தையுடன் பங்கு கொண்டு வல்லிபுரநாதனின் திருவருள் பெறுவோமாக.

சாமஸ்ரீ தேசமானிய Lion த.ஜெயரூபன் சமாதான நீதவான்,
கணக்காய்வாளரும், வருமானவரி ஆலோசகரும், மதங்களுக்கிடையிலான
சமாதான அமைப்பு மற்றும் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின்
உறுப்பினர் சமூக சேவையாளர் கற்கோவளம்.

## சமுத்திரத் தீர்த்தம் பிரதான குருமார்களின் நல்லாசிகள்

சுப மங்களகரமான விகாரி புரட்டாதி 11 ஆம் நாள்(28.09.2019) சனிவாரம் எம் பெருமான் ஸ்ரீ வல்லிபுர மாயவனின் மஹோற்சவத்தின் கொடியேற்றம் ஆரம்பமாகி இன்று சரித்திர பிரசித்தி வாய்ந்த சமுத்திர ஆஞ்சநேய தீர்த்தம் நடைபெறுகின்றது. (புரட்டாதி 26 ஆம் நாள் ஞாயிறுவாரம்) 13.10.19 காத்தற் கடவுளான எம்பெருமான் ஸ்ரீ வல்லிபுர சக்கரரூப மாயவனின் அருள் நிறைந்த ஆசிகளையும் எமது நல்லருள் ஆசிகளையும் மிக்க மகிழ்வுடன் கூறிக் கொள்கின்றோம்.

அனைத்து மக்களும் சாந்தி சமாதானமாக ஒற்றுமையுடன் நலம் பல பெற்று நீடூழி வாழ எம் பெருமானைப் பிரார்த்தித்து வணங்கி ஆசி கூறுகின்றோம்.

சர்வம் கிருஷ்ணார்ப்பணம்
பிரம்மஸ்ரீ.ச.க.சுதர்சனக் குருJ.P
பிரம்மஸ்ரீ.சுதர்சன கணபதீஸ்வரக்குரு
மஹோற்சவ குருவும்
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தம குரு J.P
பிரதான குருமார்கள்.

ஸ்ரீ ஆழ்வார் பீடம்
ஸ்ரீவல்லிபுரக் கோவில்
புலோலி.

### பறந்தோடி வருவாய் நீயே...

கருநீல நிறமேனிக் கண்ணா என்று
காத்தருளும் தெய்வமுனைப் போற்றுகின்றோம்
பெருமானே வல்லிபுரப் பதியில் நின்று
பாம்பணையிலே ஆயின்று படியளக்கும்
திருமாலே! அலங்காரப் பிரியனான உந்தன்
நீராடுங் காட்சிதனைக் காண விரும்பும் பாருளோர்
மகிழ பரந்தாமா! பாற்கடல் வண்ணா!
பறந்தோடி வருவாய் நீயே.

மு.தனிகாசலம் கலாபூஷணம் கற்கோவளம்.



நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சிறீ சுசீலா
நகைமாளிகை
239, பிரதான வீதி, பருத்தித்துறை
தொ.பே:- 021 226 1003


அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு
சரவணா
மகாலட்சுமி
தங்கமாடம்
இல.93, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே: 021 321 4577

விக்னேஸ்வரா
திருமண மண்டபம்
யாழ்.பிரதான வீதி, வல்வை.
தொ.பே. : 021 226 1567
Room, Hall A/C Facility
Conference Hall With, 200 Seating Capacity


தரமான 22
கரட் தங்க நகைளுக்கு
நாட வேண்டிய இடம்
வைஷ்ணவி
நகைப்பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே :-
021 226 4519

சிறீரங்கம்
ரெக்ஸ் ரைஸ்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி,
NTB வங்கிக்கு அருகில்
கிளை 1 வதிரி வீதி, உடுப்பிட்டி.


தரமான 22 கரட் தங்க
நகைகளுக்கு தரன்
நகைமாளிகை
ம.ம.வி.வீதி, நெல்லியடி
தொ.பே. : 021 321 9254
கிளை 1:
தரன் நகை மாளிகை
பிரதான வீதி,
பருத்தித்துறை.


நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் நகைகளுக்கு
நாட வேண்டிய இடம்
சுசீலா
ஆபரண மாளிகை
இல. 258, பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே. : 021 226 3064
நியூ சுசீலா ஆபரண மாளிகை
இல. 228, பிரதான வீதி, பருத்தித்துறை
தொ.பே. : 021 226 4154



யாழ்ப்பாணம் - நல்லூர் ஈழத்து சீரடி சாய் ஆலய தேர்த்திருவிழா நேற்றுக் காலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# தொழில் வெற்றிடங்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்கி தொழில் வாய்ப்பற்றோர் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் தொழில் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்கு அமைய, நாடு முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள தனியார் கம்பனி ஒன்றின் 300 வரையிலான தொழில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இந் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள விரும்பும் க.பொ.த. சாதாரண தரம்வரை கல்வி கற்றவர்கள், மற்றும் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் கற்றவர்கள் 18-27 வயதிற்குட்பட்ட பெண்கள் மற்றும் 18-40 வயதிற்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகள் மேற்படி நேர்முகத்தேர்வில் பங்குபற்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மேலதிக விளக்கங்கள், அறிவுறுத்தல்களை 021 221 9359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாக பெற்றுக்கொள்ளலாம் எனவும் யாழ். மாவட்ட மேதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அறிவித்தார். (இ-5)

# ஆளுநர்கள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடமேல் மாகாண ஆளுநர் பேசல ஜெயரத்ன பண்டார வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார். (இ-5)

# அரச காணியில் குடியிருந்தவர்களை வெளியேறுமாறு நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் அரச காணியில் குடியேறிய குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது. போர்ச்சூழல் நிலவிய காலத்தில் குறித்த பகுதியிலுள்ள 5 ஏக்கர் காணியில் சிறப்பு அதிரடிப்படையினர் தங்கியிருந்தனர்.

2015 ஆம் ஆண்டு அங்கிருந்து அதிரடிப்படையினர் வெளியேறியதையடுத்து காணியில்லாத 63 குடும்பங்கள் அங்கு குடியேறியிருந்தன.

இந்நிலையில் அந்தக்காணியில் குடியேறியுள்ள தமிழ்க்குடும்பங்களை வெளியேற்றுமாறு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே அத்துமீறி குடியேறிய அனைவரையும் வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# கரவெட்டி விதாதா வள நிலையத்தில் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி கரவெட்டி விதாதா வள நிலையத்தால் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

பயனாளிகள் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதால் பயனாளிகள் தமது சுயவிபரத்தை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் "விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர், விதாதா வள நிலையம், பிரதேச செயலகம், கரவெட்டி" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 746 6067, 077 186 9015 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் அறிவித்தார். (இ-5)

# அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை பொது தொழிலாளர் யூனியனின் தலைவரும் கூட்டுத்தொழிற்சங்கத் (புத்தளம், காலி, காங்கேசன்துறை) தலைவருமாகிய ச.கணபதிப்பிள்ளையின் அஞ்சலிக்கூட்டம் இன்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தொழிற்சாலை அன்னதான மண்டபத்தில் (மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி க.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறும். (இ-5)

# நூல் கட்டும் பயிற்சி முகாம்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்குமான நூல் கட்டும் பயிற்சி முகாம் ஒன்றை சாவகச்சேரி பொது நூலகத்தினர் ஏற்பாடு செய்தனர்.

வீட்டிலுள்ள நூலகங்களைப் பராமரிக்கும் முகமாகவும் வீட்டில் நூலகங்களை உருவாக்கும் ஆர்வத்தை வளர்க்கும் முகமாகவும் குறித்த பயிற்சியை வழங்க நூலகத்தினர் திட்டமிட்டனர்.

பயிற்சி முகாமில் பங்குகொள்பவர்களுக்கு தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வான பரிசளிப்பு விழாவின் போது சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படும் எனவும் எனவே இப் பயிற்சி முகாமில் பங்குபற்ற விரும்புவோர் சாவகச்சேரி பொது நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் பயிற்சிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகும் எனவும் அறிவித்தனர். (இ-5-30)

## இராசி பலன்

**13.10.2019**

புரட்டாதி 26, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

பூரணை பின்னிரவு 3.06 மணிவரை

உத்திரட்டாதி முற்பகல் 9.17 மணிவரை

சுபநேரம் 9.02-10.32 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

பூரணை விரதம்

வளவன்

கிரகநிலை: சந், ராகு, சனி, கேது, குரு, சுக், புத, சனி, செவ்

சந்திராஷ்டமம்: அத்தம்

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஒளிமயமான எதிர்காலம் அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய் விருப்பமொன்று நிறைவேறலாம்.

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**சிம்மம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது å_ém, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத் காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**விருச்சிகம்:** இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மகரம்:** உடன் பிறப்புக்கள் வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நன்மைகள் நடைபெறும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள்.

**மீனம்:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்ல விதமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1 ஆம் பாதம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில் தனியார்வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ.இ: B/10146 | பிறப்பு: 1979இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3 ஆம் பாதம்<br>கி.பா: 45 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6205 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2 ஆம் பாதம்<br>கி.பா:16½<br>உயரம்:175 cm<br>தகைமை/தொழில்:H.N.D.E Engineering Executive (Dialog)<br>எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10147 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூனர்பூசம் 2 ஆம் பாதம்<br>உயரம்: 5'6"<br>கி.பா: 55 செவ்.8 இல்<br>தகைமை/தொழில்: B.A<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் வியாபாரம்<br>தொ.இ: G/6211 |
| பிறப்பு: 1995இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1 ஆம் பாதம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில் : இயந்திர வல்லுநர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் (கடைா,லண்டன்) வெளிநாட்டில் வசிக்கும் பெண் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10149 | பிறப்பு: 1987இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்<br>கி.பா: 2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.A<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் வியாபாரம்<br>தொ.இ: G/6112 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1ஆம் பாதம்<br>கி.பா: 34½ செவ். 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் : BBM Business Management Caccounting and finance (Special) D.O<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ளபெண்<br>தொ.இ: B/10050 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3 ஆம் பாதம்<br>கி.பா:28 ¼<br>உயரம்:150 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6114 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# டெங்குக் காய்ச்சலால் 11 வயதுச் சிறுவன் மரணம்

(மாத்தளை)

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 11 வயது பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவமொன்று கடந்த 10ஆம் திகதி மாத்தளையில் இடம்பெற்றது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குறித்த சிறுவன் 8ஆம் திகதி மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து 10ஆம் திகதி கண்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டான்.

இந் நிலையிலேயே சிகிச்சை பலனின்றி அன்றைய தினம் இரவே உயிரிழந்தான்.

குறித்த சிறுவன் 4ஆம் தரத்தில் கல்வி கற்று வந்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மணமக்கள் தேவை

ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்காவில் உள்ள மணமகன்மாருக்கு இலங்கையிலுள்ள மணமகள்மார் தேவை. சூரியன்+செவ் விரும்பத்தக்கது. சைவ மணமக்கள் தேவை.

Viber: 0094767250144
Call: 076 725 0144, 076 034 0514

(620)



## Job Opportunity

### பணியாளர்கள் தேவை

தொழில்நுட்பம் தொடர்பான
வாடிக்கையாளர்கள் சேவை (Call Center)

**தகைமைகள்:**

❖A/L சித்தி அல்லது அதற்கு மேலான உயர்கல்வி
❖கணனி அறிவு (Computer Knowllge)
Advance Knowllge
❖ஆங்கில அறிவு (English Knowllge)
Read/ Wright/ Spoken Advance Level

Address: 125, Main street, Jaffna.



சுயவிபரக்கோவையை அனுப்ப வேண்டிய முகவரி:
Email: hr@ innsys.ca

தொடர்புகளுக்கு:
021 222 1244, 071 864 3232


# உலக சைவத் தமிழர்களின் புனித தாயகம் திருவண்ணாமலை

கிரிவலம் 13.10.2019

## புரட்டாதி மாத புனிதங்கள்

### நினைத்தாலே பேரின்ப பெருவாழ்வு



வருடத்தின் 12 மாதங்களுக்கு சிறப்பான புனிதங்கள் உண்டு. இப்புனிதங்களை முன்னிட்டு மக்களை ஊக்குவித்து புண்ணியர்களாக்கி மேன்மைப்படுத்தும் தன்மை நம் சைவ சமயத்துக்கு உண்டு. இக்கருத்தையே மணிவாசகர் திருப்பள்ளி எழுச்சியில் "இந்தப்பூமி சிவன் உய்யக் கொள்கிற ஆறு" என்று பாடியருளியுள்ளார். இந்தப் புண்ணிய காலங்களில் அறிவுபூர்வமாகவும் சிரத்தையுடனும் ஈடுபட்டு மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களையும் தூய்மைப்படுத்தி ஆன்மாவை வலிமைப்படுத்தினால் புலன்கள் இழுக்கும் இழுப்பில் செல்லாமல் அறிவின் வழிச் செல்லும் ஆற்றல் ஆன்மாவுக்கு உண்டாகும். புரட்டாதி மாதத்தில் வரும் மகாளயபட்சமும் - நவராத்திரியும் வலிமைமிக்க புண்ணிய காலங்களாகும். இவற்றுடன் புரட்டாதிச் சனிக்கிழமைகளும் புரட்டாதியில் திருப்பதியில் நிகழும் பிரமோற்சவமும் புண்ணியவான்கள் மனதைக் கவரும் நிகழ்வுகளாகும்.

புரட்டாதி மாதத்தில் வரும் பூரணை "பாகுனி விரதநாள்" என்றும் குறிப்பிடுவர். சிவபெருமான் திரிபுர தகனம் செய்தது போல விநாயகப் பெருமானும் திரிபுர தகனம் செய்தவர் என்றும் விநாயகப் பெருமான் திரிபுர தகனம் செய்த தினத்தைப் புரட்டாதிப் பூரணையன்று "பாகுனி விரதநாள்" என அனுஷ்டிப்பர் என்ற கருத்தும் உண்டு. இது பலரால் அறியப்படாமலும் அனுஷ்டிக்கப்படாமலும் உள்ளது.

இவற்றுள் புரட்டாதி மகாளய பட்சத்தை பற்றி அறிந்த பலர் சிரத்தையோடு பின்பற்றுகின்றனர். அறியாத பலர் அக்கறையின்றி உள்ளனர். இப்படி அக்கறையின்றி உள்ளமைக்கு பிதிர் பற்றிய விளக்கக்குறைவே காரணம் எனலாம்.

செயலாளர் சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

(C-7880)

077 378 3316

# இந்திய அமைதிப் படையின் முதலாவது தமிழினப் படுகொலையின் 32 ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில், பிரம்படிப் படுகொலையின் 32 ஆவது நினைவேந்தல் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களாலும் அப்பகுதி மக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தலில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987 ஆம் ஆண்டு அமைதிப் படை என்ற போர்வையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திறங்கிய இந்தியப் படையினர் பல்வேறு படுகொலைகளை அரங்கேற்றியிருந்தனர்.

இப்படுகொலைகளில் முதலாவதாக 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படியில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள், துப்பாக்கியால் சுட்டும், கவச வாகனம் (செய்ன்பிளக்) கொண்டு வீதியில் போட்டு நசித்தும் படுகொலை செய்யப்பட்டனர்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவத்தின் முதலாவது தமிழினப் படுகொலை சம்பவமாக பிரம்படிப் படுகொலை பதிவாகியிருந்தது. இந்நிலையில் பிரம்படி சந்தியில் உயிரிழந்தவர்களின் நினைவாக சிறிய நினைவுத் தூபியொன்று அமைக்கப்பட்டது. குறித்த நினைவுத்தூபியிலேயே நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கர்நாடக சங்கீத வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் கர்நாடக சங்கீத வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

வட இலங்கை சங்கீத சபையின் பாடத்திட்டத்திற்கு அமைவாக இவ்வகுப்புக்கள் இடம்பெறுகின்றன. இதில்வயலின், வீணை ஆகிய நுண்கலை வகுப்புக்களும் அடங்கும்.

சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் இவ்வகுப்புக்களில் மாணவர்கள் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது. (இ-5)

# காணாமல் போனோரின் குடும்பத்திற்கு 10 இலட்சம் கொடுக்க வலியுறுத்துவோம்

## கோத்தாவுக்கு வரதரின் கட்சி ஆதரவு



(ஏறாவூர்)

காணாமல் போனவர்களுக்கு சில குறிப்பிட்ட நாடுகள் கொடுத்த 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை பகிர்ந்தளிக்கும் வகையில் தலா ஒரு குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபாய் நட்ட ஈடை வழங்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் வலியுறுத்துவோம் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள வொய்ஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எங்களுடைய கட்சியாகிய தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆதரவளிக்கிறது. சிங்கள மக்கள் மத்தியிலிருந்து 65 சதவீத வாக்குகளைப் பெற்று அவர் ஜனாதிபதியாக வருவார் என பல கருத்துக் கணிப்புக்கள் காட்டுகின்றன. அதேபோல மலையக மக்கள் மத்தியில் இருந்து 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளையும் அவர் பெறுவார்.

முஸ்லிம் மக்களிடமிருந்து மிகக் கணிசமான அளவு வாக்குகளைப் பெறுவார் என்பதுடன் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களும் இன்றைய காலத்தின் தேவையையும் அரசியல் ரீதியாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்படுகின்ற மாற்றங்களையும் கருத்தில் எடுத்து மிகப் பெருமளவில் தாமரை மொட்டுக்கு வாக்களிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தால் கவிதை, கட்டுரை, சித்திரம், சிறுகதை மற்றும் இலக்கியநயம் ஆகிய ஆக்கங்கள் கோரப்பட்டன.

சாவகச்சேரி நகரின் தொன்மை, நாகரிகம், கலாசாரம், தென்மராட்சியின் பிரபல்யமான இடங்கள், சுற்றுலா மையங்கள், கோவில்கள் ஆகியன பற்றியும் பிரபலமானவர்கள், எழுத்தாளர்கள், துறை சார்ந்தோர் சாவகச்சேரி மண்ணிற்கு ஆற்றிய பங்களிப்பு தொடர்பாகவும் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தல், பொலித்தீனுக்கான மாற்றீடு தொடர்பாகவும் சாவகச்சேரி நகரத்திற்கு உட்பட்ட கிராமங்களுக்கான பெயர்கள் உருவானதற்கான காரணங்கள் தொடர்பாகவும் ஆக்கங்கள் கோரப்பட்டன.

அத்துடன் ஆக்கங்கள் தொடர்பான புகைப்படங்கள், புள்ளி விபரங்கள், வரைபடங்கள் மற்றும் வேறு ஆதாரங்கள் இருப்பின் அதனையும் ஆக்கங்களோடு எதிர்வரும் 20/10/2019 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சாவகச்சேரி பொது நூலகத்தில் ஒப்படைக்குமாறு நூலகர் கேட்டுக்கொண்டார். சிறந்த ஆக்கங்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும் எனவும் ஆக்கங்கள் சாவகச்சேரி பிரதேச எல்லைக்குட்பட்டதாக அமைய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-30)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

## சீன ஜனாதிபதி-இந்தியப் பிரதமர் சந்திப்பு





(சென்னை)

சீன ஜனாதிபதி சி ஜின்பிங்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பு நேற்றுக் காலை கோவளத்தில் அமைந்துள்ள தாஜ் பிஷர்மேன் கோவ் ஹோட்டலில் குண்டு துளைக்காத கண்ணாடிப் பேழை அறையில் இடம்பெற்றது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பிற்காக சீன ஜனாதிபதி சி ஜின்பிங் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்னையை சென்றடைந்தார். இதன் போது சீன ஜனாதிபதி சி ஜின்பிங்க்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய உடையில் சீன ஜனாதிபதியை வரவேற்ற இந்திய பிரதமர் மோடி தமது டுவிட்டர் பக்கத்தில் "அதிபர் ஷி ஜின்பிங் அவர்களே! இந்தியாவிற்கு வருக வருக என்று வரவேற்கிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார். (ஜ)

## தொழிற்கல்விக் கண்காட்சியும் தொழிற்சந்தை நிகழ்வும் யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் அரச தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் தொழிற்கல்விக் கண்காட்சியும் தொழிற்சந்தை நிகழ்வும் - 2019 இல் நடத்தவுள்ளன.


எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 19 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் பிறவுண்வீதி தொழில்நுட்பவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 110 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 280 | 260 | 400 |
| தக்காளி | 160 | 140 | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 | 80 |
| கோவா | 100 | 140 | 120 | 80 | 120 |
| கரட் | 120 | 140 | 140 | 120 | 120 |
| பூசணி | 100 | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 130 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 180 | 150 | 240 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | 180 | 205 | 200 |
| பாகற்காய் | 300 | 360 | 300 | 260 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 180 | 100 | 140 | 160 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 120 | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 250 | 240 | 180 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 240 | 150 | 180 | 200 |
| போஞ்சி | 240 | 200 | 220 | 210 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | – | 80 | 80 |
| கீரை -1பிடி | 40 | 20 | 60 | 50 | 40 |
| தேசிக்காய் | 250 | 300 | 300 | 260 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | – | – | 250 | 150 | – |
| வெங்காயப்பூ | 300 | – | – | – | – |
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 150 | 80 |

# சிறையிலுள்ள இராணுவத்தினரை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கோத்தா வழியில் ஞானசாரர் கோரிக்கை



(கொழும்பு)

**குற்றமிழைக்காமல் சிறைக்குச் சென்ற இராணுவத்தினரை விடுவிக்க இந்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்தார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கணடவாறு கூறினார். "ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் தொடர்பாக மக்கள் சிந்தித்தே செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களைப் பொறுத்தமட்டில். இந்த நாட்டுக்கு எவரால் குறைவான அநியாயங்கள் இழைக்கப்பட்டுள்ளன என்பதைச் சிந்தித்தே செயற்பட வேண்டும்.

தற்போது கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தான் ஜனாதிபதியானால், இராணுவத்தினரை விடுவிப்பதாக அவர் கூறியுள்ளளார்.

உண்மையில், எம் அனைவருக்கும் இராணுவம் மீது மிகுந்த மரியாதைக் காணப்படுகின்றது.

எம்மைப் பொறுத்தவரை இராணுவத்தினர் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் நாமும் இருக்கிறோம்.

இதனை கோத்தபாய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்துதான் செய்ய வேண்டும் என்றில்லை. இப்போதுள்ள ஆட்சியாளர்கள் கூட இதனை மேற்கொள்ளலாம்.

எவ்வாறாயினும், வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் வெளிவந்தபிறகே நாம் இறுதி முடிவை எடுப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 500 மில்லியன் செலவில் மணிக்கூட்டுக் கோபுரம்

(சாவகச்சேரி)

உலக வங்கியின் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கவுள்ளதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். அத்துடன் உலக வங்கியின் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு, பழைய மீன் சந்தை காணப்பட்ட இடத்திலும் சந்தை வளாகத்திற்குள் புதிய கடைத் தொகுதிகள் மற்றும் நுணாவில் பகுதியில் சிறுவர் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட சில நகர அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாகவும் அதற்கான திட்ட முன்மொழிவுகள், சபையின் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றை உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். சாவகச்சேரி நகரசபையினர் கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து உலக வங்கியின் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டை எதிர்பார்த்து பல அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து வைத்துள்ளனர். இருப்பினும் நிதி கிடைப்பதில் தொடர்ந்தும் தாமத நிலை காணப்படுகிறது. இதனால் வேறு சில நிதி உதவிகள் தமக்கு கிடைக்காமல் போயிருப்பதாகவும் நகரசபையினர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5-30)

## உலக உளநலநாள் யாழில்








(யாழ்ப்பாணம்)

சாந்திகம் உளவளத்துணை நிலையமும் யாழ். உளநல சேவைகள் பிரிவும் இணைந்து சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பின் (USAID) அனுசரணையுடனான சமூகக் கூட்டிணைவும் நல்லிணக்கத்திற்குமான (SCORE) நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக உலக உள நல நாளை முன்னிட்டு "தவறான முடிவினைத் தவிர்க்கும் செயற்பாடுகளில் அனைவரும் ஒன்றிணைந்துசெயற்படுவோம்" எனும் தொனிப்பொருளில் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் (10.10.2019 அன்று) நிகழ்வுகளை நடத்தின.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி. ஏ. சாந்தசீலன் சிறப்புவிருந்தினராக ஐக்கிய அமெரிக்க முகவர் அமைப்பின் SCORE நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதி நிறைவேற்று அதிகாரி து.கார்த்திகேயன் ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.

இந்நிகழ்வுக்கு சாந்திகம் பணிப்பாளர் ஆர்.தவசீலன் தலைமை தாங்கியதுடன் சாந்திகம் நிறுவனத்தின் தலைவர் ச.இரவீந்திரன் உள்ளிட்டமுகாமைத்துவக் குழும உறுப்பிரனர்கள், உளவள வைத்திய நிபுணர்களானசா. சிவயோகன், சி.சிவதாஸ், உள மருத்துவபிரிவின் வைத்திய கலாநிதிகள், ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தபிரதிநிதிகள், கல்விமற்றும் சுகாதாரத் துறைசார் ஆர்வலர்கள், அரச உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் கலந்துசிறப்பித்தனர்.

இந் நிகழ்வின் கருப்பொருள் தொடர்பில் உள மருத்துவ நிபுணர் சி. சிவதாஸ் உரை அமைந்திருந்ததோடு தமது பயிற்சிகளை நிறைவு செய்த நட்புதவியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்கமுகவர் அமைப்பின் நிதிஅனுசரணையுடன் வெளியிடப்பட்ட"மனதோடு பேசுவோம்" என்னும் தலைப்பிலான நூலின் ஒரு தொகுதி வடமாகாண கல்வி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டது. (இ-7)

## உயிரிழந்த சக மீனவரின் சடலத்தை 6 நாட்களாக உடன் வைத்திருந்தோம்

### கண்ணீருடன் தெரிவித்த மீனவர்கள்

(சாம்மாந்துறை)

ஆமை இரத்தத்தைத் தினமும்குடித்து வாழ்ந்த நிலையில்உயிரிழந்த சக மீனவரின் உடலை ஆறு நாட்களாக உடன் வைத்திருந்த நிலையில் இறுதியாகக் கடலில் தூக்கிப் போட்டோம் எனக் கரை திரும்பிய மீனவர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர்.

கடந்த 18.09.2019 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று 22 நாட்களின் பின் கரை திரும்பிய மீனவர்களான சாய்ந்தமருதைச் சேர்ந்த 36 வயது சீனி முகம்மது ஜுனைதின். 37 வயது இஸ்மா லெப்பை ஹரீஸ் ஆகியோர் திருகோணமலை பொலிஸ் நிலையம் ஊடாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்குக் கடந்த வியாழக்கிழமை இரவு அழைத்து வரப்பட்டு ஒப்படைக்கப்பட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் தங்களது முறைப்பாட்டினை பதிவு செய்த பின்னர் வீட்டிற்குச் சென்றடைந்தனர்.

இதேவேளை காரைதீவைச் சேர்ந்த 47 வயது சண்முகம் ஸ்ரீ கிருஷ்ணன் என்ற மீனவர் 10 நாட்களின் பின் இறந்ததாகவும் அவரின் உடலை தாங்கள் 6 நாட்களாக தங்களுடன் வைத்துக் கொண்டிருந்ததாகவும் அதன் பின்னர் அவருடைய உடலை தாங்களின் மிதக்கும் உடையில் சுற்றி கடலில் விட்டதாகவும் கண்ணீர் மல்க சக மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும் எம்மை எந்தவொரு அமைச்சர்களோ எமது சமூகம் சார்ந்த அரசியல்வாதிகளோ வந்து ஆறுதல் கூடச் சொல்லவில்லை. கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்குத் தொலைத்தொடர்பு சாதனங்கள் இன்மையினாலே இவ்வாறான உயிரிழப்புக்களும் உடமையிழப்புக்களும் நிகழ்கின்றன.

உயிரைப் பணயம் வைத்து கடலுக்குச் செல்லும் இந்த மீனவர்களின் உழைப்பை நம்பி பல குடும்பங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன.

மீனவர்களுக்கான அடிப்படை வசதிகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென அந்த மீனவர்கள் வலியுறுத்தினர். (இ-7)

## சட்டவிரோத கட்டடங்களை அகற்ற யாழ்.மாநகர முதல்வர் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் வீதியோரங்களிலுள்ள வாய்க்கால்களை மறித்து அதன் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டுமானங்களை அகற்றுவதற்கு யாழ் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையிலான குழுவினர் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ்.மாநகர முதல்வர் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிகளில் பொது வடிகால்களின் மீது அமைக்கப்பட்டிருக்கும் கட்டுமானங்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய நேரடி விஜயம் செய்து குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

அதன்பின்னர் பொது மக்களுக்கு இடையூறாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கட்டுமானங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ் நேரடி விஜயத்தில் யாழ் மாநகர பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது (இ-5-7)

# மாமல்லபுரத்தில் சீன ஜனாதிபதி ஜின்பிங்கை கலாசார உடையுடன் வரவேற்ற பிரதமர் மோடி




(சென்னை)

கிண்டியில் இருந்து மாமல்லபுரம் சென்ற சீன ஜனாதிபதி ஜின்பிங்கை பிரதமர் நரேந்திர மோடி கலாசார உடையில் வரவேற்றார்.

இந்தியா-சீனா இடையே நல்லுறவை மேம்படுத்த கடந்த ஆண்டு பிரதமர் மோடி சீனா சென்று அந்நாட்டு ஜனாதிபதி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு வந்தார்.

இதன் தொடர்ச்சியாக சீன ஜனாதிபதி இந்தியா வந்து பேச்சு நடத்த முடிவு செய்யப்பட்டது. பிரதமர் மோடியும், சீன ஜனாதிபதியும் மாமல்லபுரத்தில் சந்தித்து பேச இரு நாட்டு அதிகாரிகளும் முடிவு செய்து கடந்த ஒரு மாதமாக ஏற்பாடுகள் செய்தனர்.

இவ்வாறு மாமல்லபுரத்திற்குச் சென்ற சீன ஜனாதிபதியை தமிழர்களின் பாரம்பரிய வழக்கப்படி பிரதமர் மோடி வேட்டி சட்டை மற்றும் சால்வை அணிந்து வரவேற்றார். அர்ச்சுனன் தபசு பகுதியை ஜின்பிங்கிற்கு சுற்றிக் காட்டிய மோடி, அங்குள்ள சிற்பக்கலையின் தொன்மை மற்றும் சிறப்பு குறித்து ஜின்பிங்கிற்கு விளக்கிக் கூறி னார். (ஜ)

# தமிழ் - முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெறுவோம்

## மகிந்த அணி நம்பிக்கை

(கொழும்பு)

தனிச் சிங்கள பௌத்த வாக்குகளை மாத்திரம் கொண்டு பொதுஜன பெரமுன வெற்றிபெற முயற்சிக்கின்றது என்ற கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிசாரமாகும்.

தமிழ் - முஸ்லிம் மக்களின் ஆதரவை பெற்றே வெற்றி பெறுவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இவ்வாரம் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் பெற்றுக் கொண்டது என்ன? போலியான அரசியல் பிரசாரத்திற்கு இம்முறையும் இடமளிக்க முடியாது. தேர்தலின் வெற்றிக்காகவே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்குகின்றது எனவும் வாசுதேவ தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஐக்கிய தேசிய கட்சி 2015ஆம் ஆண்டு மகிந்த அரசாங்கம் தொடர்பில் தவறான சித்தரிப்புக்களையும், போலியான குற்றச் சாட்டுக்களையும் முன்வைத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆட்சி மாற்றத்தின் பலனை வடக்கு உட்பட மலையக தமிழ் மக்களும், நாடுதழுவிய ரீதியில் வாழும் முஸ்லிம் மக்களும் பெற்றுக் கொள்ளவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்கள் போலியான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டார்கள். வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு, மலையக மக்களுக்கு நியாயமான ஒருநாள் சம்பளம் அத்துடன் அடிப்படைத் தேவைகள் விருத்தி என்பவை அரசாங்கத்தின் பிரதான வாக்குறுதிகளாக காணப்பட்டன. கடந்த நான்கரை வருட காலமாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டனவா? என்பதை தமிழ் மக்கள் மீட்டுப் பார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் 76 பேர் சஜித்திற்கு ஆதரவு

## மகிந்த அணி அதிர்ச்சி

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் இணக்கம் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்புடைய முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் 76 பேர் ஐக்கிய தேசிய முன்னணி யின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்க இணக்கம் வெளியிட்டனர்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் வீட்டில் சஜித் பிரேமதாஸவை சந்தித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர்.

அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி நிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். தேர்தல் பிரிவு மட்டங்களில் தனக்கு ஆதரவு வழங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுடன் மீண்டும் சந்திப்பு ஒன்றை நடத்துவதாக சஜித் தெரிவித்தார்.


கடந்த வாரம் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவுடன் இணைந்திருந்தது. இந்நிலையில் மாவட்ட மட்டத்திலான சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சஜித்திற்கு ஆதரவு வழங்கியுள்ளமை, மகிந்த அணிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (இ-7)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 11.03.1938

உதிர்வு 13.09.2019

**அமரர். தம்பிஜயா சபாநாயகம்**



எம் குடும்பத் தலைவனே!
வாழ்க்கை என்ற படகில் வழிகாட்டியாய்
எம்மை நல்நெறிப்படுத்தியவரே
மாதம் ஒன்று ஆகியதோ
மனத்துயரோடும் விழிநீரோடும்
நிலையிழந்து தவிக்கின்றதே சபா குடும்பம்
நீங்கள் விண்ணுலகு சென்றாலும்
வானிலிருக்கும் விடிவெள்ளியாய்
என்றென்றும் வழிகாட்டுவீர்!
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

(624)

அன்னாரின் இன்றைய (13.10.2019) வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

சபா
குடும்பத்தினர்.


Canada VISA கூடிய விரைவில் உங்கள் கைகளில்
STUDENT / VISIT / BUSINESS VISA
பாடநெறி கட்டணம் ரூ.350,000 இருந்து
சகல வசதிகளும் செய்து தரப்படும்
O/L உடன் விண்ணப்பிக்கலாம்
Without IELTS Intake Every Month
STUDENT VISA

"எனது உயர்கல்வியை 2019 Oct. மாதம் CANADA வில் தொடர FLEX INSTITUTE நிறுவனத்திற்கு நன்றிகள்!"
- Jeyakumar Manojan Ravidu
Visit & Business Visaவிற்கு தேவையான Sponsor Letters Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்
VISIT VISA

"2019 Sep. CANADA சென்ற Mr. Duraisamy Panneerselvam அவர்களுக்கு வாழ்த்துக்கள்!"
- Director Mr. Jegan - Flex Institute

STUDY IN UK
Global MBA
MSc in Computer Engineering & etc.
Without IELTS Jan. 2020 Intake
Hotline: 0777- 761 346
UK Student, Visit & Family Visit Visa
REFUSED VISA விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
Mr. Jegan
Director
Flex Institute
flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com www.flexinstitute.lk
10 வருடகால நம்பிக்கையான சேவை
FLEX Graphic

# யார் நியாயமின்றி சிறையில் இருக்கிறார்கள்? கோத்தபாயவிடம் தம்பர அமில தேரர் கேள்வி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது அநுராதபுர தேர்தல் பிரசாரக்கூட்டத்தில், தான் ஆட்சிக்கு வந்தால் நியாயமின்றி சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தினரை விடுவிப்பதாகக் கருத்தொன்றை முன்வைத்தார்.

யார் நியாயமின்றி சிறையில் இருக்கிறார்கள்? கடந்த ஆட்சிக் காலத்தில் அப்பாவிகளைக் கடத்தி வைத்து கப்பம் பெறும் நடவடிக்கைகளுக்குத் துணைபோன இராணுவத்தினரும், திருகோணமலையில் அப்பாவி மாணவர்கள் 5 பேரைக் கொல்வதற்குத் துணைபோனவர்களும், குடிநீர் கேட்டுப் போராடிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியவர்களுமே சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தம்பர அமில தேரர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் உரையாற்றிய போதே தேரர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

சஜித் பிரேமதாஸவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்திருக்கிறார்கள். கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதும், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத அரசியல் நெருக்கடியின் போதும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் பெரும் பங்காற்றின. அதன் அடுத்தகட்டமாகவே தற்போதும் நாமனைவரும் ஒன்றிணைந்திருக்கின்றோம்.

2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்த போதிலும், பல்வேறு சிறந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிரணியிலிருந்தவர்கள் இடங்கொடுக்கவில்லை. அவற்றை மீண்டும் தொடர்வதற்காகவே இப்போது சஜித் பிரேமதாஸவை முன்னிறுத்தியிருக்கின்றோம். அதனை இலக்காகக் கொண்டு இப்போது அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்திருக்கின்றன.

குற்றச்செயலொன்று தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு இல்லை.

அவ்வாறிருக்க கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையின் ஹிட்லராகுவதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார். கோத்தபாய ராஜபக்ஷ நாட்டின் பாதுகாப்பச் செயலாளராக இருந்தபோது ஊடகவியலாளர்கள் அச்சத்தால் ஓடினார்கள். ஓடாதவர்களை அவர் படுகொலை செய்தார். இந் நிலையில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்குவந்து, ஊடகவியலாளர்களைக் கண்டால் கோத்தபாய ராஜபக்ஷ ஓடக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதி வேட்பாளர்களை பொதுவான மக்கள் மேடைக்கு விவாதத்திற்காக அழைத்தபோது கோத்தபாய வரவில்லை. அவருடைய பழைய குணவியல்புகள் இன்னமும் மாறவில்லை. அதிகாரத்தின் மீதான மோகம் மாறவில்லை. அவரால் கடந்த ஆட்சியின்போது எத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நினைவில் வைத்திருப்பவர்கள் அவருக்கு ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)






யாழ்.போக்கட்டி அ.த.க.பாடசாலையின் ஆசிரியர் தினவிழா கடந்த புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரியரும், கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டப உரிமையாளருமான த.பரமானந்தம் கலந்து கொண்டார்.

(படங்கள்:-சுபேசன்)

# புலம்பெயர் தமிழர்களின் மனங்களை மாற்ற முடியும்

## ஜனாதிபதி வேட்பாளர் பல்லேவத்த நம்பிக்கை



(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்களின் மனங்களை தான்னால் மாற்ற முடியும் என ஜனாதிபதி வேட்பாளர் ரொஹான் பல்லேவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


. புலம்பெயர் தமிழர்களின் மனங்களை மாற்றி ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் சதித் திட்டங்களை அகற்றிக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அண்மையில் பிரித்தானியாவுக்கு சென்றிருந்த தான் புலம்பெயர் தமிழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்தாகவும் தெரிவித்தார்.

இதன்போது ஈழக்கொடி ஏற்றப்பட்ட குறித்த நிகழ்வில் தம்மால் உரையாற்ற முடியாது எனத் தெரிவித்திருந்ததாகவும் அவர் கூறினார்.

இதன்காரணமாக ஏற்பாட்டாளர்கள் தான் உரையாற்றும் போது அந்தக்கொடியை அகற்றியதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் ரொஹான் பல்லேவத்த தெரிவித்தார். (இ-7)

# "இந்து, பௌத்த சமய நல்லிணக்கமும் இராவண பேரரசரும்" நூல் வெளியீடு







(கொழும்பு)

"இந்து, பௌத்த சமய நல்லிணக்கமும் இராவண பேரரசரும்" நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு தேசிய நூதன சாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தனஞ்ஜய கம்லத் மற்றும் களனிப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுக் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் நயோமி கெக்குலாவல ஆகியோரால் தொகுக்கப்பட்ட இந்நூலானது மூன்று ஆண்டு கால ஆராய்ச்சியின் வெளிப்பாடாகும்.

சுமார் 160 விகாரைகள் மற்றும் இந்துக் கோவில்களின் தரவுகளை உள்ளடக்கியவாறு தொகுக்கப்பட்டுள்ள இந்நூலின் நான்காவது அத்தியாயத்தில் இராவணன் தொடர்பிலான வரலாற்று ஆராய்ச்சியை இலங்கையில் ஆரம்பித்தது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்து சமய நல்லிணக்கம், சிங்கள சமூகத்தின் தோற்றத்திலிருந்து கி.பி.19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கையில் ஆட்சி செய்த மன்னர்களுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகளை இந்நூல் விளக்குகின்றது.

நூலாசிரியர்களால் நூலின் முதற்பிரதி ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது.

தொல்லியல் தொடர்பிலான சிரேஷ்ட பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்ன இவ்விழாவின் தலைமை உரையை ஆற்றினார்.

வண.ஓமாரே கஸ்ஸப அநுநாயக்க தேரர், களனிப் பல்கலைக்கழத்தின் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் டி.எம்.சேமசிங்க, தொல்லியல் பட்டப்பின்படிப்புப் பிரிவின் பணிப்பாளரும் சிரேஷ்ட பேராசிரியருமான காமினி அதிகாரி, கலாநிதி ரோலன்ட் சில்வா உள்ளிட்ட புத்திஜீவிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# வாக்குச் சீட்டில் அடுத்தடுத்து கோத்தா, நாமலின் பெயர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டில், கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரும் நாமல் ராஜபக்ஷவின் பெயரும் அடுத்தடுத்து இடம்பெற்றன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒழுங்கும், வேட்பாளர்களுக்கான சின்னங்களும் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டன.

வாக்குச்சீட்டில் வேட்பாளர்கள் எந்த ஒழுங்கில் இடம்பெறுவார்கள், அவர்களின் சின்னம் என்ன என்பதை விளக்கும் வகையில், தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இதன்படி, வாக்குச் சீட்டில் முதலாவது இடத்தில் நாய்ச் சின்னத்தில் போட்டியிடும் அபரக்கே புஞ்ஞானந்த தேரரின் பெயர் இடம் பெறவுள்ளது. கடைசி இடத்தில், மின்குமிழ் சின்னத்தில், போட்டியிடும் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளரான ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் பெயர் இடம் பெறவுள்ளது.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அடுத்ததாக, மூக்குக் கண்ணாடி சின்னத்தில் போட்டியிடும், தேசிய ஒற்றுமை முன்னணியின் நாமல் ராஜபக்ஷவின் பெயர் இடம்பெறவுள்ளது. (இ-7)

# "செஞ்சோலையின் வலிகள்" காணொலி பாடல் வெளியீடு

(நெளுக்குளம்)

வவுனியூர் ரஜீவனின் கவி வரியில் உருவான செஞ்சோலை உறவுகளின் துயரங்களை சுமந்து வரும் "செஞ்சோலையின் வலிகள்" என்னும் காணொலிப் பாடல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைந்துள்ள செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். இவ் காணொலிக்கான பாடல்களை மறைந்த முன்னணிப் பாடகர் எஸ்.ஜீ. சாந்தனின் மகன் சகிலன் பாடியுள்ளார். இப்பாடலுக்கான இசையை இசை கனல் பி.எஸ்.விமல் வழங்கியுள்ளார். (ஜ-299)

# பரிசளிப்பு விழா

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை முதல்வர் ப.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்லைக்கழக மருத்துவபீட மாணவன் யோ.அகில்மாறன், பரந்தன் விவசாயக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி.இ. துஸ்யந்தினி, கிளிநொச்சி நீதிமன்ற வளாக சட்டத்தரணி சு.சிவசூரியா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (9-350)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வர்ணம் தீட்டும் போட்டி






(நெளுக்குளம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வவுனியா பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டிகள் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வவுனியா பொது நூலகத்தின் பிரதம நூலகர் திருமதி. பாமினி உருச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 4 வயதிலிருந்து 8 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 25 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்டு வர்ணம் தீட்டும் போட்டியில் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற சிறுவர்கள் நடுவர்களினால் தீர்மானிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளார்.(9-250-299)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இரணைதீவு மக்களுக்கான நடமாடும் சேவை



(இரணைதீவு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இரணைதீவு மக்களிற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் இரணைதீவில் இடம்பெற்றது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனம் 2017 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி குறித்த பகுதியில் மக்கள் குடியேறிய காலப்பகுதியிலிருந்து அவர்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தது.

இதனடிப்படையில் குறித்த விடயங்கள் தொடர்பில் குறித்த நிறுவனம் அப்பகுதி மக்களுடன் இணைந்து 2019 இரண்டாம் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்திருந்தனர். அப்பகுதியில் உள்ள மணல், கற்றாளை, மாடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் வேறு நபர்களால் சூறையாடப்படுவதாகவும் குறித்த நடவடிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பொலிஸாரிடம் மக்கள் தெரிவித்துள்ளனர். குறித்த முறைப்பாடு தொடர்பில் மக்கள் ஊடகங்களிற்கும் கருத்துத் தெரிவித்தனர். இதே வேளை குறித்த நடமாடும் சேவை



முறைப்பாடு செய்திருந்தனர்.

அதனை தொடர்ந்து குறித்த பகுதிக்கு கடந்த மார்ச் மாதம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு களவிஜயம்ஒன்றை மேற்கொண்டிருந்த நிலையில் குறித்த பகுதி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தனர். அதனடிப்படையில் நேற்று முன்தினம் குறித்த நடமாடும் சேவையானது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நடமாடும் சேவைக்காக 16 அரச நிறுவனங்கள் அழைத்து செல்லப்பட்டு அவற்றின் ஊடாக இப்பகுதியில் வசிக்கும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராயப்பட்டு அவர்களிற்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையில் குறித்த நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலக இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். இதே வேளை குறித்த பகுதியில் இயற்கை வளங்களை சூறையாடப்படுவதாகப் பொலிஸாரிடம் பிரதேச மக்கள் நடமாடும் சேவையில் ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதியில் கடற்படை உத்தியோகத்தர் ஒருவரால் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. குறித்த ஒலிப்பதிவு செய்யப்படும் சம்பவம் தொடர்பில் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜா குறித்த உத்தியோகத்தரை அழைத்து விசாரணை மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் குறித்த பகுதியை விட்டு அதிகாரிகள் வெளியுறினர். நடமாடும் சேவையில் பூநகரி பிரதேச செயலாளர் கிருஸ்ணேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர், திணைக்களங்கள் சார் அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிரிவுகள் சார் அதிகாரிகள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவன ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9)



வசிப்பு மாதத்தினை முன்னிட்டு "தில்லை வெளியீட்டகத்தால் " வெளியீடு செய்யப்பட்ட நூல்களில் ஒரு தொகுதி சிறுவர்களுக்கான நூல்கள் கிளிநொச்சி காந்தி இல்லத்தின் நூலகத்திற்கும் மற்றும் அங்குள்ள சிறுவர்களுக்கும் இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு காந்தி இல்லத்தில் இடம் பெற்றது. தில்லை வெளியீட்டகம் சார்பாக படைப்பாளர் க.தே.தாசன் காந்தி இல்லத்தின் கணக்காளரிடம் நூல்களை கையளித்தார். (படம்:- குருமன்காடு செய்தியாளர்)




# டெங்கை கட்டுப்படுத்த வவுனியாவில் சோதனை

(நெளுக்குளம்)

வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் அண்மைய காலமாக டெங்கு நுளம்பு தாக்கம் அதிகரித்துக்காணப்படுகின்றது. இதனால் 24 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதையடுத்து வியாபார, வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதாரப்பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மில் வீதி, பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி போன்ற வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கை பொது சுகாதார பரிசோதகர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் போது வியாபார நிலையத்தின் மேல் தளங்களில் காணப்படும் மொட்டை மாடிகள், தண்ணீர்த் தாங்கிகள், கூரைகள், வெற்றுப் போத்தல்களில் மழை நீர் தேங்கி காணப்பட்டுள்ள இடங்கள் அவ



தானிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து விழிப்புணர்வு துண்டறிக்கைகள் குறித்த வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டதுடன் அப்பகுதிகள் சீரமைப்பதற்கு கால அவகாசங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் திருத்தி அமைக்க தவறியவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சோதனை நடவடிக்கை மேற்கொண்ட பொது சுகாதாரப்பரிசோதகர்களினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (9-299)

# வவுனியாவிற்கு விஜயம் செய்த தீவக அதிபர்கள்





(குருமன்காடு)

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அதிபர்களின் வாய்மை விருத்தி செயலமர்வை முன்னிட்டு தீவக வலய பகுதி அதிபர்கள் வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.. வவுனியா மாவட்டத்தில் குறைந்த வளங்களுடன், முன்னுதாரணமாக செயற்பட்டு வரும் புதுக்குளம் கனிஷ்ட பாடசாலையின் செயற்பாட்டை தீவக வலயப்பகுதியிலிருந்து வந்த 50 அதிபர்கள் பார்வையிட்டிருந்தனர். இந்நிகழ்வானது பாடசாலையின் அதிபர் திருமதி. சொக்கலிங்கம் கமலாம்பிகை தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பாடசாலையின் ஆரம்பப் பிரிவு கற்றல் வளநிலையம் மற்றும் நிர்வாக செயற்பாடுகள், கற்றல் கற்பித்தல், வகுப்பறை முகாமைத்துவம், சுற்றுச் சூழல், வளமுகாமைத்துவம் போன்ற விடயங்களை பார்வையிட்டிருந்தனர். நூலகம் மற்றும் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை பார்வையிட்ட அதிபர்களுக்கு, மாணவர்கள் தங்கள் தனித்திறமைகளையும் குழுவாக தங்கள் திறமைகளையும் வெளிப்படுத்தியிருந்தனர்.(9-250)

சிந்திக்காதவன் முட்டாள்;
சிந்திக்கத் துணியாதவன் கோழை;
சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.

- டிரம்மண்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விதைபடாத வயல்களும் விவசாய அபிவிருத்தியும்

திட்டமிடல்கள் இல்லாத சேவைகள் எந்தப் பயனையும் தரப்போவதில்லை. இவ்வாறு திட்டமிடப்படாத நிலையிலேயே எங்கள் விவசாயக் கட்டமைப்புகளின் இயங்குநிலை உள்ளது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இன்றுவரை எங்கள் தமிழர் தாயக மண்ணில் விவசாயம் வறுமைப்பட்ட தொழிலாகவே இருந்து வருகிறது.

விவசாய முயற்சியில் ஈடுபட்டால் நட்டத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற நிலையில், விவசாயக் குடும்பங்கள் வேளாண் செய்கையில் இருந்து விடை பெறுகின்றன.

இதற்குக் காரணம் என்ன என்பது பற்றியெல்லாம் கவனிப்பதற்கு யாருமே இல்லை.

விவசாய அமைப்புக்கள் திறப்பதும் பூட்டுவதுமாக இயங்குகின்றன.

இடையிடையே விவசாயக் கருத்தரங்குகள், கண்காட்சிகள் இவற்றோடு எங்கள் விவசாயம் அபிவிருத்தி பெறும் என்ற கற்பனையில் காலம் கடந்து போகிறது.

ஆனால் எங்கள் நிலத்தில் விதைக்கப்படாத வயல்கள், பயிர்செய்யப்படாத விவசாய நிலங்கள் வீணே கிடப்பது பற்றி எந்த நடவடிக்கையும் இல்லை.

வயலை மேட்டு நிலமாக்கக்கூடாது என்ற சட்டம் அமுலில் உள்ளது. ஆனால் அந்த வயல் விதைக்கப்பட வேண்டும் என்ற சட்டம் இருக்கிறதா? என்றால் இல்லை என்பதே பதில்.

ஆக, வயல் நிலத்தை மேட்டு நிலமாக்குவதற்குத் தடை செய்யும் சட்டம், குறித்த வயல் நிலங்கள் விதைக்கப்பட வேண்டும் என்ற சட்டத்தையும் அமுல்படுத்தினால் எப்பாடுபட்டும் நெல் விதைப்பு என்பது நிறைவேற்றப்படும்.

அதேநேரம் நாங்கள் நெல் விதைக்கின்றோம். கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தி நெற்செய்கைக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுகை பெறும்.

அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் தானாகவே நடைபெறும்.

ஆனால் வயல் விதைப்பு என்ற விடயத்தில் எந்தக் கவனிப்பும் இல்லை. கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தாததன் காரணமாக ஏகப்பட்ட வயல் நிலங்கள் விதைப்பின்றி பல வருடங்களாகத் தரவைப்பட்டுக் கிடக்கிறது.

உண்மையில் எங்கள் தமிழ் மக்கள் தங்கள் உணவுத் தேவைக்கு நெல் விதைத்து அவற்றை அறுவடை செய்து வீட்டில் களஞ்சியப்படுத்தி வைத்தவர்கள்.

வீட்டுக்கு வருகின்றவர்கள் உலவிதம் செய்யாமல் அன்னம் உண்ணும் பொருட்டு வயலில் வெட்டி எடுத்த புது நெற்கதிர்களை வீட்டின் முன்பக்கத்தில் காட்சிப்படுத்தி எங்கள் வீட்டில் நெற்தானியம் தாராளமாய் இருக்கிறது. சோற்றுக்கு எந்தக் குறையும் இல்லை என்பதை உணர்த்திய பண்பாட்டின் உரிமையாளர்கள்.

ஆனால் இன்று எல்லாம் கைவிடப்பட்டு விட்டது. உண்மையில் நெல் விதைப்பை எல்லோரும் செய்ய முடியும். ஆனால் வயலுக்கு வேலி கட்டி நெல் விதைப்பதும் கட்டாக்காலி மாடுகளிடம் இருந்து நெல்லைப் பாதுகாப்பதும் என்றால், வயல்கள் வீணே விடப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகையால் நெல் விதைபடாத வயல்களை விதைப்பதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதுவே விவசாய அபிவிருத்தியின் முதற் பணியாகும்.

# அரசியல் நடவடிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபடத் தடை

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

அரசியல் நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்த வேண்டாம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, அரசியல் நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம் என அனைத்து அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் உள்ளிட்ட தரப்பினர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சிறுவர்கள் பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக பொது மக்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுமாயின் அது தொடர்பாக 1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்தோ அல்லது எழுத்து மூலம் அல்லது தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-3)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கான அனுமதி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தரம் 07-10 வரையான இடைநிலைப் பிரிவுக்குரிய அனுமதிக்காகக் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மாணவர்களுக்குரிய அனுமதி கிடைத்துள்ளது. எனவே பெற்றோர் 15.10.2019 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அனுமதிக் கடிதங்களைப் பெற்று, பாடசாலைக்குரிய வ.சே கட்டணம், பரீட்சைக் கட்டணம் மற்றும் பா.அ.சங் கட்டணம் என்பவற்றை மட்டும் செலுத்தி மாணவர்களை சேர்த்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### மக்கள் நலன் பேணும் அமைப்பின்

## 7ம் ஆண்டு நிறைவு விழாவும் உதவித்திட்ட நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன் பேணும் அமைப்பின் 7வது ஆண்டு நிறைவு விழாவும் உதவித் திட்ட நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை (13.10.2019) பிற்பகல் 2.00 மணிக்கு கோண்டாவில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீவல்லீபுரநாதர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் நலன் பேணும் அமைப்பின்தலைவர்செ.ஜெகபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)

## மலையக நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

காசல்ரி மற்றும் விமல சுரேந்திர நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று அதிகாலை திறக்கப்பட்டன. இதனால் களனி கங்கையின் நீர்மட்டம் ஓரளவுக்கு அதிகரித்துள்ளது.

மௌசாகல நீர்த்தேக்கத்தில் நீர் வழிந்தோடும் நிலையை எட்டியுள்ளதோடு, ஆற்றை அண்மித்து வாழும் மக்கள் மிகவும் அவதானமாகசெயற்படுமாறுஎச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முழுநிலாக் கருத்தரங்கு

உரும்பிராய் ஞான வைரவர் சனசமூக நிலையத்தின் மாதாந்த முழுநிலாக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப 5.00 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் ம.ரகுநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளராக நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி அ.ஜெயக்குமாரன் கலந்து கொண்டு "தொற்றா நோய்கள்" எனும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (ம-3)

## சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறிவித்தல்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் வி.டி. கித்சிறி தெரிவித்தார்.

அதன்படி, பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களினதும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அனைத்து மாணவர்களும் நாளை மறுதினம் பல்கலைக்கழக விடுதிக்கு வருமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்தார். (ஐ)

## வாக்குச்சீட்டைப் படம் எடுத்தவர் கைது

(எல்பிட்டிய)

புள்ளடியிட்ட வாக்குச் சீட்டைப் படம் பிடித்த இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்தனர். எல்பிட்டிய, தல்காஸ்பேவில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்கான வாக்குச் சாவடிக்கு நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

வாக்குச் சாவடிகளுக்குள் வாக்குச் சீட்டுகள் அல்லது புள்ளடியிட்ட வாக்குச் சீட்டுகளைப் புகைப்படங்கள் அல்லது காணொளி எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இது தேர்தல் விதி மீறலாகும். (ஐ)

## ஜப்பானைத் தாக்கிய ஹகிபிஸ் புயல்; டோக்கியோக்கு அருகில் நிலச்சரிவு

(ஜப்பான்)

ஜப்பானில் கடந்த 60 வருடங்களில் இல்லாதளவு புயல் தாக்கியதால், தலைநகர் டோக்கியோக்கு அருகில் நிலச்சரிவு ஏற்பட்டது.

ஏற்கனவே புயல் பாதிப்புக்களை ஜப்பான் எதிர்கொண்டுள்ள நிலையில் சில பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. ஒருவர் உயிரிழந்தார்.

ஆயிரக்கணக்கான விமான சேவைகளும் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதுடன், ரக்பி உலகக் கிண்ணம், போர்முலா 1 கார்ப்பந்தயம் போன்றனவும் நிறுத்தப்பட்டன.

மக்கள்அன்றாடத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான கடைகள் மற்றும் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன.

கிழக்கு டோக்கியோவில் ஹகிபிஸ் புயல் தாக்கத்தால் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், வீதிப் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.

## வல்லிபுர மாயவன் ஆடும் தீர்த்தம்

வங்காள விரிகுடாக்கடல் வெளியில்
வல்லிபுர மாயவன் ஆடும் தீர்த்தம்
சக்கரத்தாழ்வாராய் தோன்றிய கடலினிலே
சங்கடங்கள் தீர்க்க அவன் ஆடுகிறான் தீர்த்தம்
நாமும் நாடிவந்து ஓடிவந்து தீர்த்தமாட
நல்லருளைத் தந்திடய்யா நம் மாயவனே
தெரிவிழந்து நிற்கும் எம் வாழ்விற்கு
உரிய வழி காட்டிடய்யா மாதவனே

-புலோலியூர்
வேல்நந்தன்

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

அன்பிற்கு மொழி கிடையாது. மொழிகள் புரியாத இடத்தில் அன்பினால் அனைத்தையும் சாதிக்கலாம்.

-சத்யசாய்

# உயிர்க்கவசம்

## வடமாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தின் இறுதி நாளையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது

பவுடர் பூசி விடுங்கோ அப்பா என முன்னால் வந்து புன்னகைக்கின்ற அந்தப்பிஞ்சு முகம் கண்களுக்குள் மீண்டும் மீண்டும் விம்பமாக தோன்றிக்கொண்டே இருக்க தொண்டை வற்றி குரல்வளை அடைத்துக்கொள்வதாக ஏதோ இனம் புரியாத உணர்வுடன் கண்களின் இடுக்கில் கண்ணீர்த்துளி கவலையைக் கரைக்கும் முயற்சியில் தோற்று வெளியேறிக்கொண்டிருந்தது.

இதிழினி 7 வயதுடைய குட்டித் தேவதை. அழகுடன் அறிவும் திறனும் கொண்டு எதிர்காலத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கையை விதைக்கின்ற ஒளிக்கீற்று. பாடசாலை வாழ்க்கையை ஆரம்பித்த சொற்ப நாட்களுக்குள்ளேயே பாடசாலையின் நட்சத்திரமாக பிரபல்யமாகி இருக்கக் கூடிய குறும்புக்காரி. மாநிறம் தான். இந்த வயதிலேயே தலை வாரி இரட்டைப் பின்னல் கட்டி பாவாடை சட்டையுடன் தந்தை முன் வந்து பவுடர் பூசி விடுங்கோ அப்பா என்று நிற்பாள். தந்தை தனது பவுடர் தடவிய உள்ளங்கைகளை அவளது கன்னங்களில் தட்டி முகத்தில் பூசி உச்சியில் ஒரு முத்தம் கொடுத்தாற்தான் அவள் வீட்டு வாசலினைத் தாண்டுவாள். கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்த அவளை ஒரு நாட்டிய தாரகையாக பார்க்க வேண்டும் என்பதே அந்தத் தந்தையின் கனவாக இருந்தது.

அதற்காக அயல் ஊரிலேயே பரத வகுப்பிற்கும் ஒழுங்கு செய்திருந்தார்.

அன்று தாமதமாக பாடசாலையிலிருந்து திரும்பிய அவளுக்கு பரத வகுப்பு ஆரம்பித்து விடுமோ என்ற அவசரம் தோன்றியிருந்தது.

அவளை வகுப்பில் கொண்டு சேர்த்த பின்னரே தனது வியாபாரத்தை கவனிக்கச் செல்ல வேண்டிய நிலையில் தந்தை தவித்தார்.

இருவரையும் விரைவுபடுத்தி அனுப்பிய பின்னரே ஓய்கின்ற கால்களுக்குச் சொந்தக்காரியாக அவளது தாயார் இருந்தார்.

சரி சரி கெதியா வாம்மா. நேரம் போகுது எனத் துரிதப்படுத்திய தந்தையின் முன்பு வழமை போல வந்து நின்ற அவள்.பவுடர் பூசி விடுங்கோ அப்பா என முகம் மலர்ந்தாள்.

அவசரத்திற்கு ஏற்றமாரி இருந்து பழகு.இப்ப நீயே பூசினா என்ன? என்று தனது அவசரத்தைக் கோபமாக்கி கடிந்தவாறே தனது மனக்கட்டளைக்குக் கட்டுப்பட்டு அவள் முகத்தில் பவுடர் பூசி உச்சி முகர்ந்து கணநேர மகிழ்ச்சியை அனுபவித்தவராக மோட்டார் சைக்கிளை எடுக்க, அவளும் தோள்களின் பையைத் தொங்க விட்டவாறு ஓடிவந்து தொற்றிக் கொண்டாள்.

என்னப்பா இத ஹின்ர கெல்மட் எடுக்கேல்லையா? என மனைவி எச்சரிக்க, அவள் சின்னப்பிள்ளை தானே. பொலிஸ் பிடிக்காது சமாளிக்கலாம் என எண்ணியவராய் நேரத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து புறப்பட்டார்.

மோட்டார் சைக்கிளின் ஆர்முடுக்கி கதியை அதிகரிக்க எதிரே வந்தவர்களின் சைகை பொலிஸ் நிற்பதை உணர்த்தியது. குறுக்கு ஒழுங்கையின் ஊடாக பயணித்து மற்றைய தெருவில் ஏற முற்பட்ட அந்த நொடி அவர்களது வாழ்வையே புரட்டிப்போடுமென யாரும் எண்ணியிருக்க மாட்டார்கள்,

லேசாக கண்களைத் திறந்து தன்னிலை உணர தலைப்பட்ட வேளையில் உடல் வலியினையும் தாண்டி மூளை நடந்த சம்பவத்தை மீட்டு மகளைத் தேடியது . மனது கனக்க கண்கள் தமது வீச்செல்லையினுள் அவளைத் தேடிக்கொண்டிருந்தன.

"பிள்ளை கெல்மட் போடேல்லையாம். ஆதலால் தான் தலையில் அடிபட்டு அந்த இடத்தி லேயே…"

இதற்கு மேல் வெளியில் பேசிக்கொண்டு இருந்தவர்களின் வார்த்தைகள் காதினுள் நுழைய மறுத்துவிட்டன.

அவர்களது உலகத்தின் சுழற்சி நின்றிருந்தது. மகிழ்ச்சி தொலைந்திருந்தது. தந்தையின் மடியில் தவழ்ந்த இதழ் உதிர்ந்திருந்தது.

"இதழ் மௌனித்துப் போன வார்த்தையை உரக்க கத்த மட்டுமே அவ்வேளையில் தந்தையால் முடிந்தது.

# காலிறுதிக்கு முன்னேறியது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பெண்களிற்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி காலிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் குருநாகலில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அநுராதபுர நிவேதக் சித்திய மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமானது முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 20:5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று காலிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (ஜ)

# அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்தி வேல் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.யூட்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 02:01 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக ஆர்த்திகன் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கீர்த்தனன் தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

# ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி சம்பியன்

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்குக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கம் நடத்தும் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.



இறுதியாட்டத்தில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய ஆசிரியர் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் ஆதிக்கம் செலுத்திய வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 18:4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ஜ)

# தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் ஜெ.சுகன்யாவுக்கு வெள்ளிப்பதக்கம்



திறந்த வயதுப் பிரிவினருக்கான தேசிய மட்ட பெண்களிற்கான பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.சுகன்யா வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

தேசிய மட்ட திறந்த வயதுப் பிரிவினருக்கான பெண்களிற்கான பளுதூக்கல் பேர்ட்டிகள் கொழும்பு டொறின்ரன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்ற நிலையில்

நேற்று முன்தினம் நடைபெற்ற 87 கிலோ நிறைப் பிரிவினருக்கான பளுதூக்கல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. சுகன்யா சினெச் முறையில் 65 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 75 கிலோ பளுவையும் ஒட்டு மொத்தமாக 140 கிலோ பளு வைத்தூக்கி வெள்ளிப் பதக்கத் தையும் கைப்பற்றினர். இவர் யாழ் பாசையூர் புனித அந்தோனியார் பெண்கள் வித்தியாலய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

# காலிறுதிக்கு முன்னேறியது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



கணன்கோம்ஸ் அனுசரணையில் கொடுக்குளாய் சக்தி வேல் வி.க நடாத்தும் மாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வலைப்பாடு மெசியா அணியை எதிர்த்து தேவரையாளி யங்லயன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:00 என்ற கோல் கணக்கில் மெசியா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

மெசியா அணி சார்பாக சுமன் இரு கோல்களை பெற்று கொடுத்தார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அஜந்தன் தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

## வளமான நாட்...

அடைந்துள்ளது. விவசாயத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் போது சகல மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமது கொள்கைகளின் அடிப்படையில் தற்போது தொழில் கோரும் இளைஞர், யுவதிகளுக்கான தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களது சேவைகளை நாட்டிற்கு பெறுமதியான வகையில் பயன்படுத்துவதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம் என்றார். (ம-3)

## தமிழரின் பிரச்சினையை...

எமக்கு அதிகாரம் கிடைத்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்து அவர்களின் நலன்களில் பிரதான பங்கினை வகிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய ரீதியிலான நகர்வுகள் குறித்து ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கவிடம் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த அழிவுகள் இன்றும் எமக்கு நினைவில் உள்ளது. யாழ்தேவி புகையிரத குண்டுவெடிப்பில் எனது நண்பர்கள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களை இழந்த துயரம் இன்றும் எனக்கு உள்ளது. அதேபோல் 1988,1989 ஆண்டுகளில் இந்த நாட்டில் இடம்பெற்ற கலவரத்தில் எனது பாடசாலை மாணவர்கள் பலரை நான் இழந்துள்ளேன்.

இந்த வேதனைகளுக்கு நாம் எவ்வாறு முகம்கொடுத்து வாழ்கின்றோமோ அதேபோல் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புகள் அதிகமாகும்.

எம்மை விடவும் தமிழ் மக்கள் இழந்தவையும், அனுபவித்த வேதனைகளும் அதிகம் என்றே நான் கருதுகின்றேன். மிகப்பெரிய யுத்தம் ஒன்றை உருவாக்கினர்.

ஆனால் எமது பிரதேசத்தில் வைத்தியசாலையில் தமிழ் வைத்தியர் இருந்தார். அருகாமையில் உள்ள வீடுகளில் தமிழர்கள் வாழ்ந்தனர். கிராமங்களில் தமிழ் சிங்கள திருமணங்கள் இடம்பெற்றது. ஆனால் அனாவசியமான யுத்தம் ஒன்றினை உருவாக்கி தமிழ் சிங்கள மக்கள் இடையில் அனாவசிய பிரிவினை உருவாக்கி நாட்டினை சுடுகாடாக மாற்றினர். இதனை எல்லாம் யார் விரும்பியது. யாருக்கு இந்த யுத்தம் தேவைப்பட்டது.

இனியும் தமிழர் சிங்கள மக்கள் மத்தியில் நிரந்தரமாக ஒரு பிரிவு அவசியமா என்ற கேள்வி எம்மத்தியில் எழுகின்றது.

அவ்வாறான ஒரு பிரிவுக்கு நாம் இடமளிக்க கூடாது. அனாவசியமாக தமிழர் தண்டிக்கப்படவோ நிராகரிக்கப்படவோ நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார். (ம-3)













## கோத்தபாயவே ஜனாதிபதி என்பது உறுதியாகியுள்ளது

### எதிர்க்கட்சி தலைவர் மகிந்த

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்பார் என்ற நம்பிக்கை எல்பிட்டிய தேர்தல் ஊடாக ஏற்பட்டுள்ளதென எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குருநாகலில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

எல்பிட்டிய தேர்தலில் மாபெரும் வெற்றியை பொதுஜன பெரமுன தற்போது பெற்றுள்ளது.

அதற்கு மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அனைத்து மக்களின் மகிழ்ச்சியான...

போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், வேறு விடயங்கள் பற்றி கரிசனை காட்டுவதை விட பொதுமக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை உருவாக்கிக் கொடுப்பதே பெறுமதியான விடயமாகும்.

அனைத்து குடிமக்களையும் ஒன்றிணைத்து ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதார முன்னேற்றம், சமூக முன்னேற்றம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்கிறார்களா என்று மதிப்பீடு செய்வதே எனது மிகப்பெரிய எதிர்பார்ப்பாகும்.

அதன்படி, மக்கள் மத்தியில் பிரச்சினைகள் இருக்குமாயின் அவற்றுக்கு துரிதமான தீர்வுகளை வழங்கி, தாய் நாட்டினுள் மக்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். ஒரு நாளும் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை.

பொதுமக்களின் காலடிக்கு வரக்கூடிய ஒருவரையே தெரிவு செய்து நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்க வேண்டும். எனவே எனக்கு அந்த பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்றக் கூடிய தகுதி இருக்கின்றது என சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-3)

## மல்லாகத்தில்...

வயதான நடராஜா ஜெயாகரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு மல்லாகம் நீதவான் வருகை தந்ததுடன், சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-3,10,106)

## வல்லிபுர ஆழ்...

நேற்று சனிக்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா முற்பகல் இடம்பெற்றது.

இவ் வேளையில் தமது தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளதாக ஏழு பெண்கள் பருத்தித்துறை பொலிஸில் முறையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## வவுனியாவில்...

வண்டி ஒன்றை அதே வழியில் வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி ஏ9 வீதியில் பயணித்த பட்டா ரக வாகனம் ஒன்று மோதித் தள்ளியது.

இவ் விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த புளியங்குளம், முத்துமாரி நகரைச் சேர்ந்த கறுப்பையா சத்தியநாதன் என்பவர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் நிறுத்தாது தப்பிச் சென்றுள்ள நிலையில், விபத்து குறித்து கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

## தேர்தலில்...

தமக்கு ஆதரவை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அக்கட்சி, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகிய இரு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியிருந்ததாக தெரிவித்துள்ளது.

எனவே, அந்த கட்சிகளும் தங்களுக்கே ஆதரவை வழங்குமென எதிர்பார்ப்பதாகவும், தமது கொள்கைகளை அக்கட்சிகள் ஏற்றுள்ளனர் எனவும் மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## கிளிநொச்சி...

முன்னாள் போராளி ஒருவர் நேற்று முன்தினம் இரவு திருமலையில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நேற்று அம்பாள் குளத்தில் உள்ள அவருடைய வீட்டில் சோதனை நடவடிக்கையை கிளிநொச்சி பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மேற்கொண்டனர்.

தொடர்ச்சியாக மேற்கொண்ட குறித்த சோதனை நடவடிக்கையின்போது வீட்டில் இருந்த கிணற்றுக்குள் இருந்து ரி 56 ரக துப்பாக்கி -1, சிறிய ரக துப்பாக்கிகள்-3, கைக்குண்டுகள் - 5, ரி 57 துப்பாக்கி ரவைகள் - 150, சிறிய ரக துப்பாக்கி ரவை - 45, லப்ரப் - 1, தொலைபேசிகள் - 4, எம் கே.எம் ஜி ரவைகள் - 6, வெடிப்பு கருவிக்கான வயர்கள், வெடிப்பு கருவிகள் - 4, ஜிபிஎஸ் - 1, தானியக்கிகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,9,312,315,350)

## ஜனாதிபதித் தேர்...

முன்னாள் முதல்வரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், நாட்டில் இம்முறை அதிகளவானோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதில் முக்கியமான சிலரை விட ஏனையோர் வேறு காரணங்களுக்காக போட்டியிடுவதற்கு பரிந்துரைக் கப்பட்டிருப்பார்கள் என்று நம்புகின்றேன்.

அதாவது குறிப்பாக சிறுபான்மையினரின் இடங்களில் சிலரை களமிறக்கி அவர்களின் வாக்குகளை பிரிப்பதற்கான ஒரு தந்திரோபாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவே தோன்றுகின்றது.

இதனை யார் செய்கின்றார்கள் என்று கூற முடியாது. தேர்தலில் மூன்று முக்கிய கட்சிகள் தான் உள்ளன. ஏனையோர் சிறுபான்மையினரின் வாக்குகளை பிரிப்பதற்காக போட்டியிடுவதாகவே நான் பார்க்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாருக்கு ஆதர..

ஒவ்வொரு வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்த பின்னர், ஆதரவளிப்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மல்லாவியில்...

அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 3 துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் பொன்னகர், துணுக்காய் பிரதேசத்தை சேர்ந்த 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ள நிலையில், மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## பாடசாலை...

சரண்குமார் (வயது 17) என்ற மாணவனே சடலமாக மீக்கப்பட்டவராவார். இவர் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்று வருகின்றார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)












# விடுதலைப் புலிகளுடன் தொடர்பு

## மேலும் ஐவர் மலேசியாவில் கைது

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மலேசியாவில் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. மலாக்கா, பினாங் மற்றும் செலங்கர் ஆகிய இடங்களில் இருந்தே இவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மலேசியாவில் தடைசெய்யப் பட்ட விடுதலைப்புலிகள் அமைப்புக்கு உதவினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இந்த கைது சம்பவங்கள் தொடர்பில் மலேசிய பொலிஸார் இன்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர்.

கைதுசெய்யப் பட்டவர்களில் ஒருவர் மலேசியாவில் உள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகரகம் மீது தாக்குலுக்கு திட்டமிட்டவர் என்று சந்தேகிக் கப்படுகிறது.

இதேவேளை மலேசியாவில் இந்த வருடத்தில் 284 ஜம்மாத் இஸ்லாமிய உறுப்பினர்கள், 512 ஐஎஸ் தீவிரவாதிகள், 25 விடுதலைப்புலிகளை கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக மலேசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)


## நல்லூரான் திருமண சேவை
### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 பூராடம் உயரம் 5'7" லண்டன் PR கொம்பனியில் பணிபுரியும் மணமகனுக்கு அழகிய மணமகளை இலங்கை மற்றும் வெளிநாட்டில் தேடுகின்றோம். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

தொடர்புகளுக்கு:-
**0764156365/00447404534517**
(Viber / WhatsApp Available)



## பெண் வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவைக் கடைக்கு பெண் வேலையாள் தேவை.
அடிப்படைச் சம்பளம் 13500/-
(C-7887)
தொடர்பு:-
**075 259 2067**



## வீடு வாடகைக்கு

யாழ்.வேம்படி வீதியில் ஒரு அறை, வரவேற்பறை, குளியலறை, சமையலறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(633)
தொடர்பு:-
**077 127 9784**



வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION **070 330 5500** WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-7851)



## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-7539)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
**0768226240**
V2 TRAVELS


# மரண அறிவித்தல்

### திருமதி
## சரஸ்வதி கந்தசாமி (குஞ்சுமணி)



தோற்றம் 1946.10.26 | மறைவு 2019.10.12

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டி ஆலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தசாமி (குஞ்சுமணி) அவர்கள் 12.10.2019 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - மகாலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் (தவில் வித்துவான்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான .பல்லவி இராசதுரை, சின்னராசா, சிவசாமி, இராசமணி மற்றும் இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலைச்செல்வி (கலா), கல்யாணி (சாந்தி), சிவகுமார் (தவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீஸ்கந்தராசா (ஸ்ரீ-நாதஸ்வரம்), சிவகுமார் (சிவா-தவில்), சந்திரவேணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுனந்தன் (முகாமைத்துவ உதவியாளர் - சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), புவீதா, நிஹாரிகா (ஆசிரியை - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), கம்சன், நிலானி, நிஷாந்தி, துஷாங்கி, கீர்த்திகா, சுபஸ்திகா, ராஜ்குமார், ராம்குமார், தரணிகா, டயானிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரதித், வைஸ்ணவி, சாம்பவி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் ஒடை, அல்வாய் தெற்கு, அல்வாயில் அமைந்துள்ள அன்னாரின் மகள் திருமதி சிவகுமார் கல்யாணி அவர்களின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:- குடும்பத்தினர்
0779989495
(C-7886)

## 375 முறைப்பாடு பதிவு

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலுடன்தொடர்புடைய 375 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், தேர்தல் விதி மீறல்கள் தொடர்பாக 360 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 9 முறைப்பாடுகளும் மற்றும் வேறு 6 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று மாலை 4.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 106 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஞா)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## பணியாளர் தேவை



கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயார் நிறுவனத்துக்கு பணியாளர்கள் தேவை
● ஆண், பெண் இருபாலாரும்
● சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல.175, கரடிப்போக்கு சந்தி,
A9 வீதி, கிளிநொச்சி.
**077 869 1045**
(634)



## FLORENCE NIGHHTINGAALE
School of Nursing



மிக மிக குறைந்த கட்டணத்திலேயே மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது

படித்துவிட்டு ஒரு நல்ல தொழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் உங்களுக்கான ஒரு
**அரிய வாய்ப்பு**
+ ஒரு வருட பயிற்சி பாடநெறி
+ நிரந்தர வேலைவாய்ப்பு
+ கிழமைகளில் 02 நாட்கள் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறும்.

தகைமை: O/L, A/L
வயது: 18 - 35 வரை

பயிற்சிக் காலத்தில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளலாம்

முகவரி
குஞ்சர் கடையடி, கரணவாய் மத்தி, நெல்லியடி. (சுபாஸ் பேக்கரி மேல் தளம்) T.P- 021 433 8919, 077 2984849
K.K.S Road, மருதனார்மடம். (ஆஞ்சநேயர் கோவில் முன்பாக) T.P- 021 4928916, 0762226438
Hot Line:0777-186438 | f/b:F.N. schoolofnursing | Viber - 076 222 6438



## FALC FRENCH LANGUAGE CENTRE

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
**பிரெஞ்சு**
DIPLOMA DELF A1,A2,B1,B2
(C-7852)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் :15.10.19 செவ் 2 மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 ஆரம்பம் :28.10.19 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



## காணி விற்பனை

1. புன்னாலைக்கட்டுவன் ஈவினையில் 61 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
2. திருநெல்வேலி முருகன் வீதியில் (இராமசாமிச் சந்தி) 27 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(618)

தொடர்புகளுக்கு:- **077 728 6061**



## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226241**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் 02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |

V2 Travels www.facebook.com/v2tandt
(C-7881)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 238

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 13.10.2019 | தொலைபேசி : 021 222 3378



## பொறிபறக்கும் தேர்தல் பிரசாரம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இதனைத் தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். பார்லிமென்ட் இராசதுரை அவர்கள் கனடாவில் காலமாகி விட்டார். பாராளுமன்றத்தில மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய இராசதுரை அவர்கள் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வலம்புரி நாளிதழ் அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றியவர்.

அவரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் மிகச் சிறந்த நாடகக் கலைஞரான தா.சு.லோகநாதன் அவர்கள் காலமாகி விட்டார் யாழ்ப்பாண மாநகர சபையில உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கலாபூஷணம் லோகநாதன் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர்.

இவரின் மறைவுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இருவருக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

இன்னும் எங்கட கங்காணி கார்த்திகேயனைக் காணவில்லை என்று மூப்பர் குரல் கொடுத்தார்.

நெல்லு விதைப்பு அறம்புறமாக நடக்குது. வயல் வேலையில நிற்பார் போல சாத்திரியார் சதாசிவத்தின் அனுமானத்தை ஆலடி அங்கீகரித்துக் கொண்டது.

அதுசரி அச்சுவேலியைச் சேர்ந்த ஒரு லோயர் மரணமடைந்ததற்குத் தவறான சிகிச்சை தான் காரணம் என்று அவரது பிள்ளைகள் குற்றம் சாட்டியுள்ளனர். சிறாப்பர் கனகசபை கூற என்ன சங்கதி என்று விதானையார் விசுவலிங்கம் வினவினார்.

**சிறாப்பர்:** அச்சுவேலியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் பூநகரியில விபத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டிருந்தவர். பின்னர் அவருக்கு குழாய் மூலம் உணவு வழங்குகிற போது ஏதோ சிகிச்சையில ஏற்பட்ட சிக்கலால் அவர் இறந்து விட்டார்.

இறந்தவரின் உடலை அவரது பிள்ளைகள் கொழும்புக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்த போது, சிகிச்சையில் ஏற்பட்ட தவறு காரணமாகத் தான் இறப்பு நடந்தது என்று றிப்போட் வந்திருக்குது.



## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முயற்சி எப்படி உள்ளது

**வாத்தியார்:** சிறாப்பர் இதுகளெல்லாம் இங்க கதைக்கக் கூடாது. பிழை, குறை சொன்னால் இங்க ஒருவருக்கும் பிடிக்காது. வேற கதையைக் கதையுங்கோ.

வாத்தியார் இப்படிக் கூறியதும் கோபமடைந்த சிறாப்பர், அப்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் அரசியல் கட்சிகளை ஹோட்டலில சந்தித்துக் கலந்துரையாடிய கதையைக் கதைக்கலாமோ?

**வாத்தியார்:** சிறாப்பர் காலம் பிழைச்சுக் கிடக்குது. எங்கும் இரகசியமான நடவடிக்கைகள் நடக்குது. உதில நாங்கள் மௌனமாக இருப்பம்.

**சாத்திரியார்:** வாத்தியார் இப்படிச் சொல்லுறதை நான் ஏற்க மாட்டன். என்னைப் பொறுத்த வரை சரியானதை சரியென்றும் பிழையைப் பிழையென்றும் துணிந்து சொல்ல வேணும். அதுதான் நல்லது.

**பண்டிதர்:** சாத்தியார் சொல்லுறது நியாயம் தான்.

ஆனால் தமிழ் மக்கள் பேரவையால நியமிக்கப்பட்ட சுயாதீனக்குழு எடுத்த முயற்சிகளை முறியடிக்கிற வகையில திரை மறைவு நாடகங்கள் நடந்திருக்கிற போது வாத்தியார் சொல்லுற மாதிரி மௌனமாக இருக்கிறது தான் நல்லது எண்டு நான் நினைக்கிறன்.

**மூப்பர்:** உண்மைதான் சுரேஷும் சித்தார்த்தனும் இருக்கிறதால தமிழ் மக்கள் பேரவைக்குத் தாங்கள் வர முடியாது எண்டும் அந்த இருவரையும் பேரவையில இருந்து வெளியேற்ற வேணும் எண்டும் கேட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு யாழ்.பல்கலைக்கழக மாணவர் கூட்டிய கூட்டத்தில சுரேஷ், சித்தார்த்தன் பங்குபற்றிய போது கஜேந்திர குமார் பொன்னம்பலம் தரப்பில இருந்து சட்டத் தரணிகள் மணிவண்ணன், சுகாஷ் ஆகியோர் கலந்து கொண்டவியள் தானே. அப்ப பேரவைக்கு விதித்த நிபந்தனை இந்த இடத்தில கைவிடப்பட்டிருக்குது எண்டால் ஏதோ பின்னணி இருக்கத்தானே செய்யுது.

**விதானையார்:** சில வேளை விக்னேஸ்வரன் ஐயாவில கோபமாக இருக்கும்.

**சாத்திரியார்:** விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியில இருந்தும் இரண்டு பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்தில பங்கு பற்றினவியள் தானே.

இவ்வாறு சாத்திரியார் கூற இடையில குறுக்கிட்ட வாத்தியார் தேவையில்லாத கதையை விடுங்கோ. என்னைப் பொறுத்தவரை எல்லாரும் அரசியல் நடத்துகினம்.

நவம்பர் 16 ஜனாதிபதித் தேர்தல். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின்ர முயற்சிகள் என்ன கட்டத்தில உள்ளது என்பது கூடத் தமிழ் மக்களுக்குத் தெரியாமல் இருக்குது. இதில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளிப்படைத் தன்மையோட நடந்து கொள்ள வேணும். தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்திறது என்பது அவசியம்.

இதில மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால் ஒற்றுமை முயற்சி நடக்குதோ அல்லது காலம் கடத்துகிற வேலை நடக்குதோ என்ற சந்தேகம் மக்களிட்ட எழுந்துள்ளது.

என்வே இதுக்கு உரிய பதில் அளிக்கிற பொறுப்பு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சார்ந்தது.

**விதானையார்:** யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால எடுக்கப்படுகிற தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துகிற முயற்சியை நாங்கள் வரவேற்கிறம். அந்த முயற்சி வெற்றி தரும் என்ற நம்பிக்கை இருக்குது.

அதிலும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் பணியில சுயாதீனக்குழு எடுத்த முயற்சியையும் முறியடிக்கும் வகையில யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முந்தியடித்துக் கொண்டு ஒற்றுமை முயற்சியில ஈடுபட்டுள்ளது.

எனவே ஒற்றுமைப்படுத்தும் தங்கட முயற்சி எந்தளவில இருக்குது என்பதை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்த வேணும்.

தவிர ஏதும் குழப்பங்கள் நிகழ்ந்தால், குழப்பியது யார் என்ற விடயத்தையும் மாணவர் ஒன்றியம் அறிக்கையாக வெளிப்படுத்த வேணும்.

இவ்வாறு விதானையார் கூற அதனை ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயனின் பேரன் ஆலடிக்கு விரைந்து வந்தார். மோட்டார் சைக்கிள் விபத்தில தாத்தா காயப்பட்டுப் போனார் என்று கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள் ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடி யில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையாரை வணங்கி விட்டுப் பெரியாஸ்பத்திரிக்கு வந்தனர்.

ஆதித்தன்

# தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துதல்

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை கட்டியுள்ளது. சஜித் பிரேமதாஸ, கோத்தபாய ராஜபக்ஷ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கொட்டி முழங்குகின்றனர். உறுதிமொழிகள், உத்தரவாதங்களுக்குக் குறைவே இல்லை.

இதில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க களமிறங்கியுள்ளார். அதேபோல் கோத்தபாய ராஜபக்ஷவுக்காக அவரது சகோதரன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கர்ச்சித்துத் தள்ளுகிறார். அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவாக அவரது கட்சித் தலைவர்கள் கடுமையாகப் பாடுபடுகின்றனர். இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யார் பக்கம் என்று கேட்கும் போது, நடுவுநிலையில் நிற்கப் போகிறேன் என்பதாக அவரின் பதில் அமைந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிப்பதாகத் தீர்மானித்த நிலையில், நடுவுநிலை வகிக்கப் போகிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித் திருப்பதானது, ஆச்சரியமான முடிவு. எனினும் இதை விட்டு வேறு எந்த முடிவையும் எடுப்பது அவரின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்ற அடிப்படையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தனிப்பட்ட முடிவு சரியானதே.

எதுவாயினும் கோத்தபாய ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரிப்பதானது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு உடன்பாடான விடயமல்ல என்பதும் தெரிய வருகிறது.

எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் கோத்தபாயவை ஆதரிப்பதாக இருந்தாலும் சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பது தான் நம் மத்தியில் இருக்கக் கூடிய முதன்மை விடயம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற கேள்வி எழுகின்ற போது அதற்கான தெரிவு என்பதைப் பல காரணங்கள் தீர்மானிக்கும். இந்தக் காரணங்களை முதன்மைக் காரணமாகவும் துணைக் காரணமாகவும் பிரித்து நோக்கலாம்.

தமிழ் மக்களின் தெரிவு என்ற விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஓர் உடன் பாட்டை ஏற்படுத்துவது மிகமிக அவசியமானதாகும்.

தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் ஏற்றுக்கொண்ட முடிவை தமிழ் மக்களிடம் தெரியப்படுத்துவது, அதனை நடைமுறைப்படுத்துவதும் அவசியமான செயற்பாடாகும்.

இது விடயத்தில் தமிழ் மக்கள் பேரவை சிந்தித்துச் செயலாற்றியது.



ஆம், நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், துறைசார் வல்லுநர்கள், அரசியல் ஆய்வாளர்கள் என்போரை உள்ளடக்கியதான சுயாதீனக் குழுவொன்றை தமிழ் மக்கள் பேரவை உருவாக்கியது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சுயாதீனக்குழு தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்து ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதென்றும் குறித்த சுயாதீனக்குழு தனித்துவமாக இயங்குமெனவும் அறிவிக்கப்பட்டதுடன் சுயாதீக் குழுவில் இடம்பெற்றவர்களின் பெயர் விபரங்களை வெளிப்படுத்தியதுடன் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாளுவது என்ற விடயத்தை தமிழ் மக்கள் பேரவை சுயாதீனக் குழுவிடம் முழுமையாக ஒப்படைத்து விட்டு தேவையான வசதிகளை வழங்கும் பணியை மட்டும் செய்தது.

இங்கு சுயாதீனக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்களின் விபரம் வருமாறு,

சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜெபரட்ணம் அடிகளார், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவல், தென்கயிலை ஆதீன சுவாமி அகத்தியர், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கு.குருபரன், சட்டத் துறை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், அரசியல் ஆய்வாளர் அ.ஜோதிலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், சமூக செயற்பாட்டாளர் எஸ். குருநாதன், மருத்துவர் எஸ்.சிவபாலன், அருட்திரு. சக்திவேல், அ.கஜேந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தேவை கருதி பொருத்தமானவர்களைக் குழுவிற்குள் இணைக்கின்ற அதிகாரமும் சுயாதீனக் குழுவுக்கு இருந்தது. இந்த அடிப்படையில் அருட்திரு சக்திவேல், சமூக செயற்பாட்டாளர் கஜன் ஆகியோர் சுயாதீனக் குழுவால் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளைச் சந்தித்து பொது உடன்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சியில் அவசர அவசரமாக ஈடுபட்ட சுயாதீனக் குழு, தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தன.

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருடனான சந்திப்பு ஏற்படுத்தப்பட்டது. சின்மயாமிஷன் சுவாமிகள் சிதாகாசானந்தா அவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்திப்புக்கான நேர ஒழுங்கைச் செய்திருந்தார். அதேநேரம் வெளிநாட்டில் இருந்து கொழும்பு திரும்பியிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கொழும்பில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுடன் சந்திப்பு இடம் பெற்றது.

தனித்தனியாக இடம்பெற்ற சந்திப்பின்போது அனைத்து தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் ஒரே மேசையில் சந்தித்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒரு பொதுத் தீர்மானத்தை எடுப்பதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர். அதற்கான ஏற்பாட்டுப் பணிகளில் சுயாதீனக் குழு தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பை அதிரடியாக ஏற்படுத்தியபோது அதுபற்றி எந்தத் தகவலும் தெரியாத சுயாதீனக் குழு அதிர்ந்து போனமை நிஜமானதே. இதைக் கூறுகின்ற போது இல்லை சுயாதீனக் குழுவில் இடம்பெற்றிருந்த ஒருசிலருடன், தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்புப் பற்றித் தெரிவித்திருந்தோம்.

ஆனால் சுயாதீனக் குழுவிடமும் இதுபற்றி ஒருக்கால் கதையுங்கள் என்பது பற்றி அவர்கள் எதுவும் கூறவில்லை என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாயினும் ஒரே கோட்டில் பயணிப்பவர்கள் ஒன்றுபட்டு பயணித்தால் பயன் உச்சமாகும் என்பதை மட்டுமே இங்கு கூறிக்கொள்ள முடியும்.

மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், துறை சார்ந்த வல்லுநர்கள் என்ற பன்முக ஆளுமையை ஓரங்கட்டிவிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாத்திரம் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்த முற்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையோ அன்றி சுயாதீனக் குழுவோ வியாக்கியானம் செய்யப் போவதில்லை என்பது தெளிவு. மாறாக தாம் எடுத்த முயற்சியை இறைவன் பெயரால் நடுவுநிலை நின்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செய்ததாக வேண்டும்.

அவர்களின் இந்த முயற்சி யாருடைய பெருமைக்காகவும் யாருடைய தேவைக்காகவும் யாருடைய திசை திருப்பலுக்காகவும் இருந்து விடக் கூடாது என்பது தான் இங்கு மேலோங்கி நிற்கின்ற விடயம்.

இதில் தவறுகள் இடம்பெறுமாயின் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் அதில் ஈடுபட்ட மாணவர்களுமே முழுப் பொறுப்பையும் ஏற்றாக வேண்டும் என்பதால் எடுத்த முயற்சியை வெற்றிகரமாக்குவது அவர்களின் பாரிய பொறுப்பாகும்.

**திருநீலகண்டன்**




# இரண்டு சீடர்கள்


ஒரு தெய்வீக தன்மை வாய்ந்த மகரிஷி ஒருவரிடம் இரண்டு இளைஞர்கள் வந்து "சுவாமி நாம் தவம் பழகி ஆத்மஞானம் பெற விரும்புகிறோம். எம்மை சீடர்களாக ஏற்றுக்கொள்ளவும்'' என வேண்டினார்கள்.

மகரிஷி இளைஞர்கள் இருவரையும் தம்முடன் ஆச்சிரமத்தில் தங்க வைத்தார். மகரிஷி தாமாகவே உபதேசம் செய்வார் என காத்திருந்தனர். ஆனால் நாட்கள் கடந்தன. மகரிஷி உபதேசம் செய்யும் அறிகுறி தென்படவில்லை. மனம் வருந்திய சீடர்கள் மகரிஷியிடம் சுவாமி எமக்கு தாமதிக்காமல் உபதேசம் செய்து வைக்க வேண்டும் எனப் பணிவுடன் வேண்டினர்.

மகரிஷி கருணை ததும்ப அவர்களிடம் நல்லது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிவலிங்கம் தருகின்றேன். அதை யாரும் பார்க்காத இடத்தில் வைத்து விட்டு வாருங்கள். அதன்பின் உங்களுக்கு உபதேசம் செய்கின்றேன் எனக் கூறி இருவருக்கும் சிவலிங்கத்தினை கொடுத்தார். மகரிஷியை வணங்கி இருவரும் சிவலிங்கத்துடன் வேறு வேறு திசைகளில் சென்றனர்.

காடு, மேடு, மலை என்று சுற்றிய ஒரு சீடன் மனித சஞ்சாரமற்ற ஒரு குகையைத் தேர்ந்தெடுத்து குரு கொடுத்த சிவலிங்கத்தை இரகசியமாக புதைத்துவிட்டு ஆசிரமத்திற்கு திரும்பி வந்து விபரம் தெரிவித்து குருவின் கட்டளையை நிறைவேற்றிய திருப்தியுடன் இருந்தான்.

மற்றைய சீடனோ குருவின் கட்டளைப்படி சிவலிங்கத்தை வைக்க காடு, மலைகள் எல்லாம் திரிந்தார். அவன் எங்கு




உள்ளான், என்ன ஆனான் என்ற செய்தி எதுவும் ஆசிரமத்திற்கு கிட்டவில்லை. மிக நீண்டகாலம் கழித்து அந்தச் சீடன் மகரிஷியை வந்து வணங்கி அவர் கொடுத்த சிவலிங்கத்தை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு சுவாமி தாமதித்து வந்ததற்கு மன்னியுங்கள். இந்தச் சிவலிங்கத்தை ஒருவரும் காணாத இடத்தில் வைக்க என்னால் முடியவில்லை. எவ்வளவு முயன்றும் தோல்விதான் ஏற்பட்டது. மிகவும் இரகசியமான இடங்களை தெரிந்து எடுத்தபோதும் என் உள்ளத்தில் இருந்து நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்ற குரல் கேட்டபடி இருந்தது. இப்போது கூட நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற குரலைக் கேட்கின்றேன். அது யாருடைய குரல். அவனையும் பார்க்க விடாமல் செய்தால்தான் இந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியும். நான் எங்கே சென்றாலும் என்னுடன் வரும் அவன் யார்? அவனை நான் எப்படி பார்க்க விடாமல் தடுப்பது? அது காரணமாகவே இந்தச் சிவலிங்கத்தை ஓரிடமும் வைக்க முடியவில்லை. தங்கள் கட்டளையை நிறைவேற்றாத குற்றத்திற்கு எத்தண்டனையாவது கொடுங்கள் எனக் கூறி நின்றான்.

சீடன் அப்படிச் சொன்னவுடனே மகரிஷி அவனை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டு ''மகனே நீ உண்மையை உணர்ந்துவிட்டாய். தண்டனை தரும்படி கேட்கும்போதே பரிசு பெறும் தகுதி உனக்கு வந்துவிட்டது. உன்னுள் காட்சியாகக் குடிகொண்டிருக்கும் பரம் பொருளை நீ அறிந்துவிட்டாய். அவனே ஆத்மா எனப்படுபவன். அவன் அங்கிங்கௌாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான். இப்பெரிய உண்மையை நீ உணர்ந்து கொண்டதே உனக்கு உபதேசமாகும்'' என்றார்.

இறைவன் அங்கிங்கௌாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடம் என்று எந்த ஓர் இடமும் இல்லை.

உன் நாராயணன் எங்கேயடா இருப்பான்? என்று இரணியன் பிரகலாதனைக் கேட்டபோது அவன் எங்கும் இருப்பான். தூணிலும் துரும்பிலும் இருப்பான் என்றான் பிரகலாதன். பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பது. பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணாந்தம் எனத் தாயுமானவர் பாடுகின்றார்.

-சிவனடியான்-



அஜந்தன், தரம் 4,
ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம், SOS சிறுவர் கிராமம்.

## விடுகதைகளும் விடைகளும்

- மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார்?
  காளான்
- யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும் அது என்ன?
  கண் இமை
- அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?
  வெங்காயம்
- வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?
  ஆறு
- கழற்றிய சட்டையை மறுபடியும் போடமாட்டான் அவன் யார்?
  பாம்பு
- அள்ள அள்ளக் குறையாது ஆனால் குடிக்க உதவாது அது என்ன?
  கடல்நீர்
- முள்ளுக்குள்ளே முத்துக்குவலயம் அது என்ன?
  பலாப்பழம்

- குலத்துக்கு ஈனம் கோடாலிக்காம்பு.
- மிஞ்சியது கொண்டு மேற்கே போகுதல் ஆகாது.
- மரம் வெட்டுகிறவனுக்கு நிழலும் மண் தோண்டுகிறவனுக்கு இடமும் கொடுக்கும்.
- நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்.
- நாலாறு கூடினால்பாலாறு.
- தண்ணீர வெந்நீர ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
- கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்.



வோ.கனிஷா, தரம் 9 ஏ,
யா/கனகரத்தினம் ம.ம.வி. SOS சிறுவர் கிராமம்.



ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துவிட்டது போல இருக்கிறதே?




தியாகத்தில் சிறந்தவன் திலீபனா-மில்லரா?



நாளுக்கு நாள் விபத்தில் இளைஞர்கள் உயிர் பறிபோய்க் கொண்டே இருக் கிறதே?

**சிவன் — வதிரி**

நாளுக்கு நாள் விபத்தில் இளைஞர்கள் உயிர் பறிபோய்க் கொண்டே இருக் கிறதே?

ஏன்தான் இப்படி என்று புரியவில்லை. கொடிய போரால் அழிக்கப்பட்டோம். இப் போது வீதி விபத்திக்களால் எம்மை நாமே அழித்துக் கொண்டிருக்கிறோம்.

வேகம் புழுகம் தரவல்லது தான். அதற்காக விசும்பு வேகம் உயிரை எடுக்கவல்லது.

நடந்த விபத்துக்களை ஆராய்ந்தால் இவை புலப்படும். விபத்து, உயிரிழப்பு இவற்றுடன் எல்லாம் முடிந்து விடுகிறதா? இல்லையே அதன் பின் அந்த குடும்பம் படும் பாட்டை உணர்ந்தால் விசும்பு வேகம் குறைக்கப்படும். உயிரிழப்புகள் நிறுத்தப்படும்.

**தாரு — யாழ்ப்பாணம்**

சிவகார்த்திகேயனின் நம்ம வீட்டுப்பிள்ளை எப்படி?

நீண்ட காலமாகத் தடுமாறிக் கொண்டிருந்த சிவ கார்த்திகேயன் இப்போதுதான் சரியான றூட்டைப் பிடித்திருக்கிறார்.

அதில் நம்ம வீட்டுப் பிள்ளை நல்ல குடும்பப் படமாக இருப்பதால் குடும்பத்துடன் சென்று பார்க்கிறார்கள். இதுவரை தமிழகத்தில் மட்டும் 12 கோடிக்கு மேல் வசூலாகி விட்டது.

இந்தப் பாதையை விடாமல் பிடித்தால் சிவ கார்த்திகேயனுக்கு வெற்றிப் படம்தான்.

மிஸ்ரர் லோக்கல் பாதையில் சென்றால் பாதாளம் தான்.

**ஜீபா — கரவெட்டி**

நாம் பெற்ற பிள்ளைக்கு நாம் தானே பெயர் வைக்க வேண்டும்?

அது என்னவோ உண்மைதான். ஆனால் ஏழு கழுதை வயதாகிய பிறகும் நீங்கள் வைப்பது தான் பெயர் என அங்கே போய் நிற்கிறதே எம் தலைமை. இந்த இலட்சணத்தில் நாம் ஆண்ட பரம்பரை வீரப்பரம்பரை என்ற புளகாங்கிதம்வேறு.

எல்லாம் காலக் கொடுமை. ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்த இனம் என்கின்ற அடையா ளம் மட்டுமே இப்போது எம்மிடம் இருக்கிறது.

எம்மிடம் இருந்த அனைத்தும் கொப்பி செய்து தம்மிடம் பேஸ் பண்ணி விட்டுவிட்டார்கள். இப்போது தம்மிடம் நாம் கொப்பி பண்ணி யதாய் முந்திக் கொள்கிறார்கள் அவ்வளவு தான்.

**சுதன் — குப்பிளான்**

நாட்டை தற்போது இயக்குவது கூட்ட மைப்பா? ஐ.தே.கவா?

தம்பி, கைக் கயிற்றை மீறிய அடங்காத காளை போல நாடு ஓடிக்கொண்டிருக்கிறது. இப்போது யார் கையிலும் கயிறு இல்லை. அந்தக் கயிற்றைப் பிடிப்பதற்கு பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ முண்டியடிக்கிறார். கூட்டமைப்பும் ஓடு கிறது தான். இந்த ஓட்டம் கயிற்றைப் பிடிப் பதற்கான ஓட்டமல்ல, கயிற்றை யார் பிடிக்கி றார்களோ அவர்களை தாம் பிடித்துவிட வேண்டும் என்று ஓடுகிறார்கள்.

தமிழ் மக்கள் முட்டாள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பிள்ளையில்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடியது போல துள் ளுகிறார்கள். துள்ளட்டும் எவ்வளவு நாளை க்கு என்பதைப் பார்த்து விடுவோம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தமிழிசை — வேலணை**

பார்வை இழந்தவர்கள் வாழும் தெருவிற்கு தெருவிளக்கு எதற்கு?

அடப்பாவி விட்டால் சூரியனே எதுக்காக எண்டு கேட்பீர்கள் போல.

ஓ... இதில் கம்பரெலிய என்கின்ற கறுமம் ஏதும் இருந்தால் வெளிப்படையாகச் சொல்லுங்கள். குறைகளை பதிகத்தில் போட்டு வாட்டி எடுத்து விடுகிறோம்.

**சகால் — மந்துவில்**

நம்ம ஆட்களுடைய பல்டி அடிப்புக்கள் ஆரம்பித்து விட்டது போல?

ஓ.... அதற்கு தாமதமே இல்லை. ரணில் சரிவர மாட்டார். மைத்திரியால் முடியாது என்று அறிக்கைப் பல்டி அடிக்கத் தொடங்கி விட்டார்கள். என்னமோ தமிழினம் படும்பாட்டைப் போக்க ஒரு நல்ல தலை வன் வருவான் என்று அடிமனதில் ஒரு குரல் ஒலித் துக் கொண்டே இருக்கிறது.

**இந்து — வடமராட்சி**

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துவிட்டது போல இருக்கிறதே?

ஓம் ஓம் தமிழர்களின் ஓட்டுகளை அள்ள ஆளாளுக்கு அடித்து விடுகிறார்கள்.

எல்லாம் தேர்தல் முடியும் வரை என்பது எமக் கும் தெரியும். ஆனால் இந்த தேர்தல் விளை யாட்டு ரெம்ப இன்ரெஸ்ரிங்கா இருக்கு. அத னால் விளையாடிப் பார்ப்போம் என தமிழ் மக்கள் நினைக்கிறார்கள் போல.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

வாக்குறுதிகள் அள்ளி வழங்கப்படுகிறதே, நிறைவேற்றப்படுமா?

தம்பி தமிழ், மேற்குப் பக்கம் வெளித்துப் பார்த் திருக்கிறீரோ?

இந்த வாக்குறுதிகளும் மேற்கு வெளிக்கும் என்பது போலத்தான். பேச்சளவில் சொல் லாம். செயலளவில் செய்ய முடியாது.

**திகழன் — யாக்கரு**

சரணடைந்த புலிகளையும் விடுதலை செய்வார்களா?

அதுதான் சரணடைந்தவர்கள் என்று எவரும் இல்லை என்று அடித்துக் கூறிவிட்டார்களே இனி என்னவாம்.

**டிலு — முள்ளியவளை**

இன்றைய ஆண்கள், பெண்களின் அழகையா- பணத்தையா- கல்வி யையா விரும்புகின்றார்கள்?

பறவைகள் பல விதம். ஒவ்வொன்றும் ஒரு விதம் என்கிறார்களே. ஒவ்வொருத்தருக்கும் தனித் தனி விருப்பங்கள்.

ஒருவருக்குப் பிட்டுப்பிடிக்கும். இன்னொரு வர் சீ பிட்டு மனிதன் சாப்பிடுவானா? இடி யப்பம்தான் நல்ல உணவு என்பார். இது தான் மனித குணம்.

**திலீப் — அல்வாய்**

தியாகத்தில் சிறந்தவன் திலீபனா- மில்லரா?

ஒருவரிடம் போய் உமக்கு வலது கண்ணா, இடது கண்ணா முக்கியம் என்று கேட்பது போல இருக்கிறது உமது கேள்வி. தியாகங்களை எடை போட்டுவிட முடியாது. தியாகம் என்றாலே அது எல்லை கடந்து விடுகிறது.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## பெருமையின் வறுமை

அகோர தாண்டவத்தில்
அந்தரிக்கிறது பாதாளம்
பசுமைகள் ஈன்று
பலவுயிர் சுமந்து
பக்குவம் செய்யும்
பூமித் தாயவள்
கருவறை காவிட
கங்கணம் கட்டும் மானிடம்
இயற்கையை இயந்திரமாக்கி
அறிவினை அகோரமாக்கி
பாதாள சுவடுகள் முதல்
ஆகாய சொர்க்கம் வரை
மூர்க்கத்தனமாய்
முண்டியடித்து சண்டிய
பலத்தில் கிண்டிக் கிழிக்குது
பாவம் பாதாளம்
கனவு இழந்த வெறுமையோடு
கண்ணீர் சிந்த நீருமற்று
காய்ந்து வறண்டு
கருகிச் சுருண்டு
வெறுமை உலகு வறுமையில்
தவிக்குது
இதில் பெருமை என்னவோ?
சிறுமை என்னவோ?



யாழ். வாகீசன்

## இத்தனையும் போதுமம்மா



உன் மடித் தொட்டிலில்
எனதுறக்கம் குழைத்துவிடக்
கூடாதென்று கொசுக்கடியோடு
அகிம்சை புரியும் மெலிந்த கால்கள்...
உறக்க உலகில் திடுக்கிட்டெழும்
தருணங்களிலெல்லாம்
தழுவித் தழுவி தூங்க வைக்கும்
உன் வறண்டு போன கரங்கள்...
கற்பனையில் தோன்றும் என் ஆசைகளை
காட்சியில் படைக்கும் உன் உழைப்பு...
எறும்பொன்று கடித்தாலே
ஏங்கிக் கசியும் உன் விழிகள்...
ஒரு பாதி எனக்கும்
மறுபாதி உனக்குமென
ஓயாது துடிக்கும் உன் இதயம்...
என் முத்தமிடலின் எச்சில்களை
முகப்பூச்சாக எண்ணிக் கொள்ளும்
உள்ளீர்த்த உன் கன்னங்கள்...
எத்தனை பிறவிகள் நானெடுத்தாலும்
உந்தன் பிள்ளையாக உதித்திட
இத்தனையும் போதுமம்மா!

விவேகானந்தனூர் சதீஸ்,
கிளிநொச்சி.

## மீண்டு எழு

பெற்றவர் உறவு மற்று
உற்றவர் துணையும் அற்று
கற்று நீ கொண்ட பாடம்
தமிழனாய்ப் பிறந்தது தான்
ஒற்றையில் உன்னைப் போல்
பற்றிடும் நெஞ்சத்தீயில்
பாதியும் மீதியுமாய்ப்
பல பாலகர் தெருவழியே
பாதகம் கொண்ட வெறியில்
பாவிகள் கொன்ற உயிரில்
மீதியே நீயே குழந்தாய்
ஆதியும் அந்தமுமாய்
தமிழ் சொத்துக்கள் நீயே
அலை தமிழாய் மீண்டு எழுவாய்

சி.சிறி, நெடுந்தீவு.

## கன்னித் தமிழின் மகளவள்

வண்ண வண்ண விழியாள்
வழவான கனிமொழியாள்
சின்ன விழி அசைப்பாள்
சிரித்தே முறைப்பாள்
எண்ணத்தில் சிறியவள்
என் நெஞ்சில் இருப்பவள்
கன்னித் தமிழின் மகளவள்
கண்டோர் மனதில் நிலைப்பவள்
என் நெஞ்சைக் கொள்ளை கொண்டவள்
அகவை மூன்றில் கால்பதிக்கும்
என் அன்புக் கினிய மழலையவள்

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

## அரசியல் பிழைத்தோர்க்கு....

01

என்னடா இது
கண்டபடி எழுதுறனெண்டு
கண்டு கொள்ளாமல்
விட்டுடாதேங்கோ
கண்டதை எழுதுறன்
கண் கண்டதை எழுதுறன்

உண்ட வீட்டுக்கு
இரண்டகம் செய்த
உண்மையை எழுதுறன்
ஊதிப் பெரிதாக்கி
ஒண்டும் செய்யேல்ல

உண்மையை மட்டும்
உள்ளதாய் எழுதுறன்

தமிழினம் என்றொரு
பாவப்பட்ட இனமொன்று
பரிதவித்துக் கிடந்திட
யார் கண் பட்டதோ?

யார் கண்ணும் படவில்லை
வேலிகள் பயிரை மேய்ந்த
வெட்கம் கெட்ட கதை

வேடங்கள் போட்டு
வேட்டையாடிய கதை

நம்ப வைத்து நம்
கழுத்தறுத்த கதை

நயவஞ்சகமாய் நாம்
தோற்கடிக்கப்பட்ட கதை

பஞ்சம் பட்டினியுடன்
நாம் கிடந்து தவிக்க
ஏசிக்குள் ஒளிந்திருந்து
அறிக்கை விட்ட
அநியாயக் கதை

எல்லாம் சொல்லுறன்
எதுவும் புனைவில்லை
கவனமாய் கேளுங்கோ..

(அடுத்தவாரம் வாறன்...)

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 468




## அவலக் குரல்

பசியுடன்
பட்டினியாகக்
கிடக்கும் நாம்
ஒருவேளை
உணவிற்காக
கைகளில்
தட்டுக்களை
ஏந்தியபடி
எழுப்புகின்ற
அவலக் குரல்
உங்களுக்குக்
கேட்கவில்லையா?

இ.தனுப்பிரியன்
தொல்புரம் கிழக்கு.

## மௌனத்தின் தேடல் -469



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புண்ணியம்

ஏய் மனிதா!
கடவுளைத் தேடி நீ கோயில்
கோயிலாய் அலைகிறாய்
கையில் தட்டுடன்
உணவுக்காக காத்திருக்கும்
இந்தச் சிறுவர்கள் மனதில் கடவுள்
வசிப்பதை அறியாமல்
ஆகவே இந்தச் சிறுவர்களுக்கு
நீ உணவளித்திடு
கடவுள் மனம் மகிழ்ந்திடும்
உன் வாழ்வில்
புண்ணியம் சேர்ந்திடும்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை.

## பசியும் தாகமும்

பசியும் தாகமும் தேவை வாழ்வுக்கு
தத்துவமது தான் வயிற்றையே
கிள்ளும் பசியால் வழி உண்டா படிக்க
நோய் வரும் போது நொய்ந்த உடலில்
மாய்ந்து உயிர் மடிந்து
மழலைகள் மதிப்பு எங்கே

கந்தவாசன் கரம்பொன்.

## பஞ்சமும் அச்சமும்

வெற்றிக் கண்ணாய்
நெருப்பைக் கக்கினாலும்
குற்றம் குற்றமே
நற்றமிழ் நக்கீரரின்
இந்த வைராக்கியம்
பின் வந்த பாரதியிடமும்
நிறைந்திருந்தது
குறைகளை திருத்த
இன்றும் தேவைப்படுவது
தனி ஒருவனுக்கு
இல்லை உணவு எனில்
இவ்வுலகை அளித்திடும்
தார்மீகக் கோபத்தை
பாரில் உள்ளோர்
புரிந்து கொண்டால்
பஞ்சமும் பசியும் கூட
அஞ்சியே விலகிடும்.

ச. வரதலிங்கம்
சாவகச்சேரி.

## கௌரவம்

சிறார்கள் பசியால்
துடிக்கின்ற போது
துப்பாக்கி போன்று
சுட்டுவிரல் நீட்டல்
நாட்டு நிலைமையை
வெட்ட வெளிச்சமாக்கும்
கொடுமையிலும் கொடுமை
இளமையில் வறுமையென
ஔவைப் பாட்டி சொல்
ஓவியம் தீட்டினார்
கோடிகள் கடன் பட்டு
கோபுரம் கட்டுவதை விட
கோரப் பசி போக்கலே
கௌரவமான செயல்

க.நாகராசா
சாவகச்சேரி.

## அழுவதை நிறுத்து

யார் தடுத்தாலென்ன
போராடத் திராணியில்லையேல்
பட்டினி இன்றைக்கு மட்டுமல்ல
உன் எதிர்கால
சந்ததிக்கும் தான்
கொத்தடிமையாக்கும்
கொள்ளைக்காரர் இவர்கள்
அதனால் அழுவதை நிறுத்து
ஆத்திரம் கொள்
வறுமை போக்கும்
சூத்திரம் காண்
உழைப்பவர்க்கே
இவ்வுலகென்று
உரத்து அழைப்பு விடு
சுற்றும் உலகு உன் பின்னால்

மாயா
யாழ்ப்பாணம்.

## யார் செய்த துரோகம்

பசி வந்தால் பத்தும்
பறந்திடும்-பாலகருக்கும்
பசியின் வேதனை
உணவைக் கண்டதும்
அலை மோதி ஏக்கித் தவிக்கும்
சின்னஞ் சிறுசுகள்
இத்தனை செல்வங்களும்
யார் பெற்ற செல்வங்களோ?
பாத்திரம் ஏந்தி பதறி நிற்பது
யார் செய்த துரோகம்
கண் விழித்துப் பாருங்கள்
பாலகர் முகங்களை
இந்நிலை மாறட்டும் ஆவன
செய்யுங்கள் பெரியோர்களே.

அபிகுலமாலிகா
சங்கானை.

சிறுகதை

# வீடு தேடி... விரட்டப்பட்டு...

"**நான் தேடும் செவ்வந்திப் பூவிது நாள்தோறும் அந்தியில் பூத்தது பூவோ இது வா.....**"

ரிங்டோனைப் பாதியில் நிறுத்திப் பேசினேன்.


"ஹலோ"

"இளையராஜா குரல் வளையை நெறிக் காதீங்கண்ணா" - கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான் எதிரில் இருந்தவன். இதற்குத்தான் நான் இங்கெல்லாம் வருவதில்லை. எனக்குக் குடிக்கும் பழக்கமும் கிடையாது. ரகு என் நண்பன். பிறந்த நாள் என்று பாருக்கே கூட்டி வந்து விட்டான். அவனின் நண்பன்தான் இளையராஜாவுக்காக மதுபோதையில் அழுகிறவன். நான் ரகுவை முறைத்தபடி கடைக்கு வெளியே வந்துவிட்டேன். போனில் தமிழ்ச்செல்வன். வீடு விஷயமாகத்தான் பேசுவான்.

"சொல்லு தமிழ்."

"அந்த வீடுதான்... எனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லை. என் மனைவி தான் ரொம்ப பயப்படுறாங்க."

"ம்." "எதையாவது சொல்லிக் கட்டாயப்படுத்திக் கூட்டிட்டு வந்துடலாம். ஆனா தொடர்ந்து வீட்டுல இருக்கணுமில்லை?" என்றபடி பத்து நிமிடம் தன்னிலை விளக்கமளித்தான். பத்திரிகையாளன். மடிப்பாக்கத்தில் எனக்கு மூன்று பிளாட்டுகள் இருக்கின்றன. அதில் ஒரு பிளாட்டில் வசித்த ஓர் இளைஞன் தற்கொலை செய்துகொண்டு செத்துவிட்டான். ஏழு மாதங்களாகிவிட்டன. ஒருவரும்குடிவரத்தயாராக இல்லை. தமிழ்ச்செல்வனுக்குக் கடவுள், பேய் இரண்டின் மீதும் நம்பிக்கையில்லை. ஆனால்



அவன் மனைவிக்கு இரண்டின் மீதும் நம்பிக்கையிருந்தது. தன் கணவனின் கொள்கைகள் மீது மட்டும் நம்பிக்கையில்லை. குற்றவுணர்வுடன் நீண்டநேரம் விளக்கிக்கொண்டிருந்தவனிடம் பேச்சை மாற்றினேன்?

"நீ ஆணவக்கொலை பத்தி எழுதின கட்டுரை படிச்சேன். நல்லா இருந்துச்சு."

"ப்ச். அந்தக் கட்டுரை எழுதி பிரின்டுக்குப் போய் புத்தகம் வர்றதுக்குள்ள ரெண்டு ஆணவக்கொலை நடந்திடுச்சே?" - பத்து நிமிடங்கள் அவனிடம் பேசிவிட்டு போனை வைத்தேன். மிஸ்டுகால் வந்திருந்தது. அதே மடிப் பாக்கம் வேறொரு பிளாட்டில் வசிக்கும் வெங்கட்டிடம் இருந்து போன். ஆந்திராக்காரன். கண்டிப்பாகத் தண்ணீர்ப் பிரச்சினை பற்றிப் பேசத்தான் கூப்பிட்டிருப்பான். லாரித் தண்ணீருக்குச் சொல்ல வேண்டும் என்பான். அதற்கான பணமும் வீட்டு உரிமையாளர்தான் தர வேண்டும் என்பான். எப்படியும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அழைப்பான். புகார் தெரிவிக்க மட்டுமே அழைப்பவன். மீண்டும் அழைத்தால் பேசிக் கொள்ளலாம். ரகுவிடம் கைகுலுக்கி வாழ்த்துகளைச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். இளையராஜா ரசிகன் கண்கள் செருகியபடி, ஒரு சிகரெட்டை இழுத்துக்கொண்டிருந்தான்.

இரவு மீண்டும் அழைத்த வெங்கட், தன் நண்பனுக்குத் தெரிந்த ஒருவர், அந்தத் தற்கொலை பிளாட்டைப் பார்க்க மறுநாள் காலை வருவதாகச் சொன்னான்.

நான் காலையில் அங்கிருந்தேன். பத்து நிமிடங்களிருக்கும். ஒரு நடுத்தர வயதுக் காரரைக் கொண்டு வந்து விட்டு விட்டு, வேலைக்கு நேரமாவதாகச் சொல்லிவிட்டு வெங்கட் போய்விட்டான். அவர் வீட்டுக்குள் நுழைந்தார். அவர் நின்றார் என்பதைவிட, கால்பந்து மைதானத்தில் பந்தை உதைக்கத் தயாரானவனைப் போல் உடல் ஒரு பக்கம் சாய்ந்து நின்றார். அழைத்துச் சென்று இரண்டு படுக்கையறைகளையும் சமையலறையையும் கழிப்பறைகளையும் காட்டி, ஹாலுக்கு வந்தேன். உட்கார்வதற்கு நாற்காலிகள் ஏதுமில்லை. ஜன்னலில் சாய்ந்தபடி பேசத் தொடங்கினேன்.

"நீங்க மட்டும் தனியாளா வந்திருக்கீங்க?"

"ஓம். என் தங்கை அவுஸ்திரேலியாவில இருக்கிறா. அவளுக்கு ஒரு மகன் உண்டு. உடல்நலம் சரியில்ல. நண்பர் வீட்டில நிக்கிறா" என்றார்.

"நீங்க மலையாளமா?"

"இல்லை. தமிழாளுதான். யாழ்ப்பாணம்"

"சிலோனா? வெங்கட் ஒண்ணும் சொல்லலையே?"

"ஓ. கதைச்சிருப்பார் எண்டு நினைச்சேன்" என்றபடி அங்கிருந்த ஓவியம் ஒன்றை உற்றுப்பார்த்தார். ஒரு கறுப்பினக் குழந்தை ஓவியம். சிரிக்கிறதா, சோகமா என்று தெரியாத மாதிரியான முகபாவனை.

"இதை வரைஞ்சவர் பேர் ராகவனோ?"

"ஆமாம்" என்றபடி யோசிக்கத் தொடங்கினேன். இலங்கைக்காரருக்கு வீடு தருவதா? ஏழு மாதங்களாச்சு, யாரும் குடிவரத் தயாரில்லைதான். ஆனாலும் இவருக்கு வீடு தந்தால் நாளை ஏதாவது பிரச்சினை என்றால்..?

"என்ன யோசிக்கிறீங்க? என் தங்கை மகள் இங்கே ஒரு இன்ஸ்டிட்யூட்டில் விஸ்காம் படிக்கிறா. அதுக்காகத்தான் இங்கே நிக்கிறோம்."

வேகவேகமாக அவர் பேசியதில் வார்த்தைகளைத் தடயம் கண்டு, ஓரளவு நானாக யூகித்துக் கொண்டேன்.

'இருக்கிறோம்' என்பதை 'நிக்கிறோம்' என்று அவர் சொல்லும் போதெல்லாம் விநோதமாக இருந்தது.

"புலியாக இருப்போம் எண்டு தயங்கிறீங்களோ?"

"அவங்கதான் இப்ப இல்லையே?"

"எங்களால எந்தப் பிரச்சினையும் வராது. இதுவரை பன்ரெண்டு வீடு பார்த்துட்டோம். யாரும் தரேல்லை. இந்த வீட்டு வாடகைப்பணமும் குறைவா இருந்தது. எங்கட ஆக்களுக்கு வாடகை விடுறதெண்டால் அதிகப்பணம் கேப்பாங்க. இது உங்கட ஆக்களுக்கு விடுறதைவிடக் குறைவா இருந்தது."

"வெங்கட் உங்ககிட்ட ஒண்ணும் சொல்லலையா?"

அவர் குழப்பத்துடன் தலையாட்டினார். அவன் புகார்களைத் தவிர எதையும் சொல்ல மாட்டான்போல. நானே சொல்ல வேண்டியதுதான்.

"இந்தப் படம் வரைஞ்சானே ராகவன்னு ஒரு பையன். ஐ.டி. கம்பெனியில வேலை பார்த்தான். இங்கேதான் தங்கியிருந்தான். நல்ல பையன்தான். அவனுக்கு பர்சனல் பிராப்ளம். ஏழு மாசத்துக்கு முன்னாடி தூக்கு மாட்டிட்டு செத்துட்டான். சும்மா செத்தாலும் பரவாயில்லை. அதை டிக்டாக் வீடியோவாக்கி செத்துட்டான். பேப்பர், டி.வி, ஆன்லைன்னு ஒரே பரபரப்பாகிடுச்சு. எத்தனை தடவை ஸ்டேஷன் அலைய வேண்டியிருந்தது தெரியுமா? அதில இருந்து யாரும் குடிவரத் தயாரில்லை. பின்னே பயம் இருக்கத்தானே செய்யும்?"

நான் சொல்லி முடிக்கவும், "ஓ?" என்று மட்டும் சொன்னார் அவர். சின்ன ஆச்சரியமோ அதிர்ச்சியோ இல்லை. அந்த ஓவியத்தைப் பார்க்கும்போது அவர் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகூட இதைக் கேட்ட போதில்லை. எனக்குத்தான் ஆச்சரியமாக இருந்தது.

"உங்களுக்குப் பேய்பயம் கிடையாதா?"

"பேயா?" என்று சிரித்தவர், 'தவறாக நினைத்து விடுவேனோ' என்று நினைத்தாரோ என்னவோ நிறுத்தி விட்டார்.


"எங்கட வீட்டில மொத்தம் ஆறு சாவு. 1983 அப்போதான் முதல் இனக்கலவரம் வெடிச்சது. அப்போ எங்க மாமா, அம்மம்மா செத்துப்போனாங்கள். அப்புறம் ஆமி குண்டுவீச்சில அப்பா செத்துப் போனார். ராகவனும் யுத்தத்தில செத்துப் போனான். கடைசியா 2009இல ரெண்டு சாவு. மிச்சம் எஞ்சினது என் தங்கையும் அவ மகளும். அவளுக்கும்கூட மேலே விமானம் பறக்கும்போதெல்லாம் அப்பப்போ பயம் வரும்" நிதானமாகச் சொல்லி முடித்தார்.

நான் கறுப்பினக் குழந்தையின் இடது தோளின்மீதிருந்த ராகவனின் கையெழுத்தைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்தேன்.

"குடிக்கத் தண்ணி கிடைக்குமா?"

"இங்கே இருக்காதே சார். வாங்க, கீழே போய் டீ சாப்பிடலாம்."

சாவிக்கொத்தைக் கையிலெடுத்து அவருடன் கிளம்பினேன்.



"எங்கட வீட்டில மொத்தம் ஆறு சாவு. 1983 அப்போதான் முதல் இனக்கலவரம் வெடிச்சது. அப்போ எங்க மாமா, அம்மம்மா செத்துப் போனாங்கள். அப்புறம் ஆமி குண்டுவீச்சில அப்பா செத்துப் போனார். ராகவனும் யுத்தத்தில செத்துப் போனான். கடைசியா 2009இல ரெண்டு சாவு. மிச்சம் எஞ்சினது என் தங்கையும் அவ மகளும். அவளுக்கும்கூட மேலே விமானம் பறக்கும் போதெல்லாம் அப்பப்போ பயம் வரும்" நிதானமாகச் சொல்லி முடித்தார்."

சுகுணா திவாகர்

# இலங்கை அரசியலும் தொழிற் சங்கங்களும்

அண்மைய நாட்களில் நாளேடுகள், தொலைக்காட்சிகள், முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களில் அடிக்கடி பேசு பொருளாக விளங்குகின்ற விடயமாக பணிப்புறக்கணிப்பு, வேலை நிறுத்தம், சுகவீன லீவுப்போராட்டம், சட்டப்படி வேலைப் போராட்டம் போன்றன காணப்படுகின்றன. வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு, தாதிமார் சுகவீன விடுப்புப் போராட்டம், ரெயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம், ஆசிரியர்கள் தொழிற் சங்க நடவடிக்கைக்கு முஸ்தீபு, பல்கலைக்கழகத்தில் கடமைப் புறக்கணிப்பு, இலங்கை நிர்வாக சேவை ஊழியர்கள் வேலைப்பகிஷ்கரிப்பு போன்றவை தாம் இன்றைய முக்கிய செய்திகள்.




ஆனால் உண்மையில் இந்த வேலை நிறுத்தங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றி சாதாரண மக்கள் விழிப்புணர்வு அற்றவர்களாக, அவற்றின் சாதக பாதகத் தன்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்களாக, அவற்றைப் பற்றி தமது மனம் போன போக்கில் கருத்து வெளியிடுபவர்காக காணப்படுகின்றனர். ஏன்? படித்தவர்க்கத்தினரிடையே கூட இந்த வேலைநிறுத்தங்கள், தொழிற் சங்க நடவடிக்கைகள் பற்றி தெளிவற்றவர்காகக் காணப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகள் ஒரு புறம் பொதுமக்களின் பார்வையில் அவர்களுக்கு கெடுதியான ஒன்றாக, அவர்களின் இயல்பு வாழ்கையைப் பாதிக்கின்ற ஒன்றாக அல்லது அவர்களால் விரும்பப்படாத ஒன்றாக கருதப்பட்டாலும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தரப்பினரின் பக்கத்தில் நின்று பார்க்கும் போது அது அவசியமான ஒன்றாக, நியாமான ஒன்றாக அது தமது நோக்கங்களை அடைந்து கொள்ளும் ஒரு உத்தியாக நோக்கப்படுகின்றது. எனவே இங்கு இரு வகையான அக்கறைகள் அல்லது நலன்கள் காணப்படுவதை நாம் உணர முடியும்.

- அரச நிறுவனங்களை தமது சேவைக்காக நாடிச் செல்லும் பொதுமக்கள் தொடர்பான நலன் அல்லது அக்கறை
- தமது பிரச்சனைகளை தொழிற் சங்க நடவடிக்கைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முயலும் ஊழியர் தொடர்பான நலன்கள்

இங்கு காணப்படும் இரு வேறுபட்ட நலன்களும் பொதுவில் முரண்படு நலன்களாக **(Conflict of Interest)** இருப்பது கண்கூடு.

இலங்கையில் தொழிற்சங்க வரலாறு 1890 களிலிருந்து தொடங்குகின்றது. 1830 களில் ஆங்கிலேயரால் தொடங்கப்பட்ட தோட்டத் தொழில், இலங்கையில் தொழிலாளர் வர்க்கமொன்றை உருவாக்கியது. தோட்டங்களில் வேலை செய்ய சுதேச மக்கள் மறுத்தமையினால் பிரித்தானிய ஆட்சியாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வந்தனர். அவர்கள் வீட்டு வசதியின்மை, மோசமான ஊதியம், மோசமான சுகாதாரப்பிரச்சனைகளை சந்தித்தனர். ஆனால் அவர்களின் கல்வியறிவின்றிய காரணத்தால் தொழிற் சங்கங்களை அமைத்துப் போராடவில்லை. இலங்கையில் தொழிற்சங்கங்கள் என்ற கருத்தை அறிமுகப்படுத்திய முதல் நபர் **A.E.** புல்டிகென்ஸ். இலங்கையில் முதன்முதலாக வேலை நிறுத்த நடவடிக்கை பிரித்தானியாவிற்குச் சொந்தமான **H.W. Cave Company** க்கு எதிராக தொடங்கப்பட்டது. ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் கொழும்பில் உள்ள அச்சுப் பொறிகள் மற்றும் புத்தக விற்பனையாளர்களின் மிகப்பெரிய நிறுவனமான **Cave Company** க்கெதிராக செப்ரெம்பர் 17ஆம் திகதி 1893 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். அக்காலப்பகுதியில் இலங்கையில் மட்டுமல்ல தெற்காசியாவில் முதல் தொழிற்சங்கமான **"Ceylon Printers Society"** என்ற தொழிற்சங்கத்தை அமைத்தனர். இதுவே இலங்கையில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அடித்தளமிட்டது.

ஆரம்பத்தில் தனியார் துறையில் மட்டுமே தொழிற்சங்கங்கள் அனுமதிக்கப்பட்டன. எனினும் சட்டவாக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தத்தின் மூலம் அரசதுறையிலும் தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எனினும் தனியார் துறையில் தொழிற்சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைப் போல் அரச ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடியாது என்று உயர் நீதிமன்ற தீர்ப்புக்கள் காணப்படுகின்றன. யசபாலா எதிர் ரணில் விக்கிரமசிங்க (1980) மற்றும் வீரதுங்க எதிர் சட்டமா அதிபர் (1979) போன்ற உயர் நீதிமன்ற வழக்குகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இங்கு எழுகின்ற வினா என்னவெனில் ஊழியர் ஒருவர் இவ்வாறாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சட்ட ரீதியாக உரிமையுடையவரா? என்பதாகும். சட்டங்களுக்கெல்லாம் தாய்ச்சட்டமான அரசியற் திட்டத்திலே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள 1978ஆம் ஆண்டின் 2ஆவது குடியரசு அரசியற்றிட்டத்தின் உறுப்புரை 14 இவை பற்றிக் குறிப்பிடுகின்றன. உறுப்புரை 14(1) (ஈ) பிரஜையொருவர் தொழிற்சங்கமொன்றை அமைக்கவும் அதில் சேரவும் உள்ள உரிமை பற்றிக் குறிப்பிடுகின்றது. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் **(ILO)** சமவாயங்கள் எதிலும் வேலை நிறுத்தத்திற்கான உரிமை பற்றிச் சொல்லப்படவில்லை. அதே போல் இலங்கையிலுள்ள தொழிற் சட்டங்கள் எதிலும் வெளிப்படையாக வேலைநிறுத்தம் செய்வது வேலையாட்களின் உரிமை எனச் சொல்லப்படவில்லை. ஆனால் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை உட்கிடையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதியானவர் அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் கீழ் **(Essential Public Service Act )** அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி குறித்த ஒரு சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதன் மூலம் வேலைநிறுத்தம் செய்வதை தடுக்க முடியும். சில நாட்களின் முன்பு கூட புகையிரத ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் போது அது விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

வேலைநிறுத்தம் போன்ற தொழிற் சங்க நடவடிக்கைகள் தொழிலாளர் நலன்களை அடைந்து கொள்வதற்கான ஒரு வழிமுறையாகக் காணப்படினும் சில வேளைகளில் அந்த நடவடிக்கைகள் ஒரு அரசியல் பின்புலத்தைக் கொண்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அரசியலிலே அரசியல் கட்சிகள் தவிர அமுக்கக் குழுவினர் **(Pressure Groups)** என்ற ஒரு பிரிவினரும் காணப்படுகின்றனர். அமுக்கக் குழுவினர் எனப்படுவோர் அரசியற் கட்சிகள் போலல்லாமல் தேர்தல்களில் போட்டியிடாதவர்களாக அரசியல் அதிகாரம் பற்றி அக்கறைப்படாதவர்காக காணப்படுபவர்கள். ஆனால் அவை அரசியலில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகும் கட்சியை அல்லது ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி அல்லது King Makers அவை செயற்படுவதுண்டு.

தொழிற் சங்கங்களும் அந்த வகையிலான ஒரு அமுக்கக் குழுக்களாக செயற்படக் கூடியன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இந்த தொழிற்சங்கங்கள் அமுக்கக் குழுக்களாக செயற்பட்டு அரசியற் கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு உதவியிருப்பதை வரலாறு சுட்டிநிற்கின்றது. உதாரணமாக 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே **S.W.R.D** பண்டாரநாயக்கா தேர்தலிலே அமோக வெற்றி பெறுவதற்கு பௌத்த சங்கத்தோடு இணைந்து இலங்கை ஆசிரியர் சங்கமும் செயற்பட்டது. பொதுவாக தொழிற்சங்கங்களிலே உள்ளவர்கள் இடது சாரி சிந்தனையைக் கொண்டவர்களாகவே காணப்படுவர். மாக்சிச, லெனினிச கருத்துக்கள் அவற்றில் மேலொங்கிக் காணப்படும். இலங்கைப் பொறுத்தரையில் தொழிற்சங்கங்களில் **JVP** போன்ற இடது சாரி கட்சிகளின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாறான கட்சிகளின் அடிப்படைப் பலமே தொழிற்சங்கங்கள் தான் என்று கூறுமளவிற்கு அவற்றின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது. JVP யின் முக்கிய பிரமுகர்களில் பலர் தொழிற் சங்கவாதிகளாகக் காணப்படுவதைக் காணலாம். JVP யின் முக்கிய பிரமுகர் **K.D** லால் காந்த கூட அவ்வாறானதொரு தொழிற்சங்கவாதியாவார். இதனால் தான் இந்த நாட்டில் பெரியளவில் தொழிற்சங்க நடவடிக்கைகள் நடைபெறும் போது அவற்றின் பின்னால் **JVP** யின் கரங்கள் காணப்படுவதாக சந்தேகிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இவற்றுக்கப்பால் அண்மைக்காலப் போக்கு என்னவெனில் பிறகட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக தமது சார்பான தொழிற் சங்கங்களை உருவாக்கி தமது கட்டுப்பாட்டில் அவற்றை வைத்துக் கையாளுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. அதிகாரத்திலுள்ள கட்சிகள் கூட இவ்வாறு தொழிற் சங்கங்கள் பலவற்றை திரை மறைவில் இயக்கி வருவதைக் அவதானிக்கலாம். ஒரு துறையைச் சேர்ந்த ஒரு தொழிற் சங்கம் அல்லது சில தொழிற் சங்கங்கள் தொழிற் சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கும் போது ஏனைய கட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் அவற்றுக்கு ஒத்துழையாத தன்மை காணப்படுவதும் இதனாலேயேயாகும். அதனால் தான் பல தொழிற்சங்க நடவடிக்கைகள் பிசுபிசுத்துப் போய்விடுகின்றன.

இனி இலங்கையில் நிலவி வரும் சட்டத்தின் அடிப்படையில் யாரெல்லாம் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்று நோக்குவோமாயின் 14ஆம் இலக்க 1935ஆம் ஆண்டின் தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரமும் இல 3 1946ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரகாரமும் அதன் பகுதி IV அத்தியாயம் 174இன் கீழ் பின்வரும் தொழில் வகுதியினர் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள்,

1. நீதித்துறை உத்தியோகத்தர்கள்
2. இராணுவம்
3. பொலிஸ்
4. சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் ஏற்படுத்தும் தாக்கங்களை பொருளாதார ரீதியில் ஆராய்வோமாயின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு சம்பள உயர்வு வழங்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். எல்லாத்துறைகளிலும் இவ்வாறு ஊதியம் அதிகரிக்கப்படும் போது அவர்களின் வருமான மட்டம் அதிகரிக்கும். இவ்வாறான அதிகரித்த வருமான மட்டத்தை அடைந்த மக்களால் ஏற்படுத்தப்படும் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரிக்கும். இவ்வாறு கேள்வி அதிகரிக்கும் போது நாட்டில் பொருட்களின் விலைமட்டம் அதிகரிக்கும். விலைமட்டம் அதிகரிக்கும் போது பணவீக்கம் அதிகரிக்கும். இதனால் மக்களின் கொள்வனவு சக்தி குறைவடையும். எளிமையாகக் கூறினால் வாழ்க்கைச் செலவு அதிகரித்து மக்களின் வருமானம் போதாமை ஏற்பட மீண்டும் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை வேலைநிறுத்தம் என்பன ஏற்படும். இது ஒரு வட்டமாக மீண்டும் மீண்டும் ஏற்படுவதைக் காணலாம்.

தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அவற்றின் பிரதான கோரிக்கை ஊதியம் தொடர்பானதாகவே காணப்படுகின்றமையை அவதானிக்கலாம். குறிப்பாக குறிப்பிட்ட ஒரு துறையில் காணப்படும் சம்பள முரண்பாடுகளே இவற்றுக்கு அடிப்படையாக அமைகின்றன என தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. குறிப்பிட்ட ஒரு சாராருக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் போது மற்ற சாராருக்கும் ஒரு குறிப்பிட்ட நியாயமான விகிதாசாரத்தில் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால் ஏதோ காரணங்களால் அவை கடைப்பிடிக்கப்படாது போகும் போது சம்பள முரண்பாடுகள் **(Salary Anomaly)** ஏற்படுகின்றன. இது பாதிக்கப்படும் தரப்பிற்கு புரியும் அநீதியாக நோக்கப்படுகின்றது. இது தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்கின்றது. உதாரணமாக அண்மையில் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட அரசு நடவடிக்கைகளை மேற்கொண்ட போது ஏனைய முகாமைத்துவ உதவியாளர் போன்ற சங்கங்களும் ஏற்ற விகிதாசாரத்தில் பிற தொழிற் பிரிவினருக்கும் ஊதிய அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்ங்களை முன்னெடுத்தன. இதில் பிறிதொரு குற்றச்சாட்டும் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டன.


அரசின் தீர்மானமெடுக்கும் தரத்திலுள்ள அதிகார வர்க்கத்தினர் உதாரணமாக அமைச்சின் செயலாளர்கள் போன்றவர்கள் தாம் சார்ந்த வகுப்பிற்கு மட்டும் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி சம்பள உயர்வுகளை மேற் கொள்வதால் ஏனைய துறைகள் பாதிக்கப்படுகின்றன என்பதே அக்குற்றச்சாட்டாகும். எது எவ்வாறாயினும் ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவது எவ்வளவு முக்கியமோ அதேயளவு அரச அலுவலகங்களை தமது தேவைகளின் நிமித்தம் நாடிச் செல்லும் பொதுமக்களின் நலன்களும் பேணப்பட வேண்டும்.

அரசாங்கம் இதனைக் கருத்திற் கொண்டு இவ்விடயங்களில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்காது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எல்லாத் தரப்பினரினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

**சி.பிரணவன்**
**உதவிப் பதிவாளர்**
**பட்டப்படிப்புக்கள் பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# முடிவில்லாத நெருக்கடி; சிரியாவுக்குள் துருக்கியின் ஊடுருவல்

சிரியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்து அமெரிக்கத் துருப்புக்களை விலக்கிக்கொள்வதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்த தீர்மானம் இஸ்லாமிய அரசுக்கு எதிரான போரில் முன்னரங்கத்தில் நின்ற குர்திஷ் படைகளுக்கு துரோகம் இழைத்ததற்கு ஒப்பானதாகும். படைகளை விலக்கும் தீர்மானத்தை அமெரிக்கா அறிவித்த சில நாட்களில் குர்திஷ் இனத்தவர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடகிழக்கு சிரியாவுக்குள் துருக்கி அதன் இராணுவ ஊடுருவலை நடத்தியது. இது பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும்.



சிரியாவின் குர்திஷ் பிராந்தியமான ரோஜாவா தற்போது ஓரளவு சுயாட்சி கொண்ட குர்திஷ் அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுகிறது. அதன் திரட்டல் படையான மக்கள் பாதுகாப்பு பிரிவுகளே எல்லைகளை காவல் செய்கின்றன. இஸ்லாமிய அரசு இயக்கத்தின் இராச்சியத்தை ( கலிபேற் ) நிர்மூலஞ்செய்த அமெரிக்க ஆதரவுடனான சிரிய ஜனநாயக படைகளில் முக்கியமான அங்கமாக மக்கள் பாதுகாப்பு படைகள் விளங்கின. தனது குர்திஷ் பிராந்தியங்களில் குர்திஷ் தொழிலாளர் கட்சியினால் முன்னெடுக்கப்படுகின்ற வன்முறைக் கிளர்ச்சியை அடக்க சண்டையிட்டுக் கொண்டிருக்கும் துருக்கி பலமடைந்திருக்கும் மக்கள் பாதுகாப்பு படையையும் எல்லைக்கு அப்பால் இருக்கும் ஒரு குர்திஷ் சுயாட்சி அரசாங்கத்தையும் அதிகரித்து வரும் அச்சுறுத்தலாகவே பார்க்கிறது.

ரோஜாவா பிராந்தியத்துக்கும் எல்லைக்கும் இடையில் துருக்கியின் ஆதரவுடனான சிரிய கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய தாக்குதல் தடுப்பு வலயம் ஒன்றை உருவாக்குவதே துருக்கிய ஜனாதிபதி ரிசெப் தஜிப் எர்டோகானின் திட்டமாக இருக்கிறது. அந்த வலயத்தில் ஓரளவு எண்ணிக்கையான சிரிய அகதிகளை குடியமர்த்தவும் அவர் திட்டமிடுகிறார். முன்னைய ஊடுருவலின்போது துருக்கி எல்லை நகரான அவ்ரினில் இருந்து மக்கள் பாதுகாப்பு படைகளை விரட்டிவிட்டது. அவ்ரினில் செய்ததை எல்லைப்பிராந்தியத்தில் நீண்டதும் அகலமானதுமான ஒரு பரப்பில் மீண்டும் செய்வதற்கே துருக்கி இப்போது திட்டமிடுகின்றது. அமெரிக்கத் துருப்புகள் இதுவரை காலமும் அங்கு நிலைகொண்டிருந்தமையால் எர்டோகான் ஊடுருவலைச் செய்யமுடியாமல் இருந்திருக்கலாம். ஆனால், துருக்கியின் தற்போதைய நடவடிக்கையில் அமெரிக்கத்துருப்புகள் சம்பந்தப்படவோ அல்லது அதை ஆதரிக்கவோ போவதில்லை என்று வெள்ளை மாளிகை அறிவித்திருக்கும் நிலையில் துருக்கி அரசாங்கம் அதன் எண்ணப்படி செயற்படுவதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா துருப்புகளை விலக்கிக்கொள்வது ஒரு பிரச்சினை அல்ல. மேற்காசியாவில் அமெரிக்க இராணுவ ஈடுபாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதாக தேர்தல் பிரசாரங்களின்போது ட்ரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார். சிரிய நெருக்கடியில் என்றென்றைக்கும் அமெரிக்கா சிக்குப்பட்டு கிடக்கவும் முடியாது. ஆனால், திடுதிப்பென தனது படை நடவடிக்கைகளை நிறுத்துகின்ற விதமும் அதனால் நேரக்கூடிய விளைவுகளுமே பிரச்சினையாகும்.

இஸ்லாமிய அரசைத் தோற்கடிப்பதில் குர்திஷ்கள் முக்கியத்துவம் வாய்ந்த பங்கை வகித்தார்கள். 2015 முற்பகுதியில் மக்கள் பாதுகாப்பு படையினால் விடுவிக்கப்பட்ட குர்திஷ் நகரான கோபேனில் இருந்துதான் இஸ்லாமிய அரசின் வீழ்ச்சி ஆரம்பித்தது. வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் அரசாங்கம் ஒன்று இன்று இருக்கிறதென்றால் இஸ்லாமிய அரசின் தலைநகரம் போன்று விளங்கிய டாக்கா உட்பட பிராந்தியத்தில் உள்ள முக்கியமான நகரங்கள் சகலதையும் அமெரிக்காவின் ஆதரவுடன் மக்கள் பாதுகாப்பு படைகள் கைப்பற்றியதே அதற்கு காரணமாகும். ஆனால், இப்போது இஸ்லாமிய அரசின் இராச்சியம் நிர்மூலம் செய்யப்பட்டுவிட்ட நிலையில், குர்திஷ்களை அமெரிக்கா கைவிடுகின்றது போலத் தோன்றுகிறது.

குர்திஷ்களின் பாதுகாப்புக்கு துருக்கியிடமிருந்து உத்தரவாதங்களைப் பெற்றுக்கொண்டு சிரியாவில் இருந்து அமெரிக்கத் துருப்புகளை ஒரு ஒழுங்கமைவான முறையில் டொனால்ட் ட்ரம்ப் விலக்கிக்கொண்டிருக்க முடியும். அதற்கு பதிலாக அவர் துருக்கியின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்திருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

இரண்டாவதாக, இஸ்லாமிய அரசின் இராச்சியம் தான் நிர்மூலம் செய்யப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய அரசு இயக்கம் ஒழிக்கப்படவில்லை.


எஞ்சியிருக்கும் இஸ்லாமிய அரசு போராளிகள் ஈராக்கினதும் சிரியாவினதும் பாலைவனங்களுக்கு பின்வாங்கியிருக்கிறார்கள். திரும்பவும் தாக்குதல்களை நடத்துவதற்கு அவர்கள் சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறார்கள்.

சிரியாவுக்குள் துருக்கியின் ஊடுருவல் ரோஜாவாவில் குர்திஷ்கள் அடைந்த முன்னேற்றங்களுக்கு ஒரு பின்னடைவாக மாத்திரமல்ல, களத்தில் இருக்கின்ற மிகுந்த ஆற்றல் கொண்ட ஜிஹாதி எதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்துவதாகவும் பிராந்தியம் முழுவதையும் குழப்பநிலைக்குள் தள்ளிவிடுவதாகவும் இருக்கும் அனர்த்தம் நேருவதற்கே வாய்ப்பு.

த ஹிந்து

# ட்ரோன்களைப் பயன்படுத்தி தாக்குதல் பயங்கரவாதிகளின் புதிய யுத்தி





விளைநிலங்களுக்கு மருந்து தெளிப்பது, பீட்சா டெலிவரி, மருந்துகளைக் கொண்டுசெல்வது, கமரா பயன்பாடு என நல்ல விஷயங்களுக்கு மட்டும்தான் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அடுத்தக்கட்ட முன்னேற்றமாக ட்ரோன்களில் ஆயுதங்களை பொருத்தி உலகையே அலற வைக்க ஆரம்பித்துவிட்டனர் பயங்கரவாதிகள்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் லண்டன் காட்விக் விமான நிலையத்தின்மீது சில ட்ரோன்கள் பறந்து, விமானங்கள் மீது மோதுவது போல் சென்றன. பதறிப்போன இங்கிலாந்து அரசு, அன்றைய தினம் மொத்த விமான சேவையையும் இரத்துச்செய்தது.

சவுதி அரேபியா தலைநகர் ரியாத் அருகே உள்ள அராம்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான குரைஸ் மற்றும் பக்யாக் எண்ணெய் கிணறுகள்மீது நினைத்தே பார்க்க முடியாத வகையில் அண்மையில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல்கள் நடந்தன. இந்தத் தாக்குதலில், 25 ட்ரோன்கள் ஈடுபட்டன என்பதுதான் அதிர்ச்சியின் உச்சம்! ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றனர்.

பாகிஸ்தானிலிருந்து காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ட்ரோன்கள் மூலம் ஆயுத சப்ளை செய்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பயன்படுத்திய ட்ரோன்கள், பஞ்சாப்பில் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்பட்டவை என்பதும் தெரியவந்துள்ளது.

வருங்காலத்தில் ட்ரோன்களால் உலகில் பல்வேறு பயங்கரவாதச் செயல்கள் நடைபெற அதிக வாய்ப்புள்ளது. பிரச்சினை என்னவெனில், ட்ரோன்கள் எளிதில் தாழப்பறந்து செல்லலாம் என்பதால் கண்காணிப்பு ரேடர்களில் அவை சிக்குவதில்லை. இவ்வளவுக்கும், அராம்கோ எண்ணெய் ஆலைகளில் பாதுகாப்புக்காக அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணை பொருத்தப்பட்டுள்ளது. அதன் எல்லைக்குள் நுழைந்தால், அடுத்த ஒன்பதாவது விநாடியில், அதை வானிலேயே எதிர் கொண்டு பேட்ரியாட் அழித்துவிடும். எண்ணெய்க் கிணறுகள் தாக்கப்பட்ட சம்பவத்தில், ரேடரில் ட்ரோன்கள் சிக்காத காரணத்தால், பேட்ரியாட் ஏவுகணைகள் மௌனமாகி விட்டன. இதற்குக் காரணம் அங்கு ட்ரோன்கள் தாழப்பறந்து காரியத்தைச் சாதித்துள்ளன.

சவுதிக்குள் பல நூறு கிலோமீற்றர்கள் சென்று ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியது, அந்த நாட்டின் வான் பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது. ஏனெனில், சாதாரண ட்ரோன்களை இவ்வளவு தொலைவு செலுத்த முடியாது.

1960 ஆம் ஆண்டு வியட்நாம் போரில் அமெரிக்கா முதன் முறையாக ட்ரோனைப் பயன்படுத்தியது. அப்போதிருந்தே, ட்ரோன்களுக்கு கிராக்கி அதிகம். கல்வி, பொழுதுபோக்கு, இராணுவப் பயன்பாடு என ட்ரோன்களின் தேவையும் அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்த உலகில் 20 இலட்சம் ட்ரோன்கள் உள்ளன. இதில், 90 சதவிகிதம் இராணுவப் பயன்பாட்டில் உள்ளன. 2022ஆம் ஆண்டில் ட்ரோன்களின் உலகச் சந்தை மதிப்பு கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் கோடி ரூபாயாக உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்புகளுக்கு ட்ரோன்களை சப்ளை செய்வதில் முன்னணியில் இருக்கின்றன சீனா மற்றும் வடகொரியா.

நல்ல காரியங்களுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ட்ரோன்கள், இப்போது தீவிரவாதிகளின் செல்லப் பிள்ளைகளாக மாறியிருப்பது பெரிய ஆபத்துதான்!

# “பலி கொடுக்கும் விலங்கு வருகிறது”

# “உடல் இந்தப் பைக்குள் நுழையாதே”

## உலகையே உறைய வைத்த ஊடகவியலாளர் ஜமால் கஷோகி கொலையின் முன்பான பதிவுகள்



ஜமால் கஷோகி

## சிக்கலில் சவுதி இளவரசர்

ஓராண்டு நிறைவுற்றும், ஓயாமல் எரிந்து கொண்டிருக்கிறது பத்திரிகையாளர் ஜமால் கஷோகியின் மரணச் செய்தி. 2018 ஒக்டோபர் 2ஆம் திகதி, துருக்கியின் சவுதி தூதரகத்தில் அவர் கொல்லப்பட்டது, மனித உரிமைக்கும் கருத்து சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல். சரியாக ஓராண்டு கழித்து இந்தக் கொலைச் சம்பவத்தில் சவுதி இளவரசருக்கு நெருக்கமான தொடர்பு இருப்பதற்கான முகாந்திரங்களை உண்மைக்கு வெகு அருகில் பதிவுசெய்துள்ளார், ஃப்ரன்ட்லைன்' பத்திரிகையாளர் மார்ட்டின் ஸ்மித்!

ஜமால் கஷோகி, பிரபல பத்திரிகையாளர். சவுதியைச் சேர்ந்த இவர், தொடக்கத்தில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானின் ஆதரவாளர். பிறகு ஏற்பட்ட முரண்பாடுகளால், அவரை கடுமையாக விமர்சித்து எழுதினார். ஒருகட்டத்தில், நெருக்கடிகளால் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து, வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் பணியாற்றினார். சவுதி இளவரசர்மீது அவர் தொடர்ந்த கடுமையான விமர்சனங்களே, அவருக்கு கொடூரமான மரணம் ஏற்பட காரணமாக அமைந்துவிட்டன.

தன் ,திருமணம் தொடர்பாக சில ஆவணங்கள் பெற, துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்துக்குச் சென்ற ஜமால் கஷோகி, கடும் சித்ரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டார். இதை முதலில் மறுத்த சவுதி அரசு, பிறகு ஒப்புக்கொண்டு கண்துடைப்பாக விசாரணையைத் தொடங்கியது. சவுதி இளவரசரின் நேரடி ஆணையின்பேரிலேயே இந்தக் கொலை நடந்ததாக ஆதாரங்களை வெளியிட்டது துருக்கி அரசு. தொடர்ந்து, கொலை தொடர்பாக ஐ.நா விசாரணைக்கு உதவிசெய்யும் பிரிட்டிஷ் வழக்கறிஞர் ஹெலினா கென்னடி, கொலை நடந்த அன்று தூதரகத்தில் கிடைத்த சில இரகசிய டேப்களில், தான் கேட்ட விஷயங்களைப் பகிர்ந்துள்ளார் முகமது பின் சல்மான்.

'பலிகொடுக்கும் விலங்கு வருகிறது' என்று தொடங்கி 'உடல் மற்றும் இடுப் புப் பகுதி இந்தப் பைக்குள் நுழையாது' என்பது வரை அந்த ஓடியோவில் பல விவரங்கள் இருக்கின்றன. ஐ.நா விசாரணை ஆணையத்திடமும் இந்த டேப் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொலையைப்பற்றி விசாரணை நடத்திய ஐ.நா விசாரணை ஆணையம், இது திட்டமிடப்பட்ட கொடூரமான கொலை. சவுதி இளவரசருக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இளவரசரை விசாரணை செய்ய வேண்டும் என்று அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இவையெல்லாம் முன்விபரங்கள்.



ஜமால் கொலையின் ஓராண்டு நிறைவையொட்டி பத்திரிகையாளர் மார்ட்டின் ஸ்மித் சமீபத்தில் வெளியிட்ட ஆவணப்படம்தான், சர்வதேச அரங்கில் தற்போது பரபரப்பைப் பற்றவைத்துள்ளது.

**`The Crown Prince of Saudi Arabia'** என்பதுதான் அந்த ஆவணப் படம் **(www.youtube.com/watch?v=5IBa88VkM6g)**. சல்மானின் வளர்ச்சி முதல் ஜமால் கொலை வரை விவரிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு மணி நேர டாக்குமென்டரியில் சல்மான், அந்தச் சம்பவம், நான் பொறுப்பில் இருக்கும் போதுதான் நடந்தது. அதற்கான அனைத்து பொறுப்புகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று தன்னிடம் சொன்னதாக மார்ட்டின் ஸ்மித் சொல்கிறார்.

ஆனால், இதுதொடர்பாக சி.பி.எஸ் நியூஸ் தொலைக்காட்சிக்கு சல்மான் அளித்த பேட்டியில், “ஜமால் கொலைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. சவுதியின் மூன்று மில்லியன் பிரஜைகளின் வாழ்விலும் தினசரி என்ன நடக்கிறது என்பதை நான் அறிந்திருக்க முடியாது. இந்தக் கொலை தொடர்பான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவர்” என்று சொல்லியிருக்கிறார்.

மார்ட்டின் ஸ்மித்தோ, “சவுதி உளவுத்துறை அதிகாரி மஹர் முட்ரெப், கொலை நடந்த அன்று 'காரியம் முடிந்துவிட்டது என்று தலைவரிடம் சொல்லுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். அவர் தொடர்புகொண்டது இளவரசரின் அலுவலகம். இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும்?” என்று கேட்கிறார்.

மேலும், “அரசை விமர்சித்த ஒரே காரணத்துக்காகச் கொல்லப்பட்டது மட்டுமல்ல பிரச்னை... சமஉரிமை கேட்டதற்காக சிறையில் வாடும் பெண்கள் சவுதியில் இருக்கிறார்கள். கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் எனக் கேள்வியெழுப்பிய பலரும் சிறைக் கம்பிகளுக்குப் பின் இருக்கிறார்கள். ஜமாலின் கொலை, சவூதியை உற்று நோக்க ஒரு ஜன்னலைத் திறந்திருக்கிறது. இனி அதைப் பயன்படுத்தி அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கண்டறிவது நமக்கான வேலை” என்று இருளினுள் ஒடுக்கப்பட்ட சவுதி மக்களின் வாழ்வின்மீது வெளிச்சம் பாய்ச்ச அறைகூவல் விடுத்திருக்கிறார் மார்ட்டின் ஸ்மித்.

பத்திரிகையாளரின் கடமையைச் சரியாகச் செய்திருக்கிறார் மார்ட்டின் ஸ்மித்.


> ! அரசை விமர்சித்த ஒரே காரணத்துக்காகச் கொல்லப்பட்டது மட்டுமல்ல பிரச்னை... சமஉரிமை கேட்ட தற்காக சிறையில் வாடும் பெண்கள் சவுதியில் இருக்கிறார்கள். கல்வியா ளர்கள், எழுத்தாளர்கள், தொழிலதிபர்கள் எனக் கேள்வி யெழுப்பிய பலரும் சிறைக் கம்பி களுக்குப் பின் இருக்கிறார்கள். ஜமாலின் கொலை, சவூதியை உற்று நோக்க ஒரு ஜன்னலைத் திறந்திருக் கிறது. ”

# வட, கிழக்கில் பௌத்த பேரினவாதத்தின் செயற்பாடுகளை அனுமதிக்கக்கூடாது

வடக்கு, கிழக்கில் பௌத்த பேரினவாத நடவடிக்கைகள் முன்னெடுத்து தமிழர் தாயக கோட்பாடுகளை சிதைப்பதற்கான நட்வடிக்கைகள் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தமை வரலாறாக உள்ளது.

விடுதலைப்புலிகள் பலம்பெற்றிருந்த காலப்பகுதியில் இத்த கைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் முன்னைய ஆட்சிக் காலத்தில் பௌத்த பேரினவாத செயற்பாடுகள் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டன. அத்தகைய நடவடிக் கைகள் திட்டமிட்ட வகையில் தொடர்ந்து வருகின்றமையும் அதற்கு தென் பகுதி இனவாத கட்சிகளும் அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றமையும் பெரும் கவலையளிக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.



யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் இளைஞர், யுவதிகளின் தமிழ்த்தேசிய உணர்வை மழுங்கடிக்கும் வகையில் ஒருபுறம் போதைப்பொருள் கலாசாரமும் மதுபாவனை கலாசாரமும் உருவாக்கப்பட்டிருந்தன.

மறுபுறம் தமிழ் மக்களின் இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் வகையிலும் வடக்கு, கிழக்கு தாயக கோட்பாடுகளை சிதைக்கும் முகமாகவும் திட்டமிட்ட குடியேற்றங்க ளும் பௌத்த பேரினவாதத்தை ஊக்கு விக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்க ப்பட்டன.

முல்லைத்தீவு, செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இதேபோன்றே பௌத்த மக்கள் வாழாத பகுதிகளில் பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் அமைக்கப்பட்டன. திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் பிள்ளையார் ஆலயம் அமைந்த பகுதியில் விகாரை அமைப்பதற்கும் முயற்சிக்கப்பட்டது.

இவ்வாறு பல இடங்களில் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பை நிறுவும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் அண்மைய நிகழ்வாகவே முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்திற்குள் பௌத்த தேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட சம்பவம் அமைந்துள்ளது. நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த தேரர்களின் தலைமையில் இந்த சம்பவம் அரங்கேற்றப்பட்டிருந்தது.

இந்த விடயமானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்த அடாத்தான நிகழ்வு தொடர்பில் கடும் கண்டனங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு, கிழக்கை சேர்ந்த சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டிருந்தனர். பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. ஆனால் இன்றுவரை நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்து அடாவடித்தனத்தில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இதேபோன்றே நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த தவறிய பொலிஸார் மீதும் இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து நீராவியடி பிள்ளையார் ஆலய விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்த கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் சம்பவத்தில் தொடர்புபட்ட பௌத்த பிக்குகள் மீதும் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த தவறிய பொலிஸ் அதிகாரிகள் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்து செயற்பட்ட ஞானசார தேரருக்கு எதிராக இரண்டுவாரங்கள் கடந்த நிலையிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. குறித்த பௌத்த தேரரின் இறுதிக் கிரியையின் போது அங்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய பொலிஸ் அதிகாரிகள் அதனை செய்யாமல் மௌனம் காத்தனர்.

இந்த செயற்பாடுகளின் போது அங்கு சமுகமளித்திருந்த சட்டத்தரணிகள் கூட தாக்கப்பட்டுள்ளனர். அங்கு குழுமியிருந்த பொலிஸ் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டவர்களை தடுக்கத் தவறிவிட்டனர்.

இது இந்து மக்களின் உரிமையினை மீறும் செயல். இதனை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோரும் சபையில் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

நீராவியடி பிள்ளையார் கோவில் விவகாரம் தொடர்பில் பிரதான கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்று சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாந்தி சிறிஸ்கந்தராஜா எம்.பி.யும் வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையில் பொது எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினரான ஆனந்த அளுத்கமகே சபையில் தெரிவித்த விடயங்களானது, பௌத்த பேரினவாத சக்திகளின் செயற்பாடுகள் எந்தளவிற்கு நாட்டில் காலூன்றி உள்ளன என்பதை பறைசாற்றுவதாக அமைந்திருந்தது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆனந்த அளுத்கமகே எம்.பி. பௌத்த சிங்கள நாட்டில் தேரர்களின் கட்டளைகளுக்கு அமைய செயற்பட்டால் நாட்டில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. நீராவியடி பிள்ளையார் கோவில் விடயத்தில் தமிழர் தரப்பே குழப்பங்களை ஏற்படுத்தி ஒட்டுமொத்த சிங்கள பௌத்த மக்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் தமிழர்களை சிங்களவர்கள் பாதுகாத்துள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்பு இருக்கலாம். நீதிமன்றத் தீர்ப்பு பெரும்பாலும் பொலிஸாரின் தகவல்களுக்கு அமையவே வழங்கப்படும். பொலிஸார் கொண்டு வரும் தகவல்கள் சரியாக இருக்கும் என்று அர்த்தமில்லை. இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. இங்கு தேரர்களின் தலைமைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இவரது கருத்தானது சிங்கள பேரினவாத தலைவர்களின் நிலைப்பாடு எவ்வாறானதாக அமைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட குடியேற்றங்களையும் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தும் வகையிலேயே தென் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையான அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு அமைந்துள்ளது.

முல்லைத்தீவு செம்மலை நீராவியடி ஆலய விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு அவமதிக்கப்பட்ட விடயத்தில் கூட இன்னமும் நீதி வழங்கப்ப டாமை ஏற்றுக் கொள்ளத்தக்க செயற்பாடல்ல. இந்த விடயம் தொடர்பில் வவுனியா மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து அண்மையில் இதற்கான விசா ரணை இடம்பெற்றிருந்தது. விசாரணையின்போது கருத்து தெரிவித்த முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் இன முரண்பாட்டை தடுப்பதற்காகவே நீதிமன்றத் தீர்ப்பை கவனத்தில் கொள்ளவில்லை என்று தெரிவித்திருக்கின்றனர்.

இன முரண்பாடு ஏற்படும் என்பதற்காக பௌத்த பேரினவாத சக்திகளின் செயற்பாடுகளுக்கு பொலிஸார் அனுமதி அளித்துள்ளமை இதன்மூலம் நிரூபணமாகின்றது. எனவே இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கமானது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு அழுத்தங்களை வழங்கி வருகின்ற போதிலும் இன்னமும் இந்த விடயம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறான நிலைமை தொடர்வதானது தமிழ் மக்கள் மத்தியில் நீதித்துறை மீதான நம்பிக்கையை இல்லாது செய்துவிடும்.

நாட்டில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதற்காக பௌத்தர்களே வாழாத பகுதிகளில் பௌத்த பேரினவாத செயற்பாடுகளுக்கு இடமளிக்கவேண்டும் என்று கோருவது எந்தவகையிலும் நியாய பூர்வமான நடவடிக்கையல்ல.

எனவே செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்திற்குள் இடம் பெற்ற அடாத்தான சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்.

இதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் எடுக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

# ஜப்பானிடமிருந்து கற்க வேண்டிய பத்து பண்புகள்

• ஜப்பானில் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து தினமும் 15 நிமிடங்கள் தங்கள் பாடசாலைகளின் கழிப்பறைகளைச் சுத்தம் செய்கிறார்கள்.

• நாய் வளர்ப்பவர்கள் அதன் கழிவுகளை அகற்ற வெளியில் செல்லும் போது அதற்காக வடிவமைக்கப்பட்ட பை ஒன்றினை கட்டாயமாக எடுத்துச் செல்வர்.

• இங்கு இயற்கை வளங்கள் கிடையாது. ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான பூமியதிர்ச்சிகள் ஏற்படுகின்றன. ஆனாலும் ஜப்பான் தான் உலகிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார நாடாகும்.


• ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு ஆறு வரையான மாணவர்களுக்கு மற்றவர்களுடன் எப்படிப் பழக வேண்டும் என்பது கற்றுக் கொடுக்கப்படுகிறது.

• மக்கள் உலகிலேயே பெரிய பணக்காரராக இருந்தாலும் அவர்கள் ஒரு போதும் தங்களுக்கென்று வேலைக்காரர்கள் வைத்துக் கொள்வதில்லை. பெற்றோர் வீட்டையும் பிள்ளைகளையும் கவனித்துக் கொள்வர்.

• பாடசாலைகளில் ஆண்டு ஒன்றிலிருந்து ஆண்டு மூன்று வரை தேர்வுகள் இல்லை. கல்வியின் நோக்கம் செய்திகளை அறிந்து கொள்ளவும் ஒழுக்க முறைகளைக் கற்றுக்கொள்ளவும் தானே தவிர தேர்வு மூலம் அவர்களைத் தரப்படுத்துவதற்காக அல்ல என்கிறார்கள்.

• மக்கள் உணவகங்களில் எந்த வித்திலும் உணவை வீணாக்காமல் தமக்குத் தேவையான அளவில் மட்டும் சாப்பிடுகிறார்கள். உணவு வீணாவது என்பது அங்கு இல்லை.

• ஜப்பானில் சராசரியாக ஆண்டு ஒன்றில் தொடர் வண்டிகள் தாமதமாக வந்த நேரம் அதிகபட்சம் 7 விநாடிகள் மட்டுமே.




• சுகாதார ஊழியர், சுகாதாரப் பொறியியலாளர் என அழைக்கப்படுகிறார். அவரது மாதச் சம்பளம் அமெரிக்க டொலரில் 5000/= இலிருந்து 8000/= வரை எழுத்து, வாய்மொழித் தேர்வுக்குப் பின்னரே இத்தகைய ஊழியர் தெரிவு செய்யப்படுகிறார்.

• ஜப்பானில் மாணவர்கள் பாடசாலையில் சாப்பிட்ட பின் உடனேயே அங்கேயே பல் துலக்குகிறார்கள். சாப்பிடும் உணவு அவர்களுக்குச் சரியாக செரிமானம் அடைய வேண்டும் என்பதற்காகச் சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் ஒதுக்கப்படுகிறது.

தொகுப்பு:
திருமதி.ச.சந்திரராசா
பொன்னாலை.

# நீரெலி...நீர் எலியா?



•நீரெலி (Beaver) என்பது கொறிக்கும் உயிரின வகையில் அரை-நீர்வாழ் (Semi-Aquatic) உயிரினமாகும். நீரிலும் நிலத்திலுமாக வாழும் இவை, தென்னமெரிக்கா மற்றும் ஐரோப்பாவையும் வசிப்பிடமாகக் கொண்டவை.

•பனி ஊழிக்காலம் எனச் சொல்லப்படுகிற காலத்திலிருந்தே இவை உள்ளன. ஐஸ் ஏஜ் திரைப்படங்களில் வந்து அட்டகாசம் செய்யுமே, அந்தச் சுட்டி விலங்கு இதுதான்.

•Castoroides எனப்படும் மிகப்பெரிய நீரெலி (Giant Beaver) அந்தக் காலத்தில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இவை 200 கிலோ எடை வரைக்கும் இருந்தன. வால் மட்டுமே 7 அடி நீளம் இருக்கும். இப்போது, சுமார் 30 கிலோ வரை எடையுள்ள நீரெலிகள் உள்ளன.

•நீரெலிகளின் பற்கள் 15 சென்டிமீற்றர் நீளம் வளரும்.

•மருந்துகள் தயாரிக்கவும் வாசனைத் திரவியங்களுக்காகவும் நீரெலிகள் வேட்டையாடப்படுகின்றன.

•நீரெலிகளின் வால், தட்டையாக இருக்கும். அதன் வடிவத்தின் அடிப்படையில் என்கிற 'Beaver tail' தின்பண்டமும் விற்கப்படுகிறது.

• கனடாவின் நாணயங்களில் நீரெலிகள் இடம்பெற்றுள்ளன.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நெஞ்சில் ஓர் ஆலயம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன், ராமமூர்த்தி
பாடியவர்: பி.சுசீலா



சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே
சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே
சம்மதம் தானா
ஏன் ஏன் ஏன் என் உயிரே
ஏன் ஏன் ஏன் என் உயிரே
சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே
என்னொரு கைகளிலே
யார் யார் யார் நானா
எனை மறந்தாயா
ஏன் ஏன் ஏன் என் உயிரே
சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே
மங்கள மாலை குங்குமம் யாவும்
தந்ததெல்லாம் நீ தானே
மணமகளை திருமகளாய்
நினைத்ததெல்லாம் நீ தானே
என் மனதில் உன் மனதை
இணைத்ததும் நீ தானே
இறுதி வரை துணை இருப்பேன்
என்றதும் நீ தானே
இன்று சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே
தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை
தெருவினிலே விழலாமா
தெருவினிலே விழுந்தாலும்
வேறோர் கை தொடலாமா
ஒரு கொடியில் ஒரு முறை தான்
மலரும் மலரல்லவா
ஒரு மனதில் ஒரு முறை தான்
வளரும் உறவல்லவா
சொன்னது நீ தானா
சொல் சொல் சொல் என் உயிரே




தமிழ் சினிமாவில் தொடர்ந்து ஹிட் படங்களை கொடுத்து வருபவர் ஐசரி கணேஷ். இவர் தயாரிப்பில் தொடர்ந்து எல்.கே.ஜி, கோமாளி ஆகிய படங்கள் செம்ம வரவேற்பு பெற்றது. இதை தொடர்ந்து தற்போது பப்பி படம் திரைக்கு வந்துள்ளது. இதுவும் வரவேற்பு பெற்றதா? பார்ப்போம்.

வருண் வாழ்க்கையில் எப்படியாவது கன்னி கலையை வேண்டும் என்று இருக்கும் ஒரு கல்லூரி மாணவன். இவர் வீட்டு மாடியிலேயே சம்யுக்தா குடி வருகின்றார்.

அவரின் முதல் சந்திப்பிலேயே காதல் வர, அவருடன் ஜாலியாக ஊர் சுற்றி வருகின்றார், அப்போது இருவரும் தனிமையில் இருக்கும் போது எல்லை மீறுகின்றனர்.

இதன் பிறகு சம்யுக்தா கர்ப்பமா என்று டெஸ்ட் எடுக்கும் போது, முதல் முறை நெகட்டிவ் வர, அடுத்த டெஸ்டில் பாசிட்டிவ் வருகின்றது.

இதை தொடர்ந்து அந்த கர்ப்பத்தை யாருக்கும் தெரியாமல் சம்யுக்தா கலைக்கலாம் என்று முடிவெடுக்கும் போது வருண், சம்யுக்தாவிற்கும் இடையே வரும் மோதல், பிறகு என்ன ஆனது என்பதே மீதிக் கதை.



வருண் முதன் முறையாக ஹீரோவாக களம் இறங்கியிருக்கும் படம், நியூ எஸ்.ஜே.சூர்யா சாயல் அவர் நடிப்பில் தெரிகின்றது, அடல்ட் படம் என்பதாலேயே முதல் பாதி முழுவதும் இளைஞர்களை கவரும்படி ஒரு சில காட்சிகள் வருகின்றது.

அதோடு யோகிபாபு வருணுடைய நண்பராக வந்து வருணுடன் படம் முழுவதுமே பயணிக்கின்றார், அவரின் ஒன்லைன் காமெடி ஒரு சில இடங்களில் நன்றாக க்ளிக் ஆகியுள்ளது.

அதே நேரத்தில் அவருக்கு என்று ஒரு மாஸ் பாடல் கூட இருக்கின்றது. யோகிபாபுவை நம்பியே இன்னும் பல படங்கள் வரும் போல.



கல்லூரியிலேயே ஆபாசம் படம் பார்த்து முதல் காட்சியிலேயே ஹீரோ சஸ்பெண்ட் ஆகின்றார், ஆனால், அவர் 6 மாதம் சஸ்பெண்ட் ஆகுவது எல்லாம் ரொம்ப ஓவர்ங்க. படம் அடல்ட் காமெடி த்ரிஷா இல்லன்னா நயன்தாரா போல் இருக்கும் என்றதால் பலரும் எதிர்ப்பார்த்து வந்திருப்பார்கள்.

ஆனால், படம் விளையாட்டாக இருக்கும் வருண் ஒருநாள் தன் காதலியுடன் எல்லை மீறுவது, அதை தொடர்ந்து அவர் கர்ப்பம் ஆவது, அதே நேரத்தில் அவர் வளர்க்கும் பப்பி நாய் கர்ப்பம் ஆவது, தன் நாய் கர்ப்ப காலத்தில் படும் கஷ்டம் பார்த்து, தன் காதலியிடம் மனம் மாறுவது, இதற்கிடையில் யோகிபாபுவிற்கு என்று வரும் புட்பால் காட்சி என்று கதை போகின்ற திசையில் நாமும் செல்ல வேண்டியதாக உள்ளது. அந்த நாயுடன் வருணுக்கு இருக்கும் அன்பு கூட பெரிதாக கனெக்ட் ஆகவில்லை, படத்தின் மிகப்பெரிய பலம் தரணின் இசை, பின்னணி பாடல்கள் என கலக்கியுள்ளார், ஒளிப்பதிவும் படம் செம்ம ரிச்சாக காட்டியுள்ளது.


தரணின் பின்னணி இசை படத்தில் அங்கங்கு வரும் யோகிபாபு காமெடி காட்சிகள் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்காமல் அங்கும் இங்கும் சென்று திரைக்கதை கொஞ்சம் தள்ளாடுகின்றது.

மொத்தத்தில் ஆரம்பத்தில் அடல்ட் காமெடி என்று நினைத்து பார்த்தால் கதை வேறு திசைக்கு சென்று சிறிய எமோஷனலுடன் முடிகிறது. இளைஞர்கள் ஜாலியாக ஒரு விசிட் அடிக்கலாம்.



# கிறிஸ்டியன் கோல்மேன்...

## இவர்தானா உலகின் புதிய மின்னல் மனிதன்?



எதிர்பார்த்ததைப் போலவே, 9.76 நொடிகளில் எல்லையைக் கடந்து தங்கம் வென்று, "கோல்டுமேன்" ஆனார் கோல்மேன். 9.89 நொடியில் ஓடிக் கடந்து ஜஸ்டின் காட்லின் இரண்டாம் இடமும், 9.90 நொடியில் கடந்து டி கிராஸ் மூன்றாம் இடமும் பெற்றனர்.

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி, செப்டெம்பர் 27 முதல் ஒக்டோபர் 6 வரை கட்டார் தலைநகர் டோஹாவில் நடைபெற்றது. வளைகுடா நாடுகளில் முதல் முறையாக நடந்தது இந்தத் தொடர். அங்கு நிலவும் தட்பவெப்ப நிலை காரணமாக, மாலை மற்றும் இரவு நேரங்களிலேயே போட்டிகள் அனைத்தும் நடத்தப்பட்டன. ஆனால், இதையெல்லாம்விட பெரிய மாற்றம், இந்தத் தொடர் உசேன் போல்ட் இல்லாமல் நடந்தது.




100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் முடிசூடா மன்னனான உசைன் போல்ட், 2017 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற நிலையில், 15 ஆண்டுகள் கழித்து அவர் இல்லாத ஒரு உலக தடகள சம்பியன்ஷிப் நடைபெற்றது. போல்ட் இல்லாத உலக சம்பியன்ஷிப் எப்படி இருக்கும் என்ற கேள்வி ஒருபக்கம், போல்ட்டின் இடத்தை நிரப்பப்போவது யார் என்ற கேள்வி மறுபக்கம் எனப் பெரும் எதிர்பார்ப்போடுதான் தொடங்கியது இந்தத் தொடர்.

100 மீற்றர் பந்தயம், இருமுனைப் போட்டியாக இருக்கும் என்றுதான் வல்லுநர்கள் கணித்தார்கள். போல்ட்டின் கடைசி ரேஸில், அவரை முந்திய அந்த இரு அமெரிக்கர்களான ஜஸ்ட்டின் கேட்லின், கிறிஸ்டியன் கோல்மேன் மீதுதான் அதிக எதிர்பார்ப்பு இருந்தது. உலக சம்பியனும் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவருமான 37 வயதான ஜஸ்டின் கேட்லின்தான் வெல்வார் எனப் பலர் கணித்தாலும் கோல்மேன் சர்ப்ரைஸ் கொடுக்கக் கூடும் என்கிற ஆரூடங்களும் தடகள மைதானத்தில் பறந்தன.

ரியோ ஒலிம்பிக்கில் போல்ட், கேட்லினுக்கு அடுத்து வந்து வெண்கலம் வென்ற ஆண்ட்ரே டி கிராஸ் மீது சிலர் நம்பிக்கை வைத்திருந்தாலும் இது கேட்லின் - கோல்மேன் எனும் இரு அமெரிக்கர்களுக்கு இடையிலான போட்டியாகவே பார்க்கப்பட்டது.

எதிர்பார்த்ததைப் போலவே, 9.76 நொடிகளில் எல்லையைக் கடந்து தங்கம் வென்று, "கோல்டுமேன்" ஆனார் கோல்மேன். 9.89 நொடியில் இலக்கை அடைந்த ஜஸ்டின் காட்லின் இரண்டாம் இடத்தையும் 9.90 நொடியில் வந்த டி கிராஸ் மூன்றாம் இடமும் பிடித்தனர். போல்ட்டின் ஓய்வுக்குப் பிறகு, ஜமைக்காவின் ஒரே நம்பிக்கையாகப் பார்க்கப்பட்ட யோஹன் பிளேக், ஐந்தாம் இடமே பிடித்தார்.

வெற்றிக்கோட்டைத் தொடும்போது மிகப்பெரிய ஆரவாரத்துடன் முடித்த கோல்மேன், "வானமே எனது எல்லை... நான் இன்னும் என்னை மெருகேற்ற வேண்டும்" என அடக்கத்துடன் சொன்னார். இவர், 2017 உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் மற்றும் 4x100 தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். வரலாற்றில் "ஆறாவது வேகமான மனிதன்" என்று தடம் பதித்திருக்கும் கோல்மேன்தான் அடுத்த உசேன் போல்ட் என்று விளையாட்டு ஆர்வலர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வாரா? என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கும்.

இந்த வெற்றி, சர்ச்சைகளை ஏற்படுத்தாமலும் இல்லை. இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்பே, கோல்மேன் பங்கேற்பு குறித்து எதிர்ப்புகள் எழுந்தன. காரணம், அவர் ஒருவருடத்தில் மூன்று முறை ஊக்கமருந்து உட்கொண்டதை அறியும் பரிசோதனைக்குத் தன்னை உட்படுத்தாமல் தவிர்த்துள்ளார்.

இதைப் பற்றி விசாரணை நடந்த போது, "அவர் முதல் முறை மறுத்தது இந்த ஓராண்டு இடைவெளியில் இல்லை. அதற்கு முன்பே அந்த முதல் மறுப்பு வந்துவிட்டது. ஓராண்டில் மூன்றுமுறை மறுத்தால்தான் பிரச்சினை" என்று சொல்லி கோல்மேனுக்கு அனுமதி வழங்கினார்கள். ஆனாலும், விமர்சகர்கள் அவரை விடுவதாக இல்லை.

இதுகுறித்து விளக்கம் அளித்த கோல்மேன், "என்னை யாரென்று தெரியாதவர்கள்கூட என்னை விமர்சிப்பது மனதை உலுக்குகிறது. உண்மையை விளக்குவதற்கு, நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை" என்றார். சில முன்னணி வீரர்களும் அவரை விமர்சித்திருப்பது குறிப்பிடத்தக்கது.




200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில், அமெரிக்காவின் நோவா லைல்ஸ் தங்கம் வென்றார். ஆண்ட்ரே டி கிராஸ் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். யோஹன் பிளேக் உட்பட, ஜமைக்கா சார்பாகப் பங்கேற்ற 3 வீரர்களில், ஒருவர்கூட இறுதிப் போட்டிக்கு முன்னேறவில்லை. பல வருடங்களாக ஜமைக்காவிடம் இருந்த 100 மீற்றர், 200 மீற்றர் செங்கோல், தற்போது அமெரிக்காவின் கைக்குச் சென்றுள்ளது.

ஆண்கள் பிரிவில் 100 மீற்றர், 200 மீற்றர் பிரிவில் ஜமைக்காவின் ஆளுமை முடிந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றினாலும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் பிரிவில், ஜமைக்காவைச் சேர்ந்த செல்லி அன் பிரேஸர் ப்ரிக் நான்காவது முறையாக சம்பியன்ஷிப் வென்றுள்ளார்.

இந்த உலக சம்பியன்ஷிப் தொடரில், மொத்தம் இரண்டு உலக சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கான 400 மீற்றர் தடை ஓட்டத்தில், அமெரிக்காவின் தலிலா முகமது 52.16 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து, உலக சாதனையோடு தங்கம் வென்றார். இதற்கு முந்தைய சாதனையை (52.20 விநாடிகள்), கடந்த ஜூலை மாதம் இவரேதான் நிகழ்த்தியிருந்தார். அதேபோல், இப்போது தடகளத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 4X400 மீற்றர் கலப்புத் தொடர் ஓட்டத்தில், அமெரிக்க அணி உலக சாதனையோடு (3:09.34 நிமிடங்கள்) தங்கம் வென்றது.

இந்தியாவுக்கு இந்தத் தொடரில் நடந்த ஒரே மகிழ்ச்சியான விடயம், 4X400 மீற்றர் கலப்புத் தொடர் ஓட்ட அணியின் செயற்பாடு. முன்னணி வீரர்களான ஹிமாதாஸ், ஆரோக்கிய ராஜீவ், தருண் அய்யாசாமி போன்றவர்கள் இல்லாத நிலையிலும் சிறப்பாகச் செயற்பட்டு, தங்களின் சிறப்பான டைமிங்கைப் பதிவுசெய்தது (3:15.77) இந்திய அணி. இதன்மூலம், டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதிபெற்று அசத்தியுள்ளது. மற்றப்படி வேறு யாரும் சொல்லிக்கொள்ளும்படியாகச் செயற்படவில்லை.

இந்திய தடகளத்தின் ஒரே பதக்க நம்பிக்கையான நீரஜ் சோப்ரா, சில மாதங்களாக காயத்தில் அவதிப்பட்டு வருவதால் இந்தத் தொடரில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது.

14 தங்கம் உட்பட, 29 பதக்கங்கள் பெற்று அமெரிக்கா முதலிடம் பிடித்தது. கென்யா (5 தங்கம்), ஜமைக்கா (3 தங்கம்) நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன.

# அப்துல்கலாம்



முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் வாழ்வில் ஒரு உண்மைச் சம்பவத்தை இன்று தற்செயலாக தினகரன் நாளிதழில் படிக்க நேரிட்டது...

இதோ... அப்துல் கலாமின் வார்த்தைகளில் அவரது இளமைக்கால வாழ்க்கை :

"நான் சிறுவனாக இருக்கும் போது ... ஒரு நாள் இரவு நேரம்... வெகு நேர வேலைக்கு பின்னர் என் தாய் இரவு சிற்றுண்டி செய்யத் தொடங்கினார்...

என் தாயும் எங்கள் குடும்பத்தை சமாளிக்க வேலைக்கு செல்வது வழக்கம்...

சமைத்த பின் கருகிய ரொட்டி ஒன்றை என் கண் முன். என் தந்தைக்கு பரிமாறினார் என் தாய்... ஆனால் என் தந்தையோ அதை சிறிதும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டார்....

'இன்றைய பொழுது பள்ளியில் எப்படிப் போனது' என்று என் தந்தை என்னிடம் கேட்டார்.

நான் அன்று என்ன பதில் சொன்னேன் என்று தெரியவில்லை...

என் தந்தையிடம் கருகிய ரொட்டியை பரிமாறியதற்கு வருத்தம் தெரிவித்தார் என் தாய்...

ஆனால் அதற்கு என் தந்தையோ... "எனக்கு கருகிய ரொட்டிதான் ரொம்ப பிடிக்கும் " என்று பதில் சொன்னதை என்னால் இன்றும் மறக்க முடியாது...

சாப்பிட்டு முடித்த சற்று நேரத்துக்குப் பின்... நான் மெல்ல என் தந்தை அருகில் சென்று இரவு வணக்கம் சொல்லிவிட்டு. அவரிடம் தயக்கத்துடன் கேட்டேன்.

"அப்பா... உங்களுக்கு உண்மையாகவே கருகிய ரொட்டி ரொம்பப் பிடிக்குமா...?"

சற்று நேரம் அமைதியாக இருந்த என் தந்தை. என்னை இறுக்கமாக அணைத்துக் கொண்டு சொன்னார்...

"மகனே... உங்க அம்மா தினமும் வேலைக்கும் சென்று கொண்டு. நமக்கும் பணிவிடை செய்கிறார்...

களைத்துப் போய் இருப்பார்...

ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தப் போவதில்லை...

ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப் படுத்தும்...

நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல... ஆனால் அதற்கு முயற்சிக்கிறேன்...

இவ்வளவு வருடங்களில் நான் கற்றுக்கொண்டது...

நடப்பது எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு சந்தோஷமான மனநிலைக்கு நாம் மாறுவதே..."

● அப்துல் கலாமின் இந்த அனுபவத்தைப் படித்த போது அவரது அப்பா மீது, அளவில்லாத மரியாதை எழுந்தது...

அது இன்று முழுவதும் என்னைத் தொடர்ந்து வந்தது...

ஆம்...

"ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்தப் போவதில்லை...

ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாக காயப்படுத்தும்..."

● இந்த தத்துவத்தை எண்ணியபடியே இன்று இரவு சாப்பிட அமர்ந்தபோது...

எனக்கு பரிமாறப்பட்ட உணவு கொஞ்சம் ஆறித்தான் போய் இருந்தது...

ஆனால் என் உணர்வுகள் ரொம்பவுமே மாறிப் போய் இருந்தது...

மனைவியின் உணவை இனி ஒருபோதும் குறை சொல்லக் கூடாது என்ற திருந்திய மன உணர்வோடு. இருந்ததை இனிதே உண்டு முடித்தேன்...

● எதிர்காலத்தில் நம் குழந்தைகள் கலாமின் கொள்கைகளை கடைப்பிடிக்கட்டும்...

இப்போது நாம் கொஞ்சம் அவரது அப்பாவின் கொள்கைகளை கடைப்பிடிக்கலாமே...!!!

● நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல...

ஆனால் அதற்கு முயற்சிக்கிறேன்... 3 விடயங்கள் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை...

நேரம். இறப்பு, வாடிக்கையாளர்கள்

● மூன்று விடயங்கள் சகோதர சகோதரிகளையும் விரோதியாக்கும்...

நகை, பணம், சொத்து

● மூன்று விடயங்கள் யாராலும் திருடமுடியாது...

புத்தி , கல்வி, நற்பண்புகள்

● மூன்று விடயங்கள் ஞாபகம் வைத்திருப்பது அவசியம்...

உண்மை, கடமை, இறப்பு

● மூன்று விடயங்கள் வெளிவந்து திரும்புவதில்லை...

வில்லிலிருந்து அம்பு, வாயிலிருந்து சொல், உடலிலிருந்து உயிர்

● மூன்று பொருள்கள் வாழ்க்கையில் ஒரு முறை தான் கிடைக்கும்...

தாய், தந்தை, இளமை

● இந்த மூன்று பேர்களுக்கும் மரியாதை கொடு...

தாய், தந்தை, குரு

● நம்மை உயர்த்தும் ஏழு விடயங்கள்

ஏழ்மையிலும் நேர்மை, கோபத்திலும் பொறுமை, தோல்வியிலும் விடாமுயற்சி, வறுமையிலும் உதவி செய்யும் மனம், துன்பத்திலும் துணிவு, செல்வத்திலும் எளிமை, பதவியிலும் பணிவு

● வழிகாட்டும் ஏழு விடயங்கள்

சிந்தித்து பேசவேண்டும், உண்மையே பேச வேண்டும், அன்பாக பேசவேண்டும், மெதுவாக பேசவேண்டும், சமயம் அறிந்து பேசவேண்டும், இனிமையாக பேசவேண்டும், பேசாதிருக்க பழக வேண்டும்

● நல்வாழ்வுக்கான ஏழு விடயங்கள்

மகிழ்ச்சியாக இருக்க பழகுங்கள், பரிசுத்தமாக சிரிக்ககற்று கொள்ளுங்கள், பிறருக்கு உதவுங்கள், யாரையும் வெறுக்காதீர்கள், சுறுசுறுப்பாக இருங் கள், தினமும் உற்சாகமாக வரவேற்கத் தயாராகுங்கள், மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள்.

● கவனிக்க ஏழு விடயங்கள்

கவனி உன் வார்த்தைகளை, கவனி உன் செயல்களை, கவனி உன் எண்ணங்களை, கவனி உன் நடத்தையை, கவனி உன் இதயத்தை, கவனி உன் முதுகை, கவனி உன் வாழ்க்கையை...

சும்மா ஏதேனும் படத்தை பகிர்ந்தா நல்லது நடக்கும்னு நம்பி பகிரும் நண்பர்களே இப்பதிவை நம்பி பகிர்ந்தால் கண்டிப்பாக மேற்சொன்ன நல்லது நடக்கும். இனி உங்கள் கையில்.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1856




### வாசுகி





### மிதுசன்




### சதுர்னவி




### பரிமிளன்




### டஸ்மிக்கா




### லயரொக்ஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 202

## ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஆரோக்கிய விதிமுறைகள்





நாம் சுகதேகி எனக் கருதிக் கொள்ளும் ஒவ்வொருவரும் சில அடிப்படை ஆரோக்கிய விதிகளை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்கள் தொடர்ந்தும் ஆரோக்கியமாக வரமுடியும். அந்த அடிப்படை ஆரோக்கிய வழிமுறைகளாவன.



1) எங்கள் குருதி அமுக்கத்தை அளந்து பார்த்துக் கொள்ள வேண்டும். அது 130/80 என்ற மட்டத்திற்கு மேற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

2) எங்கள் குருதி குளுக்கோசின் அளவை பரிசோதித்துப் பார்த்துக் கொள்வோம். எட்டுமணி நேரம் உணவு. தேநீர் உட்கொள்ளாது சோதித்துப் பார்க்கப்படும். குருதி குளுக்கோசின் அளவு 110 mg/dl இற்கு மேற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

3) பால், முட்டை என்பன ஆபத்தான உணவுகளல்ல. ஆரோக்கியமான நிறை உணவுகள் என்பதை மனதில் நிறுத்துவோம்.

4) எங்கள்உடல்நிறையை அளந்து பார்த்துக் கொள்வோம். எங்களுக்கு இருக்க வேண்டிய ஆரோக்கியமான நிறை எவ்வளவு என்பதை அறிந்து வைத்திருப்போம். அது எமது உயரத்தில் தங்கி இருக்கிறது.

5) தினமும் எங்களுடைய நாளாந்த வேலைகளுக்கு மேலதிகமாக 30 நிமிட நேரத்தை உடற்பயிற்சிக்கு ஒதுக்கிக் கொள்வோம்.

6) மூன்று வேளை உணவுடனும் ஏதாவது இலைவகை மரக்கறிகளை சேர்த்துக் கொள்வோம். பழங்களை உணவு உண்பதற்கு பத்து நிமிடங்



கள் முன்னதாக உண்ணுவோம். இது நாங்கள் உண்ணும் உணவின் அளவை கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும்.



7) தினமும் குறிப்பிட்ட அளவு நேரத்தை மகிழ்வாகவும் ஓய்வாகவும் இருப்பதற்கு ஒதுக்கிக் கொள்வோம். மனதிற்கு மகிழ்வான விடயங்களை பேசுவதில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வோம். மன்னிக்க பழகுவோம்.

8) இயற்கையான உணவுகளை சமைத்து உண்பதில் அக்கறை செலுத்துவோம். செயற்கையான சத்துமா. குளிசைகள். ரொனிக் வகைகள் போன்றவற்றில்தான் உண்மையான சத்து இருக்கிறது என்ற மாயையிலிருந்து விடுபடுவோம். போதுமான அளவு தூயநீர் அருந்துவோம்.

9) வீட்டுச்சுற்றாடல் சுத்தமாகவும், காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம் உறங்கும்பொழுது தூய காற்று உள்நுழைவதற்காக யன்னல்களை திறந்து



வைத்து உறங்குவோம்.

10) வீட்டிலே குளிர்ச்சியான மரங்களை நாட்டி வளர்ப்போம். இவை எமக்கு ஒட்சிசனையும், ஈரலிப்பையும் குளிர்ச்சியையும் வளங்கும்.

11) எமது உடலில் ஏதாவது அசாதாரண அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலையில் காட்டி ஆலோசனை பெறுவோம்.

12) ஆரோக்கிய உணவு முறை என்பதன் அர்த்தத்தை புரிந்து அதனை நடைமுறைப் படுத்த முயலுவோம். உணவுக் கோப்பையின் அரைப் பங்கு மரக்கறிவகைகளாகவும், கால்பங்கு மாப்பொருளாகவும் (சோறு, இடியப்பம், பிட்டு) கால்பங்கு புரதமாகவும் (முட்டை, பருப்பு, மீன், இறைச்சி, கௌபி, பயறு, றால்) இருப்பதை உறுதி செய்து கொள்வோம்.

13) இரசாயனம் சேர்க்காத மருந்து அடிக்காத இயற்கையான உணவுகளுக்கு முன்னுரிமை கொடுப்போம்.

உதாரணம் - முருங்கை இலை, மீன், முட்டை, பால், வாழைப்பூ, வாழைக்காய், முருங்கைக்காய், இயற்கையான கீரைவகைகள், கொய்யா, விளாம்பழம், தேசிக்காய், மரவள்ளி, வற்றாளை, பயறு, கௌபி, கச்சான், கடலை, தயிர், மோர், போன்றவை ஆகும்.

14) சரியான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை மட்டும் மக்களிடையே பரப்புவோம்.

15) புகைத்தல், குடிவகை பாவித்தல், போதைப்பொருள் பாவனை என்பவற்றை முற்றாக தவிர்ப்போம்.





பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்